விலை: 30.00
பக்கங்கள் : இருபத்துநான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii


E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 தை 09 புதன்கிழமை (23.01.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 035

# முல்லையில் அமைக்கப்படும் விகாரை சட்டவிரோதமானது



## தகவல் அறியும் உரிமைச்சட்டம் மூலம் உண்மை அம்பலமாகியது

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு நீராவியடி பிள்ளையார் ஆலயத்தை அபகரித்து அமைக்கப்பட்டு வரும் பௌத்த விகாரை சட்டவிரோதமானது என்பது அம்பலமாகியுள்ளது. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பெறப்பட்ட தகவல்களில் எந்தவிதமான அனுமதியும் இல்லாமல் சட்டவிரோதமான முறையில் விகாரை அமைக்கப்படுவது அம்பலமாகியுள்ளது. (23ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.க அரசு பழிவாங்காது

### தலதா அத்துகோரள

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம், எக்காரணம் கொண்டும் அரசியல் பழிவாங்கலில் ஈடுபடாது என நீதி மற்றும் சிறைச்சாலைகள் புனரமைப்பு அமைச்சர். தலதா அத்துகோரள 23☛

## சந்தர்ப்பத்தை தவறவிடக்கூடாது


### நளின் பண்டார

(கொழும்பு)

புதிய அரசியலமைப்பை தயாரிப்பதற்கு எமக்கு கிடைத்த சிறப்பான ஒரு சந்தர்ப்பமாகவே இப்போதைய சந்தர்ப்பத்தை நாம் கருதுகிறோம் என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரான நளின் பண்டார 23☛

## வலி. வடக்கில் ஒரு பகுதி காணி விடுவிப்பு

## வீடொன்றின் சுவற்றில் சிங்கள மன்னர்களின் வரலாற்று படங்களும், சிற்பங்களும்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், வலி.வடக்கில் 45 ஏக்கர் காணி இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் இருந்து விடுவிக்கப்பட்டது. தையிட்டி தெற்கில் 30 ஏக்கர் காணியும், ஒட்டகபுலத்தில் 15 ஏக்கர் காணியும் விடுவிக்கப்பட்டது.

விடுவிக்கப்பட்ட காணியில் உள்ள வீடு ஒன்றை அலுவலகமாக மாற்றியுள்ளதுடன் சுவரில் சிங்கள மன்னர்களின் வர 23☛

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 34 ஆவது பொதுப்பட்டமளிப்பு விழா





03☛

## ஹெரோயின் வைத்திருந்த 22 வயதுக்குட்பட்ட நால்வருக்கு

### எச்சரிக்கையுடன் சிறை - யாழ்.நீதிமன்றம் தீர்ப்பு

(யாழ்ப்பாணம்)

ஹெரோயின்போதைப்பொருளை உடமையில் வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் வெவ்வேறு சம்பவங்களில் கைது செய்யப்பட்ட 22 வயதுக்குட்பட்ட நால்வருக்கு கடும் எச்சரிக்கையுடன் தண்டனை வழங்கித் தீர்ப்பளித்தார் யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதவான் அந்தோனி சாமி பீற்றர் போல்.

நால்வரும் தம்மீதான குற்றத்தை ஏற்றுக் கொண்டுள்ளனர். அதனால் குற்றவாளிகள் நால்வருக்கும் 3 மாதங்கள் கடூழிய 24☛

## தேர்தலை நடத்தாதிருப்பது ஐ.தே.கவின் தந்திரம்

### அநுர பிரியதர்ஷன யாப்பா



(கொழும்பு)

மாகாண சபைத் தேர்தலை நடத்தாதிருக்கும் தந்திரச் செயலிலேயே ஐக்கிய தேசிய கட்சி ஈடுபட்டு வருவதாக எதிர்க்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் அநுர 23☛

## மீட்கப்பட்ட குண்டுகள்

### வெடிக்க வைத்து அழிப்பு

(யாழ்ப்பாணம்)

விவசாய தேவைக்காக வடமராட்சி கிழக்கு அம்பன் பகுதியில் கடந்த 20 ஆம் திகதியன்று நீர் பெறுவதற்கு JCP மூலம் கிணறு வெட்டியபோது பல மோட் 23☛

## எதிர்க்கட்சி நிரந்தரமில்லை

### மகிந்த ராஜபக்ஷ

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் உள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகமானது எனக்கு நிரந்தரமில்லை. ஆகையினால் அதை 23☛

## 8 இராணுவம் மீது துப்பாக்கி பிரயோகம்

## முன்னாள் புலி உறுப்பினர்கள் இருவருக்கு 25 வருட கடூழிய சிறைத்தண்டனை

(கொழும்பு)

இலங்கை இராணுவப்படையின் கஜபா றெஜிமென்ட் படைப்பிரிவின் கட்டளை அதிகாரி கேர்ணல் ஜயந்த சுரவீர உள்ளிட்ட 8 இராணுவத்தினர் மீது வில்பத்து வனப்பகுதில் துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினர்கள் இருவருக்கு வடமத்திய மாகாண நீதிமன்றம் 25 வருட கடூழிய சிறைத் 24☛

**வடக்குமாகாண அலுவலக உதவியாளர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சைக்கான மாதிரிவினாத் தாள் உள்ளே...**

## மின்சாரம் தாக்கியதில் 4 வயது சிறுவன் பலி

### மாந்தை கிழக்கில் பரிதாபம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு நட்டாங்கண்டல் பகுதியில் நேற்று முன்தினம் மின்சாரம் தாக்கியதில் நான்கு வயது சிறுவன் ஒருவன் உயிரிழந்துள்ளார். முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பிரதேசத்துக் 24☛

## தொழில் வாய்ப்புக்களில் தமிழர்கள் புறக்கணிப்பு

### பாராளுமன்றில் சிறீதரன் எம்.பி குற்றச்சாட்டு

(கொழும்பு)

தொழில் வாய்ப்புக்கான பரீட்சைகளில் தமிழர்களுக்கு அநீதி இழைக்கப்படுவதாகவும், வேலைவாய்ப்பு விடயங்களில் அவர்கள் திட்டமிட்டுப் புறக்கணிக்கப்பட்டு வருவதாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரன் சபையில் குற்றம் சுமத்தினார். 24☛

# ஞானசார தேரர் விரைவில் விடுதலையாவார்

## பொதுபல சேனா நம்பிக்கை

(கொழும்பு)

இலங்கையின் சுதந்திர தினமான பெப்ரவரி 4ஆம் திகதி கலகொட அத்தே ஞானசார தேரரை ஜனாதிபதி விடுதலை செய்வாரென பொதுபல சேனா அமைப்பின் தேசிய ஒருங்கிணைப்பாளர் விதாரனந்தே தேரர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

ராஜகிரியவில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர், கலகொட அத்தே ஞானசார தேரர் சிறைச்சாலைக்கு சென்று 6 மாதங்கள் ஆகவுள்ளன. இது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாகவே எம்மால் கருதப்படுகிறது.

இது முற்றிலும் திட்டமிடப்பட்ட, சிலரின் தேவைக்கிணங்க மேற்கொள்ளப்பட்ட ஒன்றாகவே காணப்படுகிறது. அவரை விடுதலை செய்வதற்கான அனைத்து செயற்பாடுகளையும் நாம் மேற்கொண்டு வருகிறோம்.

எம்மால் தாக்கல் செய்யப்பட்ட மேன்முறையீட்டு மனுக்கள் அனைத்தும் நிராகரிக்கப்பட்டுள்ளன. இந்நிலையில், ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழ் அவரை விடுவிப்பதற்கான நடவடிக்கைகளை நாம் மேற்கொண்டு வருகிறோம்.

நாம் இதுதொடர்பில் ஜனாதிபதியுடன் நேற்று கலந்தாலோசித்திருந்தோம். இதன்போது, அவருக்கு சில மனுக்களையும் நாம் கையளித்திருந்தோம்.

பெப்வரி 4 ஆம் திகதி கலகொட அத்தே ஞானசார தேரரை விடுதலை செய்யவேண்டும் என நாம் கோரியமையை ஜனாதிபதியும் கேட்டுக்கொண்டார். எனவே, இதுகுறித்து அவர் நடவடிக்கைகளை மேற்கொள்வார் என்று நாம் உறுதியாக நம்புகிறோம்.

நாட்டுக்காக கதைத்தமையாலேயே, இன்று ஞானசார தேரர் சிறையில் இருக்கிறார். எனவே, இதுதொடர்பில் ஜனாதிபதி சிந்தித்து செயற்பட வேண்டும் என்பதுதான் எமது நிலைப்பாடாகும்.

ஞானசார தேரர் அரசியல் கைதியின் நிலைமையிலேயே இன்று காணப்படுகிறார். அவரை வைத்து பலர் இன்று அரசியல் நடத்துகிறார்கள். அரச சார்பற்ற நிறுவனங்கள் உள்ளிட்ட சூழ்ச்சியாலேயே அவர் சிறைக்கு சென்றுள்ளார். எனவே, இதனை வைத்து அரசியல் நடத்த வேண்டாம் என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (ம-3)

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
நாடுங்கள்
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com
(அ-5224)

**தவறிவிட்டது**

துரையர் நடராஜா என்பவரது சாரதி அனுமதிப்பத்திரம் (DL495660) கடந்த 18.01.2019 வெள்ளிக்கிழமை தெல்லிப்பழை – அளவெட்டி பிரதேசத்தில் தவறியுள்ளது. கண்டெடுத்தவர்கள் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.

077 810 1529

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



**திரு.வேலும்மயிலும் றமணன்**

எமது பாடசாலையின் ஆசிரியர் திரு.வேலும்மயிலும் றமணன் அவர்கள் நேற்று (22.01.2019) யாழ் பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற 34-வது பட்டமளிப்பு விழாவின் போது பட்டப்பின் கல்வி டிப்ளோமாவில் மீ உயர் திறமைச் சித்தி (Merit சித்தி) பெற்று பெருமை சேர்த்ததை எண்ணி கூடி நின்று வாழ்த்துகின்றோம்.

Congratulations

வாழ்த்துவோர்: ஆசிரியர் நலன்புரிச் சங்கம், கிளி/இராமநாதபுரம் மேற்கு, அ.த.க பாடசாலை.

(அ-5230)

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



**திருமதி அன்பரசி அருட்செல்வன்**

(JP (whole Island), BA (Hons), MA (Distinction), (M.Phil)

யாழ். பல்கலைக்கழகத்தில் நேற்று இடம்பெற்ற பட்டமளிப்பு விழாவில் முதுதத்துவமாணி (M.Phil in History) பட்டம் பெற்ற திருமதி அன்பரசி அருட்செல்வன் அவர்களை பாராட்டி வாழ்த்துகின்றோம்.

Congratulations

வாழ்த்துவோர்: மருமக்கள் கோபிராஜ், கபில்ராஜ், குணராஜ் (யாழ் பல்கலைக்கழக மாணவர்கள்)

(அ-5240)

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

**கிளி/அக்கராயன் மகா வித்தியாலயம்.**



சு.திகழினி
2A,B (கலைப்பிரிவு மாவட்ட நிலை 1)



கே.சாலினி
2A,B (வணிகப்பிரிவு மாவட்ட நிலை 4)



ந.நிரோஜினி
3A (வணிகப்பிரிவு மாவட்ட நிலை 5)

Best Wishes

2018-ம் ஆண்டு க.பொ.த உயர்தர பரீட்சையில் சிறந்த பெறுபேற்றைப் பெற்று பாடசாலைச் சமூகத்திற்கு பெருமை சேர்த்த மாணவர்களை பாராட்டி மகிழ்கின்றோம். அவர்கள் மேன் மேலும் பல சாதனைகளை நிலைநாட்ட இறைவனை வேண்டுகின்றோம்.

பாராட்டுவோர்: பாடசாலைச் சமூகம், கிளி/ அக்கராயன் மகா வித்தியாலயம்.

# வட மாகாண சபை முதலமைச்சர் அமைச்சு அலுவலகத்துக்கு ஆளுநர் திடீர் விஜயம்



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவன் வடக்கு மாகாணசபை முதலமைச்சர் அமைச்சு அலுவகைதிற்கு திடீர் கண்காணிப்பு விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார். குறித்த விஜயம் நேற்று நண்பகல் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

வடக்கு மாகாண சபையின் ஆயுட்காலம் முடிவடைந்துள்ள நிலையில் மாகாண சபையின் அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் செயற்பாடுகள் அனைத்தும் ஆளுநருடைய நேரடிக் கண்காணிப்பின் கீழ் செயற்பட்டு வருகின்றது.

இந் நிலையில் வடக்கு மாகாண சபையின் முதலமைச்சரின் அமைச்சு அலுவலகத்திற்கு கண்காணிப்பு விஜயம் மேற்கொண்ட ஆளுநர் பணிக்குழாமினருடன் சுமூகமான கலந்துரையாடலில் ஈடுபட்டதோடு தேவையான ஆலோசனைகளையும் வழங்கியிருந்தார்.

அத்தோடு இன்று புதன்கிழமை ஆளுநர் செயலகத்தில் இடம்பெறவிருந்த பொது மக்கள் தினத்தினை முதலமைச்சர் அமைச்சு அலுவலகத்தில் நடத்த ஏற்பாடு செய்யுமாறு உரிய அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

# எதிர்க்கட்சி உறுப்பினர்களை இலக்கு வைத்தே விசாரணைகள்

## மகிந்தானந்த அளுத்கமகே தெரிவிப்பு

(கொழும்பு)



சுயாதீன ஆணைக்குழுக்கள் ஆளும், எதிர்க்கட்சி என்று பார்க்காமல் செயற்பட வேண்டும். ஆனால் தற்போது இருக்கும் சுயாதீன ஆணைக்குழுக்கள் எதிர்க்கட்சியினருக்கு எதிரான முறைப்பாடுகளை மாத்திரமே விசாரணைக்கு எடுத்துக்கொள்கின்றன என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற விசாரணை ஆணைக்குழுக்கள் (திருத்தச்) சட்டமூலம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து குறிப்பிடுகையில்,

லஞ்ச ஊழல் ஆணைக்குழு எதிர்க்கட்சியினருக்கு எதிராக சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாடுகளை மாத்திரம் விசாரணை செய்து வழக்கு தொடுக்கின்றது. அரசாங்கத்தில் இருக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக எந்த விசாரணைகளையும் மேற்கொள்ளவும் இல்லை. வழக்கு தொடுக்கவும் இல்லை. சுயாதீன ஆணைக்குழு என்று தெரிவிக்கின்றபோதும் எதிர்க்கட்சியினரை அடக்குவதற்கே இந்த ஆணைக்குழுக்கள் அமைந்துள்ளதாகவே தெரிகின்றது. (ம-3)

**கார், வான் குத்தகைக்கு தேவை**

கார்கள், வான்கள் மாதாந்த அடிப்படையில் நீண்ட கால குத்தகைக்கு தேவை.

071 093 8967

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

# யாழ்.பல்கலையின் 34 ஆவது பொதுப்பட்டமளிப்பு விழா




(படங்கள்: ஐ.சிவசாந்தன்)

யாழ். பல்கலைக்கழகத்தின் 34 ஆவது பொதுப்பட்டமளிப்பு விழா நேற்று யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெற்றது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் எஸ்.பத்மநாதன் தலைமையில் ஆரம்பமாகிய பட்டமளிப்பு விழாவில் யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் இ.விக்னேஸ்வரன் அவர்களும் இணைந்து பட்டங்களையும், தகைமைச் சான்றிதழ்களையும், பரிசில்களையும் வழங்கினர்.

இப் பட்டமளிப்பு விழாவில் கலைப்பீடம் (பகுதி), பிரயோக விஞ்ஞான பீடம், வியாபார கற்கைகள் பீடம், முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிகபீடம் (பகுதி), விவசாய பீடம், பொறியியல் பீடம், உயர் பட்டப் படிப்புகள் பீடம் மற்றும் சித்த மருத்துவப் பிரிவைச் சேர்ந்த 459 பட்டதாரிகளும், 156 டிப்ளோமாதாரிகளுமாக மொத்தம் 615 பட்டதாரிகள் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

புதிதாக ஸ்தாபிக்கப்பட்ட பொறியியல் பீடத்தின் 48 பட்டதாரிகள் பொறியியல் விஞ்ஞானமாணிப் பட்டம் பெற்று 2 ஆம் அணியாக வெளியேறுகின்றார்கள். இவற்றுடன் இப்பட்டமளிப்பு விழாவில் எல்லாப்பட்ட கற்கை நெறிகளுக்குமாக 13 தங்கப்பதக்கங்களும், 4 பரிசில்களும் வழங்கப்பட்டன. (இ-9-101)

## சிறந்த நடுவராக குமார் தர்மசேன தெரிவு



2018ஆம் ஆண்டிற்கான ஐ.சி.சி-யின் சிறந்த நடுவர் விருதினை இலங்கையின் குமார் தர்மசேனா 2-வது முறையாக வென்றுள்ளார்.

சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் 2018ஆம் ஆண்டுக்கான விருதுகள் பட்டியலை அறிவித்துள்ளது. இதில் இலங்கையின் குமார் தர்மசேனா, ஐ.சி.சி 2018ஆம் ஆண்டுக்கான சிறந்த நடுவர் விருதினை பெற்றுள்ளார்.

# ஹாட்ரிக் விருது பெற்று புதிய வரலாறு படைத்த ஹோலி

இந்திய கிரிக்கெட் அணித்தலைவர் விராட் ஹோலி ஐ.சி.சி-யின் மூன்று விருதுகளுக்கு தெரிவாகி புதிய வரலாற்று சாதனை படைத்துள்ளார்.

2018ஆம் ஆண்டுக்கான ஐ.சி.சி விருதுகள் நேற்று அறிவிக்கப்பட்டன. இதில் சிறந்த கிரிக்கெட் வீரர், டெஸ்ட் மற்றும் ஒருநாள் வீரர் ஆகிய மூன்று விருதுகளுக்கும் இந்திய கிரிக்கெட் அணித்தலைவர் விராட் ஹோலி தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இதனை ஐ.சி.சி அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது. இதுதொடர்பாக ஐ.சி.சி வெளியிட்ட அறிவிப்பில், 'ஐ.சி.சி-யின் 3 விருதுகள் மட்டுமல்லாமல், ஐ.சி.சி டெஸ்ட் மற்றும் ஒரு நாள் அணியின் கேப்டனாகவும் விராட் ஹோலி அறிவிக்கப்பட்டுள்ளார்' என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் ஓர் ஆண்டில் ஐ.சி.சி-யின் 3 விருதுகளையும் பெற்ற முதல் துடுப்பாட்ட வீரர் என்ற புதிய வரலாற்றை ஹோலி படைத்துள்ளார். அத்துடன் ஐ.சி.சி சர் கார்பீல்ட் சோபர்ஸ் விருதைத் தொடர்ந்து 2வது ஆண்டாக பெறும் விராட் கோஹ்லி, ஐ.சி.சி சிறந்த டெஸ்ட் வீரர், சிறந்த ஒருநாள் வீரருக்கான விருதையும் பெற்று புதிய சாதனை படைத்துள்ளார்.

இந்த ஆண்டு முதல்முறையாக ஐ.சி.சி டெஸ்ட் வீரருக்கான விருதை பெற்றுள்ள ஹோலி ஒட்டுமொத்தமாக 5 சிறப்புகளை பெற்றுள்ளார். இந்த விருதுகள் குறித்து விராட் ஹோலி கூறுகையில்,

இந்த விருது ஆண்டு முழுவதும் கடினமாக உழைத்த அனைவருக்குமானது. ஏராளமான வீரர்கள் விளையாடும் நிலையில், ஐ.சி.சியி சிறப்பு மிக்க விருதுகளை நாம்



பெறும்போது மிகப்பெருமையாக இருக்கிறது.

உண்மையில் எனக்கு பெருமை மிக்க தருணம். இந்த விருது எனக்கு இன்னும் ஆர்வமாக விளையாட உத்வேகத்தை அளிக்கும். தொடர்ந்து விருதுகளைப் பெற ஆர்வத்தைத் தூண்டும் என தெரிவித்துள்ளார்.

# உயிருக்கு போராடிய வீரருக்கு உதவிய குருணால் பாண்டியா

விபத்தில் சிக்கி உயிருக்குப் போராடும் இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் ஜேக்கப் மார்டினின் சிகிச்சைக்கு, இந்திய அணி வீரர் குர்ணால் பாண்டியா நிரப்பப்படாத காசோலையை வழங்கியுள்ளார்.

பரோடாவைச் சேர்ந்தவரும், முன்னாள் இந்திய கிரிக்கெட் அணி வீரருமான ஜேக்கப் மார்டின் விபத்தில் சிக்கி படுகாயமடைந்ததைத் தொடர்ந்து, மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்நிலையில், ஜேக்கப் மார்ட்டினின் மருத்துவ செலவுக்கு உதவிகளை திரட்டும் பணியில் ஈடுபட்டுள்ள பி.சி.சி.ஐ முன்னாள் செயலாளர் சஞ்சய் படேலை, இந்திய வீரர் குர்ணால் பாண்டியா சந்தித்தார்.



அப்போது தொகை நிரப்பப்படாத காசோலையை அளித்து, மார்டினுக்கு தேவைப்படும் மருத்துவ செலவுக்கான தொகையை அதில் நிரப்பி எடுத்துக்கொள்ளுமாறும் தெரிவித்துள்ளார். இந்த விடயம் கிரிக்கெட் உலகிலும், ரசிகர்கள் மத்தியிலும் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.


# கண்ணீர் அஞ்சலி

எமது கல்வி நிலையத்தின் கணித பாட ஆசிரியர்
சிவகரன் அவர்களின் அன்பு மாமியார்

## திருமதி பரமேஸ்வரி ஆனந்தராசா

அவர்களின் இழப்பினால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன்
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

நியூ சயன்ஸ் கோல்
நிர்வாகி, ஆசிரியர்கள்,
ஊழியர்கள், மாணவர்கள்.

கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.


(சி-5246)





# அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு

கடந்த (12.11.2018) திங்கட்கிழமை அமரத்துவமடைந்த
எமது குடும்பத் தலைவர்


## அமரர்
## இரத்தினம் இரவீந்திரநாதன்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (24.01.2019) வியாழக்கிழமை அதிகாலை 4.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து பகல் 11.00 மணியளவில் நடைபெறும் சபிண்டீகரண நிகழ்விலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவ்அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்

கரணவாய் மத்தி,
கரவெட்டி.


(சி-5241)

இங்ஙனம்
குடும்பத்தினர்



# மரண அறிவித்தல்

தோற்றம்
1949
.
02
.
14


மறைவு
2019
.
01
.
22

## பொன்னம்பலம் மகாதேவராசா

மூளாயைப் பிறப்பிடமாகவும் பொன்னாலையை நிரந்தர வசிப்பிடமாகவும் தொட்டிலடியை தற்காலிகமாகவும் கொண்ட பொன்னம்பலம் மகாதேவராசா அவர்கள் நேற்று (22.01.2019) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.


அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலம் - சரஸ்வதி தம்பதிகளின் அன்பு மகனும், பரமேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும், மதனமோகன் (யா/விக்ரோறியாக் கல்லூரி, ஆசிரியர்), சொரூபிணி, சுதாகரன் (நீர்பாசன திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர், வவுனிக்குளம்), கஜரூபன் (கட்டுமான நிறுவுநர்) அவர்களின் அன்புத் தந்தையும், சுபாசினி (யா/மூளாய் அமெரிக்க மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை, ஆசிரியை), காலஞ்சென்ற ஈஸ்வரன் மற்றும் கிரிதாரணி (சுகாதாரப் பணி உதவியாளர்) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம், முத்துக்குமாரசுவாமி மற்றும் பரமேஸ்வரி, சந்திரசேகரம் ஆகியோரின் பாசமிகு சகோதரரும், நிதர்சனா, பிரம்மகீதன், சங்கீதா (முகிழ்நிலை ஆசிரியர், தேசிய கல்வியியற் கல்லூரி, கோப்பாய்), விதுஷனா, கீர்த்தனா, தீபிகா, இசைவேந்தன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.01.2019) புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பொன்னாலை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(சி-5243)

# ராணுவக் கட்டுப்பாட்டிலிருந்து விடுவிக்கப்பட்ட தமிழ் மக்களின் காணிகளில் விகாரைகள்!


(யாழ்ப்பாணம்)

வலி. வடக்குப் பகுதியில் இராணுவக் கட்டுப்பாட்டிலிருந்து விடுவிக்கப்பட்ட 45 ஏக்கர் காணிகளை பொது மக்கள் பார்வையிடுவதற்கு இராணுவத்தினரால் நேற்று அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

விடுவிக்கப்பட்ட பெரும்பாலான பகுதிகளில் அரச மரங்கள் வளர்க்கப்பட்டு விகாரைகள் புதிதாக அமைக்கப்பட்டுள்ளன.

இராணுவத்தினரின் கட்டுப்பாட்டுக்குள் இருந்த 1363 ஏக்கர் காணி நேற்று முன்தினம் ஜனாதிபதியால் விடுவிக்கப்பட்டது.

இதன்படி யாழ்ப்பாணத்தில் வலி.வடக்கில் 45 ஏக்கர் காணி இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் இருந்து விடுவிக்கப்பட்டது. தையிட்டி தெற்கில் 30 ஏக்கர் காணியும், ஒட்டகபுலத்தில் 15 ஏக்கர் காணியும் விடுவிக்கப்பட்டது. விடுவிக்கப்பட்ட காணிகளை உரிமையாளர்கள் பார்வையிட நேற்று அனுமதிக்கப்பட்டது.

தையிட்டி தெற்கில் விடுவிக்கப்பட்ட காணிகளிலுள்ள அநேகமான வீடுகள் இராணுவத்தினர் பயன்படுத்தியதால் நல்ல நிலையிலேயே உள்ளது. சில வீடுகளை இராணுவத்தினர் திருத்தி மாற்றியுள்ளனர்.

அத்துடன் வீடுகள் சில அலுவலகமாக மாற்றப்பட்டுள்ளதுடன் சுவரில் சிங்கள மன்னர்களின் வரலாற்று படங்களையும் வரைந்து மாற்றியமைத்துள்ளனர். மேலும் காணியில் அரச மரங்கள் வளர்க்கப்பட்டு விகாரை அமைக்கப்பட்டுள்ளது. அங்கிருந்த புத்தர் சிலைகள் எடுத்துச் செல்லப்பட்டுள்ளன. மேலும் அப்பகுதியில் கூடைப்பந்தாட்ட மைதானம் ஒன்றும் இராணுவத்தினரால் அமைக்கப்பட்டுள்ளது.

தமது காணி விடுவிக்கப்பட்டது மகிழ்ச்சியளிக்கின்ற போதும் நல்ல நிலையிலுள்ள வீடுகளிலுள்ள கதவு,ஜன்னல்களை திருடர்களிடமிருந்து பாதுகாக்கப் போராட வேண்டும் என உரிமையாளர்கள் தெரிவித்துள்ளதுடன் இதற்கு பொலிஸார் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டுள்ளனர். (இ-9)

## "மத நல்லிணக்கம் பேணுவோம்" மாணவர்களுக்கான விழிப்புணர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட கலாசார அதிகார சபையின் கலை, கலாசார மேம்பாட்டு வேலைத்திட்டத்தின் கீழ் "மத நல்லிணக்கம் பேணுவோம்" மாணவர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்வு நாளை மறுதினம் 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் யாழ்ப்பாணப் பிரதேச செயலக மண்டபத்தில் மேலதிக அரசாங்க அதிபரும் மாவட்ட கலாசார அதிகார சபைத் தலைவருமான திருமதி.சுகுணரதி தெய்வேந்திரம் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் யாழ்ப்பாணம் சின்மயாமிஷன் சுவாமி சிதாகாசானந்தா, நெய்தலம் இயக்குநர் அருட்பணி அ.பி.ஜெயசேகரம், யாழ்ப்பாணம் சிவலைப் பள்ளி பேஷ்இமாம் அல்ஹாஜ் ஏ.எம்.ஏ.அஸீஸ் மௌலவி (காஸிமி), யாழ்ப்பாணம் நாகவிகாரை வணகொங்கல ஶ்ரீதம்ம தேரர் ஆகியோர் கருத்துரைகளை வழங்குவர். (இ-5-107)

## மைத்திரியின் கன்னத்தில் அறைந்த பொலிஸார்

(கொழும்பு)

இலங்கையை கைப்பற்ற முயற்சித்த முன்னாள் தமிழக முதல்வருக்கு எதிராக வன்முறையில் ஈடுபட்டமையால் கைது செய்யப்பட்டு தான் சிறையில் அடைக்கப்பட்டதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ஒன்றரை வருடங்களுக்கு மேலாக சிறைவாசம் அனுபவித்ததாகவும் இரண்டு முறை பொலிஸாரிடம் கன்னத்தில் அடி வாங்கியதாகவும் ஜனாதிபதி தனது பழைய கால நினைவுகளை மக்கள் முன்னிலையில் தெரியப்படுத்தினார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட ஜனாதிபதி இந்த தகவலை வெளியிட்டார்.

ஜனாதிபதியாக நான் இன்று பதவி வகித்தாலும் எனது பாடசாலை காலத்தில் இரண்டு முறை பொலிஸாரிடம் கன்னத்தில் அறை வாங்கியுள்ளேன்.

ஒரு முறை எம்.ஜி.ஆர். நாட்டைப் பிடிக்க வருவதாக கூறி எம்.ஜி.ஆரின். திரைப்படம் பொலநறுவை திரையரங்கில் ஓடிக்கொண்டிருக்கையில் அங்கு சென்று தகராறு செய்தோம். அவரது திரைப்படங்கள் இங்கு ஓடக்கூடாது என்று சண்டை பிடித்தோம். இதன்போது அங்கு வந்த பொலிஸார் மீது சிலர் கல்லெறிந்தனர். அச்சம்பவத்தில் அங்கு நானும் இருந்தேன். கல்லெறிந்தவர்கள் ஓட நான் சிக்கிக்கொண்டேன். இதனால் பொலிஸார் என்னை அந்த வேளையில் முதன் முறை கன்னத்தில் அறைந்து மூன்று மாதங்களுக்கு சிறையிலடைத்தனர்.

பின்னர் மீண்டுமொரு முறை 1980 சிறிமாவோ பண்டாரநாயக்கவின் பிரஜாவுரிமையை இரத்து செய்த வேளையில் நான் பொலநறுவை வீதியில் இறங்கிப் போராடினேன். இதன்போது ஒரு நாள் முழுவதும் வீதியை மறித்து வீதியிலேயே படுத்துக் கிடந்தோம். இதன்போது பொலிஸார் என்னை அடித்து இழுத்துச் சென்றனர்.

இச்சந்தர்ப்பத்திலேயே நான் ஜே.வி.பியைச் சேர்ந்தவன், பொலிஸ் நிலையத்தை தாக்கத் திட்டம் தீட்டியுள்ளேன் எனக் கூறி கைது செய்து கொலை செய்ய முயற்சித்து பின்னர் என்னை நீதிமன்றம் முன் நிறுத்தி ஒன்றரை வருடங்களுக்கு சிறைத் தண்டனை பெற்றுக்கொடுத்தார்கள்.

பொலிஸாரிடமிருந்து நான் இறந்து பிறந்தே இன்று ஜனாதிபதியாகியுள்ளேன். என்றாலும் எனக்கு ஒரு போதும் பொலிஸாரின் மீது வன்மம் எழவில்லை. ஏனென்றால் அவர்களில் நல்லவர்கள், தீயவர்கள் என இருத் தரப்பினரும் உள்ளனர் என்று ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.(இ-7)

## மீண்டும் திறக்கப்பட்டது கலஹா வைத்தியசாலை



(கொழும்பு)

ஐந்து மாதங்களுக்கு முன் சிகிச்சை பலனளிக்காது சிறுமி ஒருவர் மரணமடைந்ததைத் தொடர்ந்து பொதுமக்கள் ஆத்திரமடைந்து வைத்தியசாலையைத் தாக்கியதையடுத்து மூடப்பட்டிருந்த கலஹா வைத்தியசாலை மத்திய மாகாண ஆளுநர் மைத்திரி குணரத் தனவின் வேண்டுகோளுக்கு இணங்க மீண்டும் திறந்து வைக்கப்பட்டது.

இந்கிகழ்வில் மத்திய மாகாண சுகாதாரப் பணிப்பாளர் டாக்டர் சாந்தி சமரசிங்க உட்பட பலர் கலந்து கொண்டனர். (இ-7)

## இராசி பலன்

**மீனம்:** தேக நலனில் ஏற்பட்ட பாதிப்புகள் அகலும், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், செய் தொழிலில் சிறப்புக்கள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.

**மேடம்:** இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள்.

**இடபம்:** வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும், காலை நேரத்திலேயே கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், பித்த சம்பந்தமான ரோக பயமுண்டு.

**மிதுனம்:** சுப நிகழ்வுகளில் புதியவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், கொடுக்கல்- வாங்கல்கள் ஒழுங்காகும், உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள்.

**கும்பம்:** மதிநுட்பத்தால் மகத்தான காரியமொன்றைச் செய்து முடிப்பீர்கள், எடுத்த காரியங்கள் கைகூடும், பொருளாதார நிலையில் முன்னேற்றமுண்டு.

**கடகம்:** உங்களின் மணியான யோசனைக்கு நல்ல பாராட்டுக்கள் கிடைக்கும், புதிய திட்டங் களில் முன்னேற்றம் காண்பீர்கள், புதிய பொருட் சேர்க்கையுண்டு, வாக்கு மேன்மையுண்டு.

| | | | |
|---|---|---|---|
| செவ் | | | |
| | இராசி பலன் | | ராகு |
| கேது. புத. சூரி | கிரகநிலை சந்திராஷ்டமம் திருவோணம் - அவிட்டம் | | சந் |
| சனி | குரு.சுக் | | |

23.01.2019

தை 09, புதன்கிழமை

சூரிய உதயம் காலை 6.22 மணிக்கு

துதியை காலை 7.09 மணிவரை

திருதியை பின்னிரவு 4.49 மணிவரை

மகம் பின்னிரவு 1.17 மணிவரை

சுபநேரம் 5.06-6.36 மணிவரை

இராகுகாலம் 12.36-2.06 மணிவரை

வளவன்

**மகரம்:** சிலர் பாராட்டுவதுபோல உங்களை விமர்சிக்கலாம், பயணத்தின் போது விழிப்புணர்வு அவசியம், குடும்பத்தினரிடையே விட்டுக்கொடுத்து நடப்பது நல்லது.

**சிம்மம்:** ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், போசனசுகமுண்டு, எடுத்த காரியத்தில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், ஆரோக்கியத்தில் அக்கறை கூடும்.

**தனுசு:** சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், சாமர்த்தியமான பேச்சுகளால் சாதனை படைக்கும் நாள், உதாசீனப்படுத்தியவர்கள் உதவி கேட்டு வரலாம்.

**விருச்சிகம்:** தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், உங்களின் திறமைகளுக்கு பாராட்டுகள் கிடைக்கும், போசன சுகமுண்டு.

**துலாம்:** அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், எதிர்பாராத ஒருவர் உங்களுக்கு உதவ முன்வரலாம், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும்.

**கன்னி:** சுப விரயங்கள் கூடும் நாள், ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.





இணுவில் கந்தசுவாமி கோவிலில் நேற்று முன்தினம் தைப்பூசத்தன்று உலகப்பெருமஞ்சத்தில் முருகப் பெருமான் வீதி வலம் வரும் போது. (படங்கள்:- ஐ.சிவசாந்தன்.புன்னாலைக்கட்டுவன் செய்தியாளர்கள்)

# மருத்துவச் சான்றிதழ் பெற வருவோர் நேரத்தையும் பணத்தையும் வீணாக்காதீர்கள்

## யாழ்.மாவட்ட அரச அதிபர் அறிவுறுத்தல்

(யாழ்ப்பாணம்)

தேசிய போக்குவரத்து வைத்திய நிறுவக யாழ்ப்பாணம் கிளை அலுவலகம் காலை 8 மணிக்கு ஆரம்பிக்கப்படுவதுடன் அன்றைய தினத்திற்குரிய நுழைவுத் துண்டு முற்பகல் 8 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணிவரை வழங்கப்படும்.

ஆகையால் மருத்துவச் சான்றிதழ் எடுக்க வருவோர் அதிகாலையில் வரிசையில் காத்திருக்க வேண்டிய அவசியமில்லை. மற்றும் வெளி முகவர்களின் பொய்யான தகவல்களை நம்பி பொது மக்கள் தங்கள் நேரத்தையும் பணத்தையும் வீணாக் காதீர்கள் எனக் கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

மேலும் அதிகாலையில் வருகை தரும் பொதுமக்களை ஒழுங்குபடுத்தி பெயர் எழுதுவதற்கு தேசிய போக்குவரத்து வைத்திய நிறுவகத்தால் எவரும் நியமிக்கப்படவில்லை. தனி நபர்கள் அல்லது வெளிமுகவர்கள் பணத்தைப் பெற்றுக் கொண்டு இவ்வாறான செயற்பாட்டில் ஈடுபட்டால் எமது அலுவலகத்துடன் நேரடியாக அல்லது 021 222 5000 தொலைபேசி இலக்கத்தினூடாக அறியத்தரின் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். மருத்துவச் சான்றிதழுக்கான கட்டணமாக 800 ரூபா அறவிடப்படுவதுடன் அதற்கான பற்றுச்சீட்டை கட்டாயம் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப் படுகின்றார்கள் என யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் அறிவித்துள்ளார். (இ)

# பதிலில்லை; பாதிக்கப்பட்டவர்கள் விசனம்

(கரணவாய்)

வடமாகாண சுகாதார சேவைகள் பணிமனையின் கீழ் இயங்குகின்ற வைத்தியசாலைகளின் ஊழியர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக வடமாகாண சுகாதார அதிகாரிகளுடன் ஸ்ரீலங்கா ஜனராஜ சுகாதார சேவைகள் சங்கத்தின் உயர்மட்டக் குழு நடத்திய கலந்துரையாடல் தொடர்பாக இதுவரை எந்தவொரு பதிலும் சங்கத்திற்கு அனுப்பிவைக்கப்படாமையால் ஊழியர்கள் விசனமடைந்துள்ளனர்.

முதலாவதாக சம்பள முரண்பாடு காணப்படுகிறது. அதாவது அனைத்து ஊழியர்களின் சம்பளம் ஒன்றிற்கு ஒன்று முரண்பாடாகவுள்ளது.

ஒரு ஊழியர் ஓய்வில் செல்லும் போது சம்பளம் கூடுதலாக வழங்கப்பட்டு விட்டது.

எனவே கூடுதலாகப் பெற்ற பணத்தை நீங்கள் தபாற்கந்தோரில் செலுத்தினால் மட்டுமே உங்களிற்கான ஓய்வூதியம் கிடைக்கும் என்று கூறியுள்ளனர்.

அதற்கமைய ஓர் ஊழியர் 46 ஆயிரம் ரூபா பணம் செலுத்தியுள்ளார்.

இரண்டாவதாக பரிசாரகர் தரம் 1 இற்கான கடிதம் பத்து வருடங்கள் கடந்தும் கிடைக்கவில்லை.

மூன்றாவதாக ஒரு பதவியில் இருந்து இன்னொரு பதவிக்கு செல்லும் ஊழியர்களுக்கு சேவையை உறுதிப்படுத்தும் கடிதம் மூன்று வருடங்களுக்குள் வழங்கப்பட வேண்டும். ஆனால் பல வருடங்களாகியும் அவை வழங்கப் படவில்லை.

இவ்வாறான பிரச்சினைகள் தொடர்பில் வட மாகாண சுகாதார அதிகாரிகளுடன் சங்கம் நடத்திய கலந்துரையாடல் தொடர்பாக இன்னமும் எந்தவொரு பதிலும் வழங்கப்படவில்லை என பாதிக்கப்பட்டவர்கள் விசனம் வெளியிட்டுள்ளனர். (இ-60)

# மண்கும்பானில் மணல் கடத்தல் நன்னீர் வளம் பறிபோகும் நிலை

## தவிசாளர் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

வேலணைப் பிரதேச சபைக்குட்பட்ட மண்கும்பான் சாட்டிப் பிரதேசங்களில் அதிகளவாக மணல் கடத்தல்கள் இடம்பெறுவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அசமந்தப்போக்கே காரணம் என வேலணைப் பிரதேச சபைத் தவிசாளர் ந.கருணாகரகுருமூர்த்தி தெரிவித்தார்.

தமது பிரதேசத்தின் நன்னீர் வளமாகக் காணப்படுகின்ற சாட்டி மண்கும்பான் பிரதேசங்கள் இச் சட்ட விரோத மணல் கடத்தல்களால் உவர் நீராக மாறும் சூழல் உருவாகியுள்ளதாகவும் இதைப் பாதுகாப்பதற்கு அதிகார வர்க்கங்களில் உள்ளோர் கை கோர்க்க வேண்டுமெனவும் தெரிவித்தார்.

மேலும் தமது பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் பனை, பூவரசமரம் போன்றனவற்றை வெட்டுவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதாகவும் தமது பிரதேச மக்களின் தேவைகருதி சம்பந்தப்பட்ட துறையினர் மரங்களை வெட்டுவதற்கு அனுமதி வழங்கப்படுமென அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

# ஆளுநர்-முதல்வர் இடையே உத்தியோகபூர்வ சந்திப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர முதல்வர் இம்மானுவல் ஆனல்ட்- வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவன் ஆகியோருக்குமிடையில் உத்தியோக சந்திப்பு ஒன்று கடந்த 18 ஆம் திகதி ஆளுநர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இச் சந்திப்பில் யாழ். மாநகரத்தில் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் அபிவிருத்தித் திட்டங்கள், பசுமை மாநகரை உருவாக்கும் செயற்றிட்டத்தில் முன்னாள் ஆளுநருடன் இணைந்து முன்னெடுக்கப்பட்ட வேலைத் திட்டங்களை தொடர்ந்தும் முன்னெடுத்தல் தொடர்பிலும் மற்றும் எதிர்காலத்தில் மாநகரில் மேற்கொள்ளப்படவுள்ள வேலைத்திட்டங்கள் தொடர்பிலும் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

இச் சந்திப்பின் போது யாழ்.மாநகர ஆணையாளர் இ.த.ஜெயசீலனும் கலந்து கொண்டார். யாழ். மாநகர சபை சார்பில் ஆளுநருக்கு கௌரவிப்புடன் கூடிய வரவேற்பும் நினைவுச் சின்னம் ஒன்றும் முதல்வர் மற்றும் ஆணையாளர் இணைந்து வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)




# 20 மீனவக் குடும்பங்களுக்கு மீன்பிடி உபகரணங்கள்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட தெரிவு செய்யப்பட்ட இருபது மீனவக் குடும்பங்களுக்கு கடந்த வாரம் 5 இலட்சம் ரூபாய் பெறுமதியான மீன்பிடி உபகரணங்கள் வழங்கப்பட்டதாக பிரதேச செயலாளர் சி.சிவசிறி தெரிவித்தார்.

இவ் உபகரணங்கள் யு.என்.டி.பியின் அனுசரணையுடன் வழங்கப்பட்டன. 3 இலட்சத்து 5 ஆயிரம் ரூபா பெறுமதியான படகுகளும் ஒரு இலட்சத்து 95 ஆயிரம் ரூபாய் பெறுமதியான படகுகளுக்கான இயந்திரங்களும் வழங்கப்பட்டதாகத் தெரிவித்தார். (இ-10)

# வீட்டின் ஜன்னல் கண்ணாடிகள் உடைப்பு

## 9பேர் கொண்டகுழு அராஜகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கல்வியங்காடு பகுதியிலுள்ள வீட்டின் மீது நேற்று முன்தினம் இரவு இனம் தெரியாத நபர்களால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறித்த வீட்டுக்கு நான்கு மோட்டார் சைக்கிள்களில் வந்த 9 பேர் வீட்டின் ஜன்னல் கண்ணாடிகளை அடித்து உடைத்து விட்டுச் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-10)

# இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.ஊரெழு கணேசா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் அன்ரன் பிரேமதாஸ் தலைமையில் இடம்பெறும்.

இதில் பிரதம விருந்தினராக யாழ். வலயக்கல்வி அபிவிருத்திப் பிரிவின் பணிப்பாளர் த.பால்ராஜ் கலந்து கொள்வார். (இ-10-136)

(யாழ்ப்பாணம்)

யாழ்.கரவெட்டி, வதிரி திரு இருதயக் கல்லூரி இல்ல மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் முதலாம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி அதிபர் இ.இராகவன் தலைமையில் நடைபெறும்.இதில் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன், சிறப்பு விருந்தினராக பொறியியலாளர் ஜோன் ஜெயந்தன் தவரட்ணராஜா ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5)




யாழ்.வதிரி திருஇருதயக் கல்லூரியில் "போதைக்கு எதிரான பாடசாலையின் பலம்" போதைப் பொருள் தடுப்பு பாடசாலை நிகழ்ச்சித் திட்டம் அதிபர் இ.இராகவன் தலைமையில் நேற்று இடம்பெற்றது. (படங்கள்:-மகாலிங்கம்)

# மஹோற்சவம் இன்று ஆரம்பம்

வட்டுக்கோட்டை சங்கரத்தை குளத்தடி அருள்மிகு நாக பூஷணி அம்பாள் ஆலய மஹோற்சவம் இன்று புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். (இ-10)

## பெயர் மாற்றம்

புத்தளத்தை வசிப்பிடமாகக் கொண்ட டானியேல் சுதன் ஆகிய எனது பெயரை இன்று முதல் மொஹமத் சஜீம் என மாற்றம் செய்து இனிவரும் காலங்களில் என் சார்ந்த சகல ஆவணங்களில் இப் பெயரையே பயன்படுத்துவேன் என இத்தால் அனை வருக்கும் அறியத்தருகின்றேன்.

உண்மையுள்ள
மொஹமத் சஜீம்
(7235)

## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் கட்டட வேலைக்கு கீழ்வரும் வேலையாட்கள் தேவை
- மேசன் (Mason)
- கூலி (Labour)
- வர்ணப்பூச்சாளர் (Painter)

தொடர்பு:- தொ.இல: 076 546 5144
(C-5237)

## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

## வைத்தியம்

தலைமுடிஉதிர்தல், முள்ளந்தண்டுபிரச்சினை, பாரிசவாதம், சலரோகம், உடல்பருமன்குறைத்தல் அல்லது கூட்டுதல் (வயிறு, மார்பு, கை) ஆண்மைக்குறைபாடுகள், குழந்தையின்மை போன்றவற்றிற்கு சிகிச்சை வழங்கப்படும்.

தொடர்பு :- Shan's Health Care
255, K.K.S. Rd. Kokuvil. T.P : 077 035 7307
(7186)


## வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை, கரவெட்டி சந்தைகள், இறைச்சிக்கடைகளுக்கான 01.02.2019-31.12.2019 வரையுள்ள காலப்பகுதிக்கான பகிரங்க ஏலக் கேள்வி அறிவித்தல்

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச நிர்வாக எல்லைக்குட்பட்ட பின்வரும் சந்தை இறைச்சிக்கடைகளினை 01.02.2019-31.12.2019 வரை குத்தகைக்கு வழங்குவதற்காக பகிரங்க ஏலத்தில் விடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஏலம் 30.01.2019 காலை 10.30 மணிக்கு நடைபெறும். ஏலத்தில் பங்குபற்ற விரும்புபவர்கள் தலைமை அலுவலகத்தில் கேள்வி வைப்புப் பணத்தினைச் செலுத்தி பற்றுச்சீட்டினை 23.01.2019 தொடக்கம் 30.01.2019 முற்பகல் 10.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

| தொ. இல | குத்தகை விபரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | ஆகக் குறைந்த ஏலத் தொகை (வரிகள் நீங்கலாக) | மாத வாடகை (வரிகள் நீங்கலாக) |
|---|---|---|---|---|
| 01 | நெல்லியடி ஆட்டிறைச் சிக்கடை | 500.00 | 46,000.00 | 100.00 |
| 02 | கோயிற் சந்தை கோழியிறைச்சிக்கடை | 1800.00 | 180,000.00 | 100.00 |
| 03 | நெல்லியடிச் சந்தை கோழிக்கடை | 6000.00 | 597,800.00 | 100.00 |
| 04 | மண்டான் சந்தை | 500.00 | 41,250.00 | — |
| 05 | உடுப்பிட்டிச் சந்தை | 7500.00 | 746,260.00 | — |
| 06 | உடுப்பிட்டிச் சந்தைக் கோழிக்கடை | 2400.00 | 230,542.00 | 100.00 |
| 07 | உடுப்பிட்டிச் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 4950.00 | 490.780.00 | 100.00 |

இதற்கான ஏலக் கேள்வியில் கலந்து கொள்பவர்கள் மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணத்தினை 2019.01.30 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு முன் செலுத்துவதுடன், சித்திகரக் கேள்விக்காரர் உடனடியாக ஏலத் தொகையின் 1/3 பங்கு பாதுகாப்பு வைப்புப் பணம், VAT,NBT ஆகியவற்றைச் செலுத்தி ஒப்பந்தம் செய்ய வேண்டும். பாதுகாப்பு வைப்புப் பணம் உடனடியாக செலுத்தத் தவறும் பட்சத்தில் அடுத்த கேள்விதாரருக்கு குத்தகை வழங்கப்படும்.

க.த.ஐங்கரன், தவிசாளர்,
வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை,
கரவெட்டி.

23.01.2019
(C-5238)


## மண்ணின் மைந்தர்களுக்கு மகுடம் சூட்டும்-விழா

தேசிய அகில நல்லுறவு ஒன்றியம் 25 ஆவது வெள்ளி விழா பூர்த்தியையிட்டு

சேவைநலன் பாராட்டு விழா
"வாழும் போதே வாழ்த்துவோம்"



**டாக்டர்.சோமர் லோகநாதன் (J.P.S.L.)**
**(லோகர்சுவாமி)**

(சாமஸ்ரீ தேசமானிய சமூக சேவை சிரோன்மணி கலாபூஷணம்)
(நயினாதீவு 5ஆம் வட்டாரம்)

அவர்கட்கு கிழக்கு மாகாண ஆளுநர் அவர்களினால், மகுடம் சூட்டுதல், பொன்னடை போர்த்தல், சந்தனமாலை அணிவித்தல், பதக்கம் அணிவித்தல், கேடயம் வழங்கல், சான்றிதழ் வழங்கல், சிறப்பு மலர் வெளியிடல், அடையாள அட்டை இவையாவும் வழங்கி

**சாமஸ்ரீ ஸ்ரீலஸ்ரீ பொன்மனச்செம்மல் விஜயகீர்த்தி**

என்ற விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.
(7236)

## நீரிழிவு நோயா? மற்றும் உடல் பருமனா?

இதோ நான்கு [4] வாரங்களில் நீங்கள் Super SLIM ஆக மாறுவதற்கான வாய்ப்பு

Teastar Healthy Tea Products மற்றும் வழங்கும் இலவச மாபெரும் மருத்துவ ஆலோசனைகள், பரிசோதனைகள் மற்றும் சிகிச்சை விளக்கங்கள்



கொழும்பில் இருந்து அனுபவமிக்க வைத்தியர்கள் கலந்து கொள்கின்றார்கள்

இடம் :- வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம் (கூட்டுறவு கட்டிடம்)
காலம் :- 18-19 ஜனவரி 2019 (வெள்ளி மற்றும் சனி)
நேரம் :- காலை 9.00 முதல் மாலை 5.00 மணிவரை

உங்கள் முற்பதிவுகளுக்கு இன்றே அழையுங்கள்

RISWAN / HARI

070 569 8218, 077 442 0983, 077 962 8999

100% NATURAL PRODUCT — TEASTAR — 100% NATURAL PRODUCT
(7163) (7152)

## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி
உயரம்: 5'5"
தகைமை/தொழில்:BBM, AIB வங்கி எழுதுவினைஞர்
எதிர்பார்ப்பு:அரச, வங்கி உத்தியோகம்
தொ.இ: B/9141

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை 4
கி.பா: 13 3/4 செவ் 1 இல்
உயரம்: 5'10"
தகைமை/தொழில்: B.Sc, M.Sc Computer Engineer
எதிர்பார்ப்பு: வெளிநாடு (USA), Doctor, Com.Engineer
தொ.இ: B/9143

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: உத்தரம் 3
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:B.Sc, Eloctronic Engineer
எதிர்பார்ப்பு: B.Sc பட்டப்படிப்பு, Lecturer, Doctor
தொ.இ: B/9145

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: அத்தம் 4
தகைமை/தொழில்: அளவையியல் விஞ்ஞானி,QS
தொ.இ: B/9146

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி 2
கி.பா: 16 1/2
உயரம்: 5'10"
தகைமை/தொழில்:B.Com, MBA உதவி கணக்காளர் (India)
எதிர்பார்ப்பு: வெளிநாடு, உயர்பதவி
தொ.இ: G/9199


பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: பூசம் 2
கி.பா: 66 சூரிசெவ் 1இல்
உயரம்:5'2"
தகைமை/தொழில்:A/L
எதிர்பார்ப்பு: அரச, தனியார் உத்தியோகம், மெக்கானிக்
தொ.இ: G/1953

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: திருவோணம்
கி.பா: 25 உயரம்: 5'1"
தகைமை/தொழில்:A/L, தையல்
எதிர்பார்ப்பு: வெளிநாடு
தொ.இ: G/1959

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: அவிட்டம் 4
கி.பா: 52 செவ் 7இல் உயரம்:5'5"
தகைமை/தொழில்: Bio Medical Science, UK PR
எதிர்பார்ப்பு: வெளிநாடு,பட்டதாரி,
தொ.இ: G/1965

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# வழக்கத்திலிருந்த நில உரிமை முறைமைகளும் மண்ணின் மகிமை (பிம்சவிய) நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் காணி உரித்துப் பதிவும்



10

கலாநிதி க.தவலிங்கம்
தவிசாளர்-எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.

காணி உரித்துப் பதிவு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட காணி உரித்துப் பதிவின் எண்ணிக்கை

2017ஆம் ஆண்டு வரை உரித்துப்பதிவினை நடைமுறைப்படுத்தும் அலுவலகங்கள் மற்றும் ஒவ்வொரு அலுவலகங்களிலும் வழங்கப்பட்ட உரித்துச் சான்றிதழ்களின் எண்ணிக்கை கீழ் குறிப்பிடப்படுகின்றது.

பதிவாளர் நாயகத்தின் தகவலின் படி 2017 வரையில் 577,397 காணி உரித்துச் சான்றிதழ் வழங்கப்பட்டிருந்ததோடு 2018 ஆம் ஆண்டில் மே மாதம் இறுதி வரை 5990 காணி உரித்துச் சான்றிதழ் வழங்கப்பட்டிருந்தன.

அதாவது 2018ஆம் ஆண்டு மே மாதம் வரை வழங்கப்பட்ட காணி உரித்துச் சான்றிதழ்களின் எண்ணிக்கை 583,387. வட மாகாணத்தைப் பொறுத்தவரை இதுவரை ஒரு காணி உரித்துச் சான்றிதழ் வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**பதிவாளர் நாயகத்தின் தகவலின் படி 2017 வரையில் பதியப்பட்ட காணி உரித்துப் பதிவுகளின் எண்ணிக்கை**

| ஆண்டுகள் | 2012 வரை | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| காணிப் உரித்துப் பதிவு அலுவலகம் | காணி உரித்துப் பதிவு செய்யப்பட்ட காணிகள் | | | | | | |
| அனுராதபுரம் | 70409 | 595 | 1384 | 2918 | 2177 | 4697 | 82180 |
| அத்தனகலை | | | 2735 | 3265 | 1056 | 1164 | 8220 |
| பதுளை | 8262 | 453 | 1025 | 387 | 834 | 92 | 11053 |
| தெல்கந்த | 24928 | 9842 | 8590 | 6288 | 3521 | 3458 | 56627 |
| காலி | | | 1739 | 3027 | 981 | 1404 | 7151 |
| கம்பஹா | 21433 | 3750 | 1015 | 3100 | 1570 | 4633 | 35501 |
| கம்பொல | 32196 | 415 | 301 | 208 | 296 | 728 | 34144 |
| அம்பாந்தோட்டை | 18217 | 3161 | 1569 | 543 | 1279 | 2786 | 27555 |
| ஹோமாகம | 31895 | 9699 | 6958 | 5154 | 1856 | 1305 | 56867 |
| களுத்துறை | | | 670 | 1389 | 984 | 1369 | 4412 |
| கண்டி | 12442 | 4611 | 5454 | 3001 | 2773 | 2743 | 31024 |
| கேகாலை | | | | | 381 | 543 | 924 |
| குளியாப்பிட்டி | 602 | 2103 | 1428 | 889 | 616 | 448 | 6086 |
| குருநாகல் | 14856 | 2848 | 2203 | 1715 | 1991 | 3022 | 26635 |
| மாறவில | | | 243 | 448 | 72 | 432 | 1195 |
| மாத்தளை | 1552 | 3396 | 1953 | 1556 | 1879 | 1790 | 12126 |
| மாத்தறை | | | 1504 | 3546 | 2754 | 2408 | 10212 |
| மொனறாகலை | 9858 | 2786 | 1138 | 795 | 1305 | 3048 | 18930 |
| நீர்கொழும்பு | 32515 | 4520 | 1872 | 1528 | 1780 | 2657 | 44872 |
| நுவரெலியா | 598 | 2040 | 812 | 372 | 624 | 299 | 4745 |
| பாணத்துறை | | 1011 | 1108 | 927 | 1063 | 1427 | 5536 |
| பொலன்னறுவை | 10615 | 6060 | 1375 | 395 | 828 | 2395 | 21668 |
| இரத்தினபுரி | 39095 | 6521 | 5689 | 5666 | 4459 | 5307 | 66737 |
| தங்காலை | | | | | 129 | 1498 | 1627 |
| திருகோண்மலை | 865 | 0 | 26 | 113 | 222 | 144 | 1370 |
| மொத்தம் | 330338 | 63811 | 50791 | 47230 | 35430 | 49797 | 577397 |

**சுயஉரிமம் பதிவு செய்தல் நிகழ்ச்சித் திட்டம்**

இதற்கு மேலதிகமாக தனியாரின் வேண்டுதலின் பேரில் அவர்களின் செலவில் காணியினை அளவிட்டு உரித்து அறிக்கையினை தயாரித்து உரித்துச் சான்றிதழினை வழங்குவதற்காக சுயஉரிமம் பதிவு செய்தல் எனும் பெயரில் நிகழ்ச்சித்திட்டம் **(voluntary title registration programme)** நடைமுறைப்படுத்தப்பட்டது.

இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் சில காணிப்பதிவகத்தின் மூலம் உரித்துச்சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளது. இச்சுயஉரிமம் பதிவு செய்தல் நிகழ்ச்சித்திட்டம் தற்போதுநடைமுறையில் இல்லை.

மண்ணின் மகிமை (பிம்சவிய) நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் காணி பற்றிய தகவல்கள் யாவும் கணனிமயப்படுத்தப்படுவதால் வினைத்திறமை மிக்க காணி முகாமைத்துவ தகவல் மையம் ஏற்படும் என எதிர் பார்க்கலாம்.

இலங்கையில் உள்ள காணித்துண்டுகளின் எண்ணிக்கை கிட்டத்தட்ட 14-15 மில்லியனாக கணக்கிடப்படுகிறது. மேலும் இது அரச காணித்துண்டுகளை பொதுமக்களுக்கு வழங்கல். காணித்துண்டுகள் பிரிவிடல் போன்ற காரணங்களினால் நாளாந்தம் அதிகரித்துச் செல்கின்றது. இந்த உரித்துப் பதிவு முறையில் ஒவ்வொரு காணித்துண்டுகளுக்கும் நில அளவைத் திணைக்களத்தினால் உத்தரவாதமளிக்கப்பட்ட வரைபடம் தேவைப்படும்.

இலங்கையில் உள்ள சகல காணித்துண்டுகளுக்கும் நில வரைபடம் வரைவதற்கு தற்போதைய வசதிகளின்படி பல வருடங்கள் எடுக்கலாம். இக்காரணத்தால் காணி உறுதிப் பதிவு முறையும் காணி உரித்துப்பதிவு முறையும் சமாந்தரமாக ஒன்றுடன் ஒன்று தொடர்புபடாமல் பல காலங்களுக்கு நடைமுறையில் இருக்கும் என எதிர் பார்க்கலாம். **(முற்றும்)**



**உலக நீரிழிவு தினத்தையொட்டி இலங்கை சுகாதார அமைச்சின் நீரழிவு சம்மேளனம், அகம் சுரப்பியியலாளர் கல்லூரியினர் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து நடத்திய அகில இலங்கை ரீதியான கட்டுரைப்போட்டியில் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை மாணவி செல்வி அம்பிகை சண்முகலிங்கம் இடைநிலைப்பிரிவுக்கான விருதினைப் பெற்றுக்கொண்டார். கொழும்பு தாமரைத் தடாக அரங்கில் சனிக்கிழமை நடைபெற்ற வைபவத்தில் பிரதம விருந்தினராக சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன கலந்துகொண்டு விருதுபெற்ற மாணவர்களை கௌரவித்தார்.**

## மனித உரிமை விவகாரங்கள் குறித்து பிரிட்டன் அமைச்சருடன் மங்கள பேச்சு



(லண்டன்)

ஐ.நா மற்றும் கொமன் வெல்துக்கான, பிரித்தானியாவின் இராஜாங்க அமைச்சர் தாரிக் அகமட் பிரபுவை நிதியமைச்சர் மங்கள சமரவீர சந்தித்து பேச்சு நடத்தினார்.

லண்டன், வெஸ்ட்மினிஸ்டரிலுள்ள தாரிக் அகமட் பிரபுவின் செயலகத்தில் இந்தச் சந்திப்பு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

மனித உரிமைகள் மற்றும் நல்லிணக்கம், உள்ளிட்ட ஏனைய விவகாரங்கள் தொடர்பாக இந்தச் சந்திப்பின் போது கலந்துரையாடப்பட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (இ-7)

# பிரிகேடியர் பிரியங்கவுக்கு எதிரான பிடியாணை குறித்து எதுவும் தெரியாது

## இராணுவப் பேச்சாளர் சுமித் அத்தபத்து கூறுகிறார்

(கொழும்பு)

பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோவுக்கு எதிராக பிரித்தானிய நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளமை தொடர்பாக, இலங்கை அதிகாரிகளுக்குத் தகவல்கள் ஏதும் தெரியாது என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சுமித் அத்த பத்து தெரிவித்துள்ளார்.



பொதுக்கட்டளைச் சட் டத்தின் 5 மற்றும் 4 ஏ பிரிவுகளின்படி, பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோ குற்றமிழைத்துள்ளார் என்றும், அவரது செயற்பாடுகள், அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் துன்புறுத்தும் வகையில் அமைந்திருப்பதாகவும் வெஸ்ட்மினிஸ்டர் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய, அவரைக் கைது செய்யுமாறும் நீதிமன்றம் நேற்று முன்தினம் உத்தரவிட்டது.

இதுகுறித்து எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த பிரிகேடியர் சுமித் அத்த பத்து.

"பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தால், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடை முறைகளுக்கு அமைய, முறைப்படி எமக்கு அறிவிக்க வேண்டும்.

பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோவுக்கு எதிராகப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளதாக வெளியாகும் ஊடகச் செய்திகள் குறி த்து நாங்கள் கவலைப்படவில்லை.

எமக்கு அதிகாரபூர்வ அறி வித்தல் வழங்கப்பட்டால், சட்டப்படி நாங்கள் செயற்படு வோம்" என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# நாட்டின் ஒருமைப்பாட்டுக்காக ஐ.தே.க. தலைவர்கள் உயிரைத் தியாகம் செய்தனர்

(ருவன்வெல்ல)

நாட்டின் ஒருமைப்பாடு மற்றும் பௌத்த மதத்திற்குரிய இடத்தை அவ்வாறே பாதுகாக்க ஐக்கிய தேசியக் கட்சி அர்ப்பணிப்புடன் இருப்பதாக அமைச்சர் கபீர் ஹாசிம் தெரிவித்துள்ளார்.

நாட்டின் ஒருமைப்பாட்டுக்காகவும் மக்களின் பாதுகாப்புக்காகவும் ஐக்கிய தேசியக் கட்சியின் பல தலைவர்கள் தமது உயிர்களை தியாகம் செய்துள்ளனர் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

ருவன்வெல்ல தொகுதியில் நேற்று முன்தினம் அபிவிருத்தி திட்டங்களை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவிக்கையில்.

மீண்டும் ஆட்சிக்கு வர தற்போது புதிய பூச்சாண்டியை தேடுகின்றனர்.

ஒப்பந்தகாரர்கள், கொள்ளை வியாபாரிகளின் தேவைக்காகவே இவர்கள் மீண்டும் ஆட்சிக்கு வர முயற்சித்து வருகின்றனர்.

இதுவரை காலமும் நாட்டின் ஒருமைப்பாடு மற்றும் மக்களின் பாதுகாப்புக்காக ஐக்கிய தேசியக் கட்சியின் பல தலைவர்கள் தமது உயிர்களைத் தியாகம் செய்தனர். அதேபோல் ஆயிரக்கணக்கான ஐக்கிய தேசியக் கட்சியினரும் தமது உயிர்களை தியாகம் செய்தனர்.

நாட்டில் ஜனநாயகத்தை பாதுகாப்பதற்காக ஐக்கிய தேசியக் கட்சியினர் உயிரை அர்ப்பணித்து செயற்படுவர் எனவும் கபீர ஹாசிம் மேலும் தெரிவித்தார். (இ-7)

# இம்முறை சுதந்திரதினக் கொண்டாட்டத்தில் விசேட விருந்தினராக மாலைதீவு ஜனாதிபதி

(கொழும்பு)

எதிர்வரும் பெப்ரவரி 4 ஆம் திகதி இலங்கையின் 71 ஆவது சுதந்திர தினம் கொண்டாடப்படவுள்ளது.

இதற்கான சகல ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தெரிவித்துள்ளது.

சுதந்திரதினக் கொண்டாட்டம் காலிமுகத்திடலில் இடம்பெறும். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

மாலைதீவு ஜனாதிபதியும் அவரது பாரியாரும் விசேட விருந்தினராகப் பங்கேற்பார்கள் என அமைச்சின் செயலாளர் கமல் பத்மசிறி தெரிவித்தார்.

சுதந்திரதினக் கொண்டாட்ட பிரதான நிகழ்வில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், வெளிநாட்டுத் தூதுவர்கள் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் பங்கேற்பார்கள்.

பெப்ரவரி 3 ஆம் திகதி இரவு கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் பிரித் பாராயணம் இடம்பெறும். பிரதான வைபவத்துடன் இணைந்ததாக மாவட்ட மட்டத்திலும் சுதந்திரதினக் கொண்டாட்ட நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன என்றும் செயலாளர் கமல் பத்மசிறி தெரிவித்தார். (இ-7)

# குறை'களை' பதிகம் 10



## சுந்தரரைத் தடுத்த வேதியர் போல இங்கே வீடியோக்காரர்கள்

*நாள் பார்த்து; நல்ல நேரம் எடுத்து*
*நன்மங்கல நாண்பூட்ட மண்டபம் தேடி*
*வதுவைக்கு வருகவென்று அழைப்பிதழ் அச்சிட்டு*
*வாரம்பல அலைந்து அழைப்பிதழ் வழங்கி*
*மங்கல நாண் பூட்டுகின்ற வேளை*
*நிறுத்து என்று வீடியோக்காரர் தடுத்து*
*நிறுத்தி நின்ற தண்டில் பூட்டிவைத்த*
*வீடியோக் கமராவில் பூந்து பூந்து ஏதோ எடுத்து*
*இனிக்கட்டு தாலி என்று இறுக்கமுகத்துடன்*
*வீடியோக்காரர் உத்தரவிட*

*இராகுகாலமும் மரணயோகமும்*
*சித்தசுவாதீன ஓரையும்*
*ஒன்றுகூடி நிற்கின்றவேளை*
*கட்டியதாலி சட்டத்தரணி வாசலில்*
*கட்டணம் பற்றிப் பரவாயில்லை*
*கட்டாயம் விவாகரத்துத் தேவையென்று*
*கோடு, கச்சேரி வாசலுக்குப் போகின்ற பரிதாபம்*

*ஐயா! உன்னால் முடிந்ததை எடு*
*உன் வீடியோவுக்கு விளம்பரம் தேட*
*வித்தாகும் புதுக்குடும்பம்*
*விவாகரத்து எடுக்கும்*
*அபசகுனத்தைச் செய்யாதே!*

*வீடியோ பிடிக்கும் சோதரரே!*
*முன்னம் ஒரு (கிழ) வேதியர்*
*சுந்தரர் திருமணத்தை தடுத்து ஆட்கொண்டார்*
*இன்னமும் கட்டுகின்ற தாலியை*
*தடுத்து நிறுத்த உம்மையோ அவர்*
*அனுப்பி வைத்தார்*
*பணத்தையும் பெற்று*
*பொல்லாப் பழியையும் தேடாமல்*
*நடக்கின்ற மங்கல நிகழ்வைப்*
*பிடிக்கின்ற பயிற்சி இருந்தால்*
*வீடியோ எடும்; இல்லையேல்*
*வில்லங்கம் செய்யாமல் ஒதுங்கி*
*இருப்பதே உத்தமம் ஆகையால்*
*இக்குறை களைந்து*
*இல்வாழ்வு சிறக்கச் செய்வீர் வீடியோ படம்*

*-கூத்தனார்-*

# கணவனின் கத்திக்குத்தில் மனைவி உயிரிழப்பு!

(திருகோணமலை)

திருகோணமலை, கந்தளாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வெலிங்டன் வீதியில், கணவனின் கத்திக்குத்துக்கு இலக்காகி மனைவி, நேற்றுக் காலை உயிரிழந்துள்ளாரெனப் பொலிஸார் தெரிவித்தனர். குடும்பத் தகராறு காரணமாக இடம்பெற்ற இச்சம்பவத்தில், இரு பிள்ளைகளின் தாயான பௌசி தஸ்மியா (வயது-28) என்ற பெண்ணே உயிரிழந்துள்ளாரென பொலிஸார் தெரிவித்தனர்.

வீட்டிலிருந்து காலை 6 மணியளவில் ஆடைத்தொழிற்சாலைக்கு வேலைக்குச் செல்லும் போது, கணவனால் சரமாரியாகக் கழுத்திலும் வயிற்றிலும் கத்திக்குத்துக்கு இவர் இலக்காகியுள்ளாரெனப் பொலிஸார் தெரிவித்தனர்.

மனைவி ஆபத்தான நிலையில் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்துள்ளார் எனவும் கணவன் தலைமறைவாகியுள்ளாரெனவும் தெரிவித்த பொலிஸார், சந்தேக நபரான கணவனுக்கெதிராக வழக்கொன்றும் கந்தளாய் நீதிமன்றில் ஏற்கனவே நடைபெற்று வருவதாகவும் தெரிவித்தனர்.

தலைமறைவாகியுள்ள கணவனைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ள கந்தளாய் பொலிஸார், மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# கேபிள் இணைப்புக்களை அகற்றிய விவகாரம்; மாநகர சபைக்கு எதிரான வழக்கு தள்ளுபடி!

(யாழ்ப்பாணம்)

மாநகர சபைக்கோ மக்களுக்கோ இடையூறாக இருக்கும் கேபிள் இணைப்புக்களை அகற்றும் அதிகாரம் உள்ளூராட்சி மன்றுக்கு உண்டு எனத் தெரிவித்துள்ள யாழ்ப்பாணம் நீதிமன்று, மாநகரசபைக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கைத் தள்ளுபடி செய்துள்ளது.

யாழ்.மாநகர சபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளான நல்லூரிலிருந்து பருத்தித்துறை வரையிலான வீதியில் மாநகரசபையின் அனுமதியின்றி நடப்பட்டிருந்த கம்பங்களை அகற்றியிருந்தனர்.

இதனால் கம்பங்கள் நாட்டிய தனியார் நிறுவனத்தினர் பொலிஸில் முறையிட்டதையடுத்து யாழ்ப்பாணம் பொலிஸார், மாநகர சபைக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் குற்றப் பத்திரம் பொலிஸாரால் வாசிக்கப்பட்டு வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டது. எதிராளிகள் சார்பில் சட்டத்தரணிகளான பிரதீபன், கணாதீபன், ஜொனி மதுரநாயகம், மணிவண்ணன் ஆகியோரின் அனுசரணையில் சிரேஷ்ட சட்டத்தரணி இராஜரட்ணம் தனது சமர்ப்பணத்தின் போது மாநகர சபை கூட்டிணைந்த குழும அதிகார சபை, குற்றம் சாட்டப்பட்ட முதலாம் இரண்டாம் சந்தேக நபர்களுக்கு மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் அளிக்கப்பட்ட ஓர் அதிகாரத்தை நடைமுறைப்படுத்தினர்.

முதல்வருக்கே இதன் நிறைவேற்று அதிகாரம் உண்டு. மாநகர சபை ஆளுகைப் பகுதியில் மக்கள் பாதுகாப்பு, மேம்பாடு, வசதிவாய்ப்பு உட்படப் பல நிறைவேற்று அதிகாரங்கள் உள்ளன. கவனயீனமாக இருப்பின் சபை நடவடிக்கை எடுக்கலாம். பாதைகளில் ஏதாவது தடைகள் ஏற்படுத்தப்பட்டால் அந்தத் தடையை யார் செய்தாலும் வாய்மொழிமூலமாகவோ அல்லது எழுத்து மூலமாகவோ அறிவித்தல் வழங்கியும் கவனயீனமாக இருப்பின் அவற்றை அகற்றும் அதிகாரம் மாநகர சபைக்கு உண்டு என சுட்டிக்காட்டியிருந்தார்.

இருதரப்பு வாதங்களையும் பரிசீலித்த நீதவான் ஏ.எஸ்.பி. போல் மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளில் சபையின் அனுமதி இன்றி கம்பங்கள் நாட்ட முடியாது எனவும் முதல்வர் ஆணையாளர் தமது கடமைகளை செய்துள்ளார்கள் எனத் தெரிவித்து வழக்கை தள்ளுபடி செய்துள்ளார். (இ-9-10)

# மனித எலும்புக்கூடுகளின் மாதிரிகள் பலத்த பாதுகாப்புடன் இன்று கொழும்பிற்கு அனுப்பப்படும்

## சட்ட வைத்திய அதிகாரி சமிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு

(மன்னார்)

**மன்னார் மனிதப்புதைகுழியில் இருந்து அகழ்ந்தெடுக்கப்பட்ட மனித எலும்புக்கூடுகளின் மாதிரிகள் அமெரிக்காவிற்கு அனுப்பி வைக்க இன்று புதன்கிழமை காலை கொழும்பிற்கு கொண்டு செல்லப்பட இருப்பதாக அகழ்வுப்பணிக்கு பொறுப்பான சட்ட வைத்திய அதிகாரி சமிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**



குறித்த மனித புதைகுழியின் அகழ்வு பணிகள் நேற்று 134 ஆவது தடவையாக இடம் பெற்றது.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

குறித்த எலும்புக்கூடுகளின் மாதிரிகள் காபன் பரிசோதனைக்கு அனுப்புவது தொடர்பான கலந்துரையாடல் மன்னார் நீதவான் மற்றும் விசாரணைக்குழு அதிகாரிகள் இடையில் இடம்பெற்றது.

இந்த நிலையில் இன்று புதன் கிழமை காலை மனித எலும்புக்கூடுகளின் மாதிரிகள் மன்னார் நீதிமன்றத்தில் இருந்து கொழும்பு விமான நிலையத்திற்கு பலத்த பொலிஸ் பாதுகாப்புடன் கொண்டு செல்லப்படவுள்ளன.

விமான நிலையத்தில் இருந்து அமெரிக்காவின் புளோரிடாவிற்கு குறித்த பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இதுவரை குறித்த அகழ்வு பணிகளின் போது 300 மனித எலும்புக்கூடுகள் மீட்கப்பட்ட நிலையில் 294 மனித எலும்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் 23 மனித எலும்புக்கூடுகள் சிறுவர்களுடையது என அடையாளம் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2-285)




# வவுனியாவில் இராணுவக் கட்டுப்பாட்டிலிருந்த ஒரு தொகுதிக்காணிகள் நேற்று கையளிப்பு

(வவுனியா)

வடக்கில் இராணுவத்தின் வசமிருந்த மேலுமொரு தொகுதி காணிகள் மக்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

வவுனியா மாவட்டத்தில் இதுவரை காலமும் இராணுவ கட்டுப்பாட்டிலிருந்த அரச மற்றும் தனியார் காணிகளின் மேலுமொரு தொகுதி இராணுவத்தினால் மக்களிடம் மீண்டும் கையளிக்கப்பட்டுள்ளது.

இந்த காணிகளை கையளிக்கும் உத்தியோகபூர்வ நிகழ்வு வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் தலைமையில் நேற்று முற்பகல் வடக்கு ஆளுநர் செயலகத்தில் இடம்பெற்றது.

வன்னி இராணுவக் கட்டளை தலைமையகத்தை பிரதிநிதித்துவம் செய்து 56ஆவது படைப்பிரிவின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் பிரபாத் தெமட்டன்பிட்டிய காணி விடுவிப்பிற்கான பத்திரத்தை ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவனிடம் கையளித்தார்.

ஆளுநர் அதனை வவுனியா அரச அதிபர் ஐ.எம். ஹனீபாவிடம் கையளித்தார்.

இதனடிப்படையில் வன்னி இராணுவ கட்டளைத் தலைமையகத்தின் கீழ் வவுனியா மாவட்டத்தில் 40.74 ஏக்கர் அரச காணிகளும் 13.64 ஏக்கர் தனியார் காணிகளும் விடுவிக்கப்பட்டுள்ளன. (2)

# சுந்தரபுரம் அ.த.க.பாடசாலை கால்கோள்விழா

(வவுனியா)

வ/சுந்தரபுரம் அ.த.க. பாடசாலையின் கால்கோள் விழா அண்மையில் பாடசாலையில் 17-09-2019 அன்று அதிபர் ச.ஜேசுநேசனின் தலைமையில் நடைபெற்றது. நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வவுனியா கல்வியியற் கல்லூரி ஓய்வுநிலை பீடாதிபதி கு.சிதம்பரநாதன், சிறப்பு விருந்தினராக வெளிச்சம் அறக் கட்டளையின் தலைவர் பா.லம்போதரன், செயலாளர் தி.கார்த்திக் மற்றும் பாடசாலை அபிவிருத்தி சங்கத்தின் செயலாளர் ஆகியோர் கலந்து சிறப்பித்தார்கள். தரம் ஒன்றிற்கு மாணவர்கள் புதிதாக இணைந்து கொண்டனர். அவர்களுக்கு தரம் 2 மாணவர்கள் மாலை அணிவித்து அழைத்து சென்றனர். (2)



# நீராவியடி பிள்ளையார் ஆலய நிர்வாகம், பௌத்த துறவி விசாரணைக்கு அழைப்பு

## நாளை ஆஜராகுமாறு உத்தரவு

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு நாயாறு பகுதியில் உள்ள நீராவியடிப்பிள்ளையார் ஆலயத்தில் கடந்த 14 ஆம் திகதி செம்மலை கிராம மக்கள் வழிபாடு பூசைகள் நடத்தசென்ற வேளை அங்கு விகாரை அமைத்து குடியிருக்கும் பௌத்த துறவியும் தெற்கில் இருந்து வந்த பௌத்த துறவிகள் மற்றும் பெரும்பான்மை இனத்தை சேர்ந்த மக்கள் அங்கு சென்று பொங்கல் வழிபாடுகளில் ஈடுபட்ட தமிழ் மக்களுக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் சம்பவ இடத்திற்கு விரைந்த முல்லைத்தீவு பொலிஸார் சம்பவ நிகழ்வு அனைத்தினையும் ஒளிப்படம் எடுத்துள்ளதுடன் முறுகல் நிலைமேலும் வலுப்பெறாத சட்ட நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளார்கள்.

இது தொடர்பில் முல்லைத்தீவு பொலிஸ் நிலைய தலைமை பொறுப்பதிகாரியினால் மாவட்ட நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வழக்கு தொடர்பில் எதிர்வரும் 29 ஆம் திகதி விசாரணைக்கு வருமாறு முதலாம் தரப்பு நபராக பௌத்த துறவியினையும் இரண்டாம் தரப்புநபராக தமிழர் மரபுரிமை இணைத்தலைவர்களின் ஒருவரான வி.நவநீதன்,ஆலய நிர்வாகிகள் ஆகியோரை நீதிமன்றில் முன்னிலையாகுமாறு கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த வழக்கினை இரண்டாம் தரப்பு வாதிகளால் அவசர தன்மை கருதி முன்னகர்த்தல் பத்திரம் ஊடாக 22.01.19 அன்று நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளமைக்கு அமைவாக குறித்த வழக்கு விசாரணை நேற்று முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி எஸ்.லெனின்குமார் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

கடந்த 14 ஆம் திகதி பிள்ளையார் ஆலயத்திற்கு வழிபாட்டிற்காக சென்ற மக்களுக்கு பௌத்த பிக்குவால் ஏற்படுத்தப்பட்ட இடையூறு தொடர்பிலான புகைப்படங்களுடன் மற்றும் குறித்த பௌத்த விகாரை சட்டவிரோதமாகவே அமைக்கப்பட்டுள்ளது என்பதற்கான தகவல் அறியும் சட்டமூலம் பிரதேச செயலகத்தால் வழங்கப்பட்ட விபரங்கள் என்பனவும் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டு குறித்த வழக்கினை விரைவுபடுத்தி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளுமாறு சட்டத்தரணிகளால் முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த வழக்கு விசாரணை 24.01.19 அன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளவுள்ளதாக நீதிபதி உத்தரவிட்டுள்ளதுடன் அன்றைய தினம் முதலாம் தரப்பான பௌத்த பிக்குவினையும் மன்றில் முன்னிலையாகுமாறு பொலிஸாருக்கு பணிக்கப்பட்டுள்ளது. (2-281)

# வவுனியாவில் நடைபாதையில் வியாபாரம் செய்த மொத்த, சிறு வியாபாரிகளிடையே முறுகல்

## வீதியை மறித்து நேற்று போராட்டம்



(பனிக்கன்குளம்)

வவுனியாவில் சந்தை சுற்றுவட்ட வீதியின் இருபுறமும் பொது மக்களுக்கு இடையூறு ஏற்படுத்தி நடைபாதையில் வியாபாரம் மேற்கொண்ட மரக்கறி மொத்த வியாபாரிகள், சிறுவியாபாரிகள் ஆகியோருக்கு இடையில் நேற்றுக் காலை முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

வவுனியா இலுப்பையடி பகுதியிலுள்ள தினச்சந்தைக்கு முன்பாக உள்ள சந்தை சுற்று வட்ட வீதியில் நீண்ட நாட்களாக நடைபாதையில் மரக்கறி வியாபார நடவடிக்கை மேற்கொண்ட சிறு வியாபாரிகள் சிலர் நேற்று தமது வழமையான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். இந்நிலையில் தினச்சந்தை யிலுள்ள சிலரும் இவர்களுடன் வியாபார நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு முயற்சித்துள்ளபோது இரு பகுதியினருக்கும் இடையே முரண்பாடு ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் நேற்றைய தினம் இவ்விடயம் குறித்து நகர சபையினருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது.

அங்கு சென்ற நகரசபை உத்தியோகத்தர்கள் இரு பகுதியினரையும் சமாதானப்படுத்த முயற்சிகள் மேற்கொண்டதுடன் பொது நடைபாதையில் வீதியை மறித்து மரக்கறி வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டால் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

இதையடுத்து சிறுவியாபாரிகள் தமது எதிர்ப்பைத் தெரிவித் துள்ளதுடன் வீதியை மறித்து வாகனம் செல்லவிடாமல் படுத்துக் கொண்டனர். இதையடுத்து நகரசபை உத்தியோகத்தர்களின் பணிக்கு இடையூறுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இந்நிலையில் நிலைமையை கட்டுப்படுத்த பொலிஸாரின் உதவியும் பெற்றுக்கொள்ளப்பட்டு சுமார் ஒன்றரை மணி நேரத்தின் பின்னர் நகரசபை உத்தியோகத்தர்கள் நடைபாதையிலிருந்த மரக்கறிகளை தமது வாகனத்தில் ஏற்றிக்கொண்டு செல்ல முற்பட்ட போது நகரசபை உத்தியோகத்தர்களுடன் சிறுவியாபாரிகள் தர்க்கத்தில் ஈடுபட்டனர்.

நடைபாதையில் வியாபாரம் மேற்கொண்ட சுமார் 10இற்கும் மேற்பட்டவர்கள் நகரசபை வாகனத்தில் மரக்கறிப் பொருட்களுடன் ஏறிக்கொண்டனர். எனினும் நகரசபை வாகனம் பொலிஸ் நிலையத்தை அடைந்ததும் வாகனத்தில் சென்ற அனைவரும் இறங்கி தப்பி ஓடிச் சென்றுள்ளனர்.

இதையடுத்து கைப்பற்றப்பட்ட மரக்கறிகள் நகரசபையில் வைக்கப்பட்டதுடன் அப்பொருட்களை உரியவர்கள் வந்து பெற்றுக் கொள்ளுமாறு நகரசபை உத்தியோகத்தர்கள் நடைபாதை வியாபாரிகளிடம் தெரிவித்தபோது தமது பொருட்களை எடுத்துச் சென்ற இடத்திற்குக்கொண்டு வந்து தருமாறு கோரியுள்ளனர்.

இந்நிலையில் குறித்த சந்தை சுற்றுவட்ட வீதிக்கு பொலிஸார் பாதுகாப்பு பணிகளை மேற்கொண்டனர்.

வியாபாரிகளின் இக்கலவரத்தினால் ஹொறவப்பொத்தான வீதியுடனான போக்குவரத்து சற்று பாதிக்கப்பட்டதுடன் பொது மக்களுக்கும் இடையூறுகள் ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2-281)

## இரணைமடுக்குளம் புனரமைப்பில் ஈடுபட்ட நிறுவனம் வீதியை செப்பனிட்டுத் தரவில்லை

### இரணைமடு கமக்கார அமைப்பின் சம்மேளனச் செயலாளர் குற்றச்சாட்டு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி இரணைமடுக்குளத்தின் மக்கள் பயன்படுத்தும் வீதியை குளப்புனரமைப்பில் ஈடுபட்ட நிறுவனங்கள் புனரமைத்துத் தரவில்லையென இரணைமடுக் கமக்கார அமைப்பின் சம்மேளனச் செயலாளர் எஸ்.சிவமோகன் தெரிவித்துள்ளார். இக்குளமானது சுமார் 2 ஆயிரம் மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்ட போது குறித்த 2 அரைக் கிலோமீற்றர் நீளமான வீதியும் புனரமைக்கப்படுமென சம்பந்தப்பட்ட நிறுவனளங்களால் தெரிவிக்கப்பட்ட போது புனரமைக்கப்பட்டவில்லையெனத் தெரிவித்தார்.

குறித்த குளக்கட்டில் மூன்று வீதிகள் இருக்கின்ற போதிலும் அவை அசாதாரண நிலைமையின் போதும் விசேட தேவைகளுக்கேற்பவும் மக்கள் பயன்பாட்டிற்கு பயன்படுத்த முடியும். நான்காவது வீதியே நீண்டகாலமாக மக்கள் பயன்படுத்தும் வீதியாகக் காணப்படுவதாகத் தெரிவித்தார். இவ்விடயம் தொடர்பில் வடமாகாண ஆளுநர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

## இஞ்சிப் பயிர்ச்செய்கையில் பங்கசு நோய்த் தாக்கம்

### ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள் வருகை முல்லை. மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் தெரிவிப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு, உடையார்கட்டு ஆகிய விவசாயப் போதனாசிரியர் பிரிவுகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள இஞ்சிப் பயிர்ச்செய்கையில் பங்கசு நோய்கள், பீடைகள் அவதானிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் அறிவுரைகள், விளக்கங்கள் ஆகியவற்றை பயனாளிகளுக்கு வழங்குவதற்கு ஏற்றுமதி திணைக்கள ஆராய்ச்சி நிலையத்தில் இருந்து ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள் நேரடியாக இன்றும் நாளையும் வருகை தரவுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் பூ.உகநாதன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில், மேற்படி போதனாசிரியர் பிரிவுகளில் பெண்கள் தொழில் முயற்சியாளர் கூட்டுறவு சங்கத்திற்குட்பட்ட 52 பெண் பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு ஒவ்வொரு பயனாளிக்கும் 1/4 ஏக்கரில் விதைக்கக்கூடிய 100 கிலோ கிராம் இஞ்சிக் கிழங்குகள் வழங்கப்பட்டுள்ளன. அத்துடன் இவர்களுக்கு இரு நாட்கள் மாத்தளை மாவட்டத்தில் ஏற்றுமதி திணைக்கள சேவைக் கால பயிற்சி நிலையத்தில் பயிற்சிகள் வழங்கப்பட்டு பயிர்ச்செய்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்த இஞ்சிக்கிழங்குகள் பயனாளிகளுக்கு கடந்த 5 மாதங்களுக்கு முன்னர் வழங்கப்பட்டுள்ளன.

அத்துடன் தூவல் நீர்ப்பாசனத் தொகுதிகள், நீர் இறைக்கும் மின் மோட்டர்கள் என்பன மானிய அடிப்படையில் வழங்கப்பட்டு இச்செய்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அண்மையில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு காரணமாக இஞ்சிப் பயிரில் பங்கசு நோய்கள், பீடைகள் என்பன அவதானிக்கப்பட்டுள்ளது.

இவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு ஏற்றுமதி திணைக்கள ஆராய்ச்சி நிலையத்தில் இருந்து ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள் மேற்படி போதனாசிரியர் பிரிவுகளுக்கு இன்றும் நாளையும் வருகை தரவுள்ளார்கள்.

இவர்கள் குறித்த பகுதிகளுக்கு நேரடியாகச் சென்று பார்வையிட்டு பயனாளிகளுக்கு அறிவுரைகள் வழங்க வுள்ளதுடன் இஞ்சிப் பயிர்ச் செய்கை தொடர்பில் மேலதிக விளக்கங்களையும் கூறவுள்ளனர்.

இதற்கான நடவடிக்கைகளை முல்லைத்தீவு மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் முன்னெடுத்துள்ளார்.

ஆகவே இப் பயிற்சி நெறியில் இஞ்சி பயிர்ச் செய்கையில் ஈடுபடும் பயிர்ச் செய்கையாளர்கள், ஆர்வமுடையவர்கள் இன்றும் நாளையும் கலந்து பயன் பெற முடியும் என அவர் அறிவித்துள்ளார். (2)




### முல்லையில் கடந்தாண்டில்


## கஞ்சா விற்பனை, பாவனை குறித்து 130 வழக்குகள் பதிவு

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த 2018 ஆம் ஆண்டு கஞ்சா விற்பனை மற்றும் பாவனை தொடர்பில் 130 வழக்குகள் பதிவாகியுள்ளன.

இவற்றில் புதுக்குடியிருப்பில் 24 வழக்குகளும் முள்ளியவளையில் 32 வழக்குகளும் வெலிஓயாவில் 26 வழக்குகளும் முல்லைத்தீவில் 21 வழக்குகளும் மாங்குளத்தில் 13 வழக்குகளும் மல்லாவியில் 9 வழக்குகளும் ஒட்டுசுட்டானில் 5 வழக்குகளும் கடந்த 2018 ஆம் ஆண்டு பதியப்பட்டு நீதிமன்றில் முன்னிலைப்படுத்தி சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன் மேலும் ஒருவர் ஹெரோயினுடன் கைது செய்யப்பட்டு சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் நிலைய தகவல்கள் தெரிவிக்கின்றன. (2-315)

## தொழில்நுட்ப கலை, கலாசார பெண்கள் மேம்பாட்டு அமையம் திறந்து வைப்பு





(கண்டாவளை)

முல்லைத்தீவு மல்லாவி யோகபுரம் பகுதியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட தொழில்நுட்ப கலை கலாசார மற்றும் பெண்கள் மேம்பாட்டு அமையத்தின் புதிய கட்டடத் திறப்பு விழா நேற்று முன்தினம் பிற்பகல் 2 மணியளவில் நடைபெற்றுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் பாண்டியன்குளம் பிரதேச மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படு த்தும் வகையில் தொழிற் பயிற்சிகளை வழங்கும் நோக்கில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட தொழில்நுட்ப கலை கலாசார மற்றும் பெண்கள் மேம்பாட்டு மையத் தின் புதிய கட்டடத் திறப்பு விழா நடைபெற்றுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் கலந்து கொண்டு கட்டடத்தை திறந்து வைத்துள்ளார். (2-315)

## மன்னார் பிரதான பாலத்தில் கழுதை கூட்டங்களால் போக்குவரத்தில் விபத்து

(மன்னார்)

மன்னார் பிரதான பாலத்தில் இரவு-பகல் பாராது கூட்டமாகத் திரியும் கழுதைகள் அதிகரித்து காணப்படுவதனால் வாகனங்களில் பயணிப்பவர்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம்கொடுத்து வருவதாகத் தெரிவிக்கின்றனர்.

இதனால் மோட்டார் சைக்கிள் மற்றும் ஏனைய வாகனங்களில் மன்னாருக்கு வருபவர்களும் மன்னாரில் இருந்து பிரதான பாலத்தினூடாக வேறு இடங்களுக்கு செல்பவர்களும் பல்வேறு அசௌகரியங்களுக்கு உள்ளாகுவதோடு, விபத்துகளுக்கும் முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே பிரதான பாலத்தில் சுற்றித்திரிகின்ற கழுதைகளைப் பிடித்து வேறு இடங்க்ளில் விட உரிய அதிகாரிகள் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை மன்னார் நகர் பகுதியில் மக்களுக்கு இடையூறாக, விபத்துக்களை ஏற்படுத்தும் வகையில் திரிந்த சுமார் 70 இற்கும் மேற்பட்ட கழுதைகளை மன்னார் நகர சபையினர் பிடித்து மாற்று இடம் ஒன்றிற்கு கொண்டு சென்று விட்டுள்ளனர்.

இதனால் மன்னார் நகர் பகுதியில் கழுதைகளின் பிரச்சினைகள் குறைவடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-285)

## செயலிழந்துள்ள அரிசியாலையை தனியாருக்கு வழங்க நடவடிக்கை

### துணுக்காய் ப.நோ.கூ.சங்கத்தின் நிர்வாகத்தினர் தெரிவிப்பு



(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் பகுதியில் பல மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திடம் கையளிக்கப்பட்டும் செயலிழந்த நிலையில் காணப்படுகின்ற அரிசியாலையை தனியாருக்கு குத்தகைக்கு வழங்க ஆலோசிக்கப்பட்டு வருவதாக துணுக்காய் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் நிர்வாகத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் விவசாயிகளிடமிருந்து துணுக்காய் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் ஊடாக நெல்லைக் கொள்வனவு செய்து அரிசி உற்பத்தியை மேற்கொள்ளும் பொருட்டு முன்மொழியப்பட்ட திட்டத்திற்கு அமைவாக துணுக்காகப் பகுதி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்திற்கு கடந்த 2014 ஆம் ஆண்டு யு.என்.எச்.சி.ஆர்.நிறுவனத்தினால் பல மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திடம் கையளிக்கப்பட்ட அரிசியாலை இன்று வரை இயங்காத நிலையில்காணப்படுகின்றது.

குறித்த அரிசியாலையில் இயங்க வைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தொடர்ச்சியாக கோரிக்கை விடுத்தபோதும் இதுவரை எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இது தொடர்பில் பலநோக்குக்கூட்டுறவுச் சங்கத்திடம் தொடர்பு கொண்டு வினவிய போது, குறித்த அரிசியாலையை உடனடியாக இயக்கக்கூடியதாக இல்லை. தனியாருக்கு முதற்கட்டமாக குத்தகைக்கு வழங்குவதற்கு தீர்மானித்திருக்கின்றோம்.

அவ்வாறு தனியாருக்கு குத்தகைக்கு வழங்குவதற்கு தீர்மானித்திருக்கின்றோம் என்றும் சங்க நிர்வாகம் தெரிவித்துள்ளது. (2-315)

# பாரதம்

## படகு கவிழ்ந்து விபத்து எட்டுப் பேர் உயிரிழப்பு!

(பெங்களூர்)

கர்நாடக மாநிலத்தில் நேற்று முன்தினம் 20 இற்கும் அதிகமானவர்களுடன் சென்ற படகு ஆற்றில் கவிழ்ந்த விபத்தில் 8 பேர் உயிரிழந்தனர். மீதமுள்ளவர்களை தேடும் பணி நடைபெற்று வருகிறது.



கர்நாடக மாநிலம், கார்வார் மாவட்டத்தை சேர்ந்த 20 இற்கும் அதிகமானவர்கள் அருகாமையில் உள்ள தீவில் அமைந்துள்ள ஒரு கோவிலில் சாமி தரிசனம் செய்வதற்காக படகில் சென்றனர்.

தரிசனம் முடிந்து கலி ஆற்றின் வழியாக நேற்று முன்தினம் திரும்பியபோது எதிர்பாராதவிதமாக அந்தப் படகு ஆற்றில் கவிழ்ந்தது.

இந்த விபத்து பற்றிய தகவல் அறிந்ததும் கடலோரக் காவல் படையினர் அந்த இடத்துக்கு விரைந்து சென்று, கோவா வரையிலான கடல் பகுதிக்கு இடையில் தேடுதல் மற்றும் மீட்புப்பணியில் ஈடுபட்டனர்.

8 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதாகவும், காணாமல் போனவர்களைத் தேடும் பணி நடைபெற்று வருவதாகவும் மீட்புப்படையினர் தெரிவித்தனர். (4-7)

## ஆப்கானில் தலிபான்
## உயிரிழப்பு 130 ஆ



(காபூல்)

ஆப்கானிஸ்தானில் தலிபான் தீவிரவாதிகளினால் மேற்கொள்ளப்பட்ட குண்டுத்தாக்குதலில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 130 ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை மேலும் அதிக்கரிக்கக் கூடும் எனவும் அஞ்சப்படுகின்றது.

ஆப்கானிஸ்தானின் மைடான் வர்தாக் மாகாணத்தில் பயங்கரவாதிகளுக்கு எதிராக தாக்குதல்களை மேற்கொண்டு வரும் பணியில் ஈடுபட்டு வரும் இராணுவம்

## அரசியல் இலாபம் தேடுவதில் மு.க.ஸ்ராலின் குழம்பியுள்ளார்

### ஓ.பன்னீர்செல்வம் தெரிவிப்பு

(மதுரை)

தி.மு.க.தலைவர் மு.க.ஸ்ராலின் அரசியல் இலாபம் பெறுவதில் குழம்பி போயுள்ளதாகத் தமிழக துணை முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் 'தெரிவித்துள்ளார்.

மதுரையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

"எந்த பக்கம் தாவினால் அரசியல் இலாபம் ஈட்டலாம் என்பதில் மு.க.ஸ்ராலின் குழம்பி போயுள்ளார்.

அந்தவகையில் அண்மையில் காங்கிரஸ் கட்சி தலைவர் ராகுல் காந்தியை தமிழகத்துக்கு அழைத்து வந்து அவரை பிரதமராக அறிவித்தார்.

அதேபோன்று நேற்று அவர்களுடன் கூட்டணியில் இணைந்துள்ள மேற்கு வங்க முதலமைச்சர் மம்தா பானர்ஜி உள்ளிட்ட ஏனைய கட்சி தலைவர்கள் 28 பேர் உள்ளடங்கலாகக் கலகத்தாவில் பாரிய கூட்டமொன்றை நடத்தியிருந்தனர்.



அக்கூட்டத்திலும் ஸ்ராலின் கலந்துகொண்டுள்ளார்.

இவ்வாறு ஸ்ராலின் செயற்படுவதனை பார்க்கும்போது, அரசியல் இலாபத்தை பெற்றுகொள்வதற்கான முயற்சியில் ஈடுபடுகிறார் என்பது உறுதியாகின்றது" என ஓ.பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார். (4-7)

## சரக்குக் கப்
## 11 பேர் உ


(கிரிமியா)

ரஷ்யாவுடன் இணைந்த கிரீமியாவில் 2 சரக்கு கப்பல்களில் தீ விபத்து ஏற்பட்ட சம்பவத்தில் 11 பேர் பலியாகி விட்டனர்.

ரஷ்யா-உக்ரேய்ன் நாடுகளுக்கு இடையே கெர்ச் ஜலசந்தி உள்ளது. இங்குள்ள கிரீமியா உக்ரேய்னில் இருந்தது. கடந்த 2004 ஆம் ஆண்டு ரஷ்யாவுடன் இணைந்தது.

நேற்று முன்தினம் அங்குள்ள கெர்ச் துறைமுகத்தில் தான்சானியா நாட்டின் 2 சரக்கு கப்பல்கள் நிறுத்தப்பட்டிருந்தன. அதில் கியாஸ் டேங்கர் கப்பலில் இருந்து மற்றொரு கப்பலுக்கு எரிபொருள் நிரப்பப்பட்டது.


அப்போது திடீரென தீப்பிடித்தது. அந்த தீ 2



கப்பல்களுக்கும் பரவியது. இதனால் அங்கு பதற்றமும், பரபரப்பும்ஏற்பட்டது.

### சபரிமலை விவகாரம்

## கேரள அரசு மீதான வழக்கு ஒத்திவைப்பு



(டில்லி)

சபரிமலை விவகாரம் தொடர்பான வழக்கு விசாரணைகளை உயர் நீதிமன்றத்துக்கு மாற்றக்கோரிய கேரள அரசின் மனு எதிர்வரும் 8 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

குறித்த மனுவை 5 நீதிபதிகள் அடங்கிய அமர்வு நேற்றுச் செவ்வாய்க்கிழமை விசாரணை நடத்துமென தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால், இந்த அமர்வில் இடம்பெற்றிருந்த நீதிபதி இந்து மல்கோத்ரா விடுமுறையில் சென்றுள்ளமையால் எதிர்வரும் 8 ஆம் திகதிக்கு மனு மீதான வழக்கு விசாரணைகள் நடைபெறுமென உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி ரஞ்சன் கோகாய் நேற்றுத் தெரிவித்துள்ளார்.

சபரிமலை கோயிலுக்கு அனைத்து வயது பெண்களையும் அனுமதிக்க வேண்டுமென உயர் நீதிமன்றம் வழங்கிய உத்தரவை மறுசீராய்வு செய்யக் கோரி ஏராளமான மனுக்கள் ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (4-7)

## விமானத்தாக்குதல் 11 பேர் உயிரிழப்பு



(டமாஸ்கஸ்)

சிரியா நாட்டில் உள்ள ஈரான் இராணுவ முகாம்களை குறிவைத்து நேற்று முன்தினம் இஸ்ரேல் விமானப்படை நடத்திய ஆவேச தாக்குதலில் 11 பேர் உயிரிழந்தனர்.

சிரியா நாட்டின் எல்லைப்பகுதியில் இருந்து நேற்று முன்தினம் அதிகாலை இஸ்ரேல் நாட்டின் கோலன் ஹைறட்ஸ் பகுதி மீது ஏவுகணைகள் மூலம் தாக்குதல் நடத்தப்பட்டது.

இதனால் ஆவேசமடைந்த இஸ்ரேல் அரசு சிரியா நாட்டின் தலைநகரான டமாஸ்கஸ் நகரில் உள்ள உள்நாட்டு மற்றும் ஈரான் நாட்டின் இராணுவ முகாம்களைக் குறிவைத்து போர் விமானங்கள் மூலம் அதிரடியாகத் தாக்குதல் நடத்தியது.

டமாஸ்கஸ் விமான நிலையம் அருகாமையிலும் சுற்றுப்புறப் பகுதிகளிலும் நடந்த இந்த தாக்குதலில் அரசுக்கு ஆதரவான படையினர் உட்பட 11 பேர் உயிரிழந்தனர்.(4-7)


## விமானம் விபத்து இருவர் உயிரிழப்பு

(வோஷிங்டன்)

அமெரிக்காவின் ஓகியோ மாநிலத்தில் சிறு ரக விமானம் புறப்பட்ட சிறிது நேரத்தில் தரையில் விழுந்து நொருங்கியதில் 2 பேர் உயிரிழந்தனர்.

நேற்று அமெரிக்காவின் ஓகியோ மாநிலம், வாய்னே கவுண்டியில் மிகப் பழைமையான சிறிய விமானம், புறப்பட்ட சிறிது நேரத்தில் விபத்தில் சிக்கியது. கிளப்லேண்டில் இருந்து 60 கி.மீ. தெற்கில் விமானம் சென்ற போது, கட்டுப்பாட்டை இழந்து தரையை நோக்கி பாய்ந்தது.

மரங்கள் மற்றும் மின் கம்பங்களில் மோதி, பின்னர் ஒரு வீட்டின் முன்னால் விழுந்து நொறுங்கியது. நேற்று முன்தினம் காலை




இந்த விபத்து ஏற்பட்டது. இதில், விமானத்தில் இருந்த 2 பேரும் உயிரிழந்தனர். அவர்கள் இருவரும் ஆப்பிள் கிரீக் பகுதியைச் சேர்ந்தவர்கள்.

விபத்துக்குள்ளான விமானம், 76 ஆண்டுகள் பழைமையானது. என்ஜின்கோளாறு காரணமாக விபத்து ஏற்பட்டிருக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-7)



# வெளிநாடு



## ...பான்கள் தாக்குதல் ... ஆக அதிகரிப்பு!



மற்றும் பொலிஸாரைக் கொண்ட சிறப்புப்படை அலுவலகம் இயங்கி வருகிறது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலை குறித்த பகுதியில் தலிபான்கள் கார் குண்டுத்தாக்குதல் மேற்கொண்டனர்.

இதன்போது ஆரம்பத்தில் 20 பேர் உயிரிழந்ததாக கூறப்பட்டது. எனினும் தற்போது 130 பேர் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக் கூடும் எனவும் அஞ்சப்படுகின்றது. (4-7)

## சிரியாவில் ஸ்தாபிக்கப்பட்ட ஈரான் இலக்குகள் மீது இஸ்ரேல் வான் தாக்குதல்

(டமாஸ்கஸ்)

சிரியாவில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள ஈரானின் இலக்குகளை தொடர்ச்சியாக தாக்குவதற்கு ஆரம்பித்துவிட்டதாக இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது.

ஈரானிய புரட்சிப் படையின் சிறப்பு பிரிவான குட்ஸ் படைக்கு எதிராக தங்களின் தாக்குதல் நடவடிக்கை அமைந்ததாக இஸ்ரேல் பாதுகாப்பு படை பிரிவு (IDF) குறிப்பிட்டுள்ளது. இது குறித்து மேலதிகமாக எந்த தகவலையும் இஸ்ரேல் இராணுவம் வெளியிடவில்லை.

கடந்த ஞாயிற்றுக்கிழமை சிரியாவில் உள்ள கோலான் மலை பகுதியின் உச்சியில் உள்ள இலக்குகளில் இருந்து செலுத்தப்பட்ட ஒரு எறிகணையை தாங்கள் இடைமறித்ததாக இஸ்ரேல் பாதுகாப்புப் படைப் பிரிவு தெரிவித்தது.

இதேவேளையில், தமது நாட்டின் வான் பாதுகாப்புப் பிரிவு இஸ்ரேலின் வான் வழி தாக்குதல் ஒன்றை முறியடித்துள்ளதாக சிரியாவின் அரசு ஊடகமான சனா குறிப்பிட்டுள்ளது.

இந்தநிலையில், நேற்று முன்தினம் வெளியிடப்பட்ட டுவிட்டர் செய்தியில், "சிரியா பிராந்தியத்தில் ஈரானை சேர்ந்த குட்ஸ் படைகளின் இலக்குகளை தாக்க ஆரம்பித்துவிட்டோம்" என்று தகவல் வெளியிட்டுள்ளது. இதனிடையே, கடந்த ஞாயிற்றுக்கிழமை சாட் நாட்டுக்கு சென்றிருந்த இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாஹு ஒரு எச்சரிக்கையை விடுத்திருந்தார்.



"சிரியாவில் மூர்க்கத்தனமாக செயற்பட்டுக்கொண்டிருக்கும் ஈரான் குழுவை இலக்காகக் கொள்ளவும், எங்கள் நாட்டுக்கு தீங்கு விளைவிக்கும் எவரையும் அழித்திடும் பணியில் ஈடுபடவும் நாங்கள் கொள்கை வகுத்துள்ளோம்" என்று அவர் தெரிவித்திருந்தார்.

டமாஸ்கஸில் இந்த தாக்குதல் சம்பவத்தை கண்ட சில சாட்சிகள், இரவில் பலத்த வெடிப்பு சத்தங்கள் கேட்டதாக தெரிவித்தனர். இந்த தாக்குதல் சம்பவம் ஏற்படுத்தியுள்ள சேதங்கள் மற்றும் பாதிப்புகள் குறித்து இதுவரை முழுமையாக தகவல் வெளியிடப்படவில்லை. (7-8)

## ... கப்பல்களில் தீ ... உயிரிழப்பு!



அதைத் தொடர்ந்து ரஷ்ய மீட்பு படையினர் விரைந்து சென்றனர்.

2 கப்பல்களிலும் மொத்தம் 31 பேர் இருந்தனர். அவர்களில் 17 பேர் ஊழியர்கள், 14 பேர் பயணிகள்.

இவர்களில் இதுவரை 14 பேர் மட்டுமே மீட்கப்பட்டுள்ளனர். மற்றவர்களை மீட்கும் பணி நடைபெற்று வருகிறது. இதற்கிடையே 11 பேர் சடலமாக மீட்கப்பட்டனர். அவர்களில் 3 பேர் தண்ணீரில் மூழ்கி பலியாகி விட்டனர். ஏனையவர்கள் உயிர்பிழைக்க கடலில் குதித்த போது மரணத்தை தழுவினர். (4-7)

## பெற்றோல் குழாய் வெடிப்பு உயிரிழப்பு 90 ஆக உயர்வு



(மெக்சிகோ சிட்டி)

மெக்சிக்கோவில் பெற்றோல் குழாய் வெடித்து தீப்பிடித்த விபத்தில், படுகாயமடைந்த மேலும் சிலர் உயிரிழந்ததையடுத்து, பலி எண்ணிக்கை 90 ஆக உயர்ந்துள்ளது.

மெக்சிக்கோவின் ஹிடால்கோ மாநிலத்தில் சட்டவிரோதமாகப் பெற்றோல் கொண்டு செல்லப்பட்ட குழாயில் கடந்த வெள்ளிக்கிழமை கசிவு ஏற்பட்டது.

அதில் இருந்து வெளியேறிய பெற்றோலை பொதுமக்கள் கான்கள், வாளிகள் மற்றும் பாத்திரங்களில் பிடித்துக் கொண்டிருந்தனர். அப்போது திடீரென பெற்றோல் குழாய் வெடித்து தீப்பிடித்தது. அதில் சிக்கி ஏராளமானோர் கருகினர்.

இந்த விபத்தில் 20 இற்கும் மேற்பட்டோர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். ஏராளமானோர் பலத்த தீக்காயங்களுடன் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் பலர் சிகிச்சை பலனின்றி பலியாகினர். இதனால் உயிரிழப்பு அதிகரித்தது.

இந்நிலையில், காயமடைந்தவர்களில் மேலும் சிலர் நேற்று முன்தினம் உயிரிழந்தனர். இதனையடுத்து பைப்லைன் தீ விபத்தில் உயிரிழப்பு 90 ஆக உயர்ந்துள்ளது. 52 பேர் பலத்த தீக்காயங்களுடன் பல்வேறு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மெக்சிக்கோவில் கடந்த ஆண்டு மட்டும் 14,894 இடங்களில் சட்டவிரோத பெற்றோல் குழாய்கள் கண்டுபிடிக்கப்பட்டதாக அரசு கூறியுள்ளது குறிப்பிடத்தக்கது. (4-7)

## தன்னை ஜனாதிபதியாக அறிவித்த எதிர்க்கட்சி வேட்பாளர் மார்ட்டின்

(கொங்கோ)

கொங்கோ குடியரசின் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்ட எதிர்க்கட்சி வேட்பாளர் மார்ட்டின் ஃபயுலூ தன்னை ஜனாதிபதியாக அறிவித்துள்ளார்.

அத்துடன் கடந்த ஞாயிற்றுக்கிழமை அவரது எதிர்த்தரப்பு வேட்பாளர் வெற்றிபெற்றதாக நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட தீர்ப்பையும் அவர் நிராகரித்துள்ளார்.

இந்தநிலையில் தற்போதுள்ள நெருக்கடிகளை மேலும் தூண்டிவிடும் விதமாக தானே ஜனாதிபதி தேர்தலில் அதிகபடியாக வாக்குகளைப் பெற்றுள்ளதாக ஃபயுலூ தெரிவித்துள்ளார்.

"தவறான தேர்தல் முடிவுகளை உறுதிப்படுத்துவதன் மூலம், அரசியலமைப்பு நீதிமன்றம் ஒரு சர்வாதிகார ஆட்சிக்கு உதவுவதாக உறுதிப்படுத்தியுள்ளது.

இது ஒரு அரசியலமைப்பு சதித்திட்டம்" என்று அவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை செய்தியாள



ர்கள் மத்தியில் உரையாற்றிய போது குற்றம்சுமத்தியுள்ளார்.

ஏற்கனவே, வெலிக்ஸ் ஷிசெ கெடி அண்மையில் இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்றதாக கடந்த ஞாயிற்றுக்கிழமை அறிவித்தது.

அவருக்கு எதிராக இருந்த இரண்டு சவால்கள் முடியறிக்கப்பட்ட நிலையில் இந்த தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. (7-8)

## பேருந்து-லொறி மோதல் முப்பது பேர் உயிரிழப்பு

(குவெட்டா)

பாகிஸ்தானில் உள்ள பலுசிஸ்தானில் பேருந்து ஒன்றின் மீது டீசல் லொறி மோதி தீப்பிடித்த விபத்தில் 30 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

பாகிஸ்தானின் கராச்சியில் இருந்து, பலுசிஸ்தான் மாகாணம் பஞ்சகர் பகுதிக்கு நேற்று முன்தினம் இரவு பயணிகள் பேருந்து சென்று கொண்டிருந்தது. இந்த பேருந்தில் சுமார் 40 பயணிகள் பயணித்துள்ளனர். பலுசிஸ்தானின் தொழில் நகரமான ஹப் அருகே சென்றபோது, எரிபொருள் ஏற்றி வந்த லொறியுடன் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானது.



எதிரே வந்த டிரக்கில் ஈரானிய டீசல் இருந்ததால் விபத்தின்போது பயங்கர தீவிபத்து ஏற்பட்டது. பயணிகள் தங்கள் உயிரை காப்பாற்ற பேருந்தில் இருந்து தப்பிக்க முயன்றனர்.

ஆனால், தீப்பிழம்புகள் பேருந்தில் வேகமாக பரவியதால் வெளியேற முடியாமல் சிக்கிக் கொண்டனர்.

இந்த துயரச் சம்பவத்தில் இதுவரை 30 பேர் உடல் மீட்கப்பட்டுள்ளதாகவும், தொடர்ந்து மீட்பு நடவடிக்கைகள் நடைபெற்று வருவதாகவும் லாஸ்பேலா துணை ஆணையாளர் ஷபீர் மெங்கல் தெரிவித்துள்ளார்.

மேலும் 10 பேர் படுகாயத்துடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதில் 6 பேர் கவலைக்கிடமான நிலையில் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஏதீ அறக்கட்டளையின் ஒரு மீட்பு அதிகாரி தெரிவிக்கையில், போதிய வசதிகள் மற்றும் அம்புலன்ஸ்கள் இல்லாததால், காயமடைந்தவர்களை நீண்ட தாமதத்திற்கு பின்னரே கராச்சி வைத்தியசாலைக்குக்கொண்டு செல்லப்பட்டதாகத் தெரிவித்தார்.

மீட்கப்பட்ட உடல்கள் அடையாளம் தெரியாத அளவுக்குத் தீயில் கருகியிருப்பதாகவும் அதிகாரிகள் மேலும் தெரிவித்துள்ளார்கள். (4-7)

# இந்தியாவுடன் இருதரப்பு ஒப்பந்தம்





(ஏறாவூர்)

மட்டக்களப்பு சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கை நிலையத்திற்கு 275 மில்லியன் ரூபாய் இந்திய அரசாங்கத்தின் நிதியுதவியில் நவீன உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான இருதரப்பு புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று இந்தியாவுடன் நேற்று முன்தினம் திங்கட்கிழமை கைச்சாத்திடப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கிழக்குப் பல்கலைக்கழகத்தின் அங்கமான சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கை நிலையத்திற்குரிய உட்கட்டமைப்பு வசதிகளை நவீனமயப்படுத்துவதற்கான உதவிகளைப் பெற்றுக் கொள்ளும் நோக்கிலேயே மேற்படி இருதரப்பு புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

குறித்த ஒப்பந்தம் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் தரன்ஜித் சிங் சந்து மற்றும் நகர திட்டமிடல், நீர்வழங்கல் மற்றும் உயர்கல்வி அமைச்சின் செயலாளர் எம்.எம்.பி.கே. மாயாதுன்ன ஆகியோருக்கிடையில் கைச்சாத்திடப்பட்டது. இதன்போது நகரத் திட்டமிடல், நீர்வழங்கல் மற்றும் உயர்கல்வி அமைச்சரான ரவூப் ஹக்கீம் மற்றும் அமைச்சின் உயரதிகாரிகள் உடனிருந்தனர். (இ-7)

# ஜனாதிபதி கொலைச்சதி குறித்து நாமலிடம் இன்று விசாரணை!



(கொழும்பு)

மிக முக்கிய பிரமுகர்களை படுகொலை செய்வதற்கான சதி முயற்சி குறித்து பர்ராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ இன்று சி.ஐ.டியினரிடம் வாக்கு மூலம் அளிக்கவுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோரைப் படுகொலை செய்வதற்கான சதி தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள இந்தியப் பிரஜை வழங்கிய வாக்கு மூலங்கள் குறித்து விசாரணை செய்வதற்காகவே சி.ஐ.டியினர்தன்னை அழைத்துள்ளனர் என நாமல்ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இந்தியப் பிரஜை தெரிவித்த விடயங்கள் தொடர்பில் நாமல் ராஜபக்ஷ,விமல் வீரவன்ச,விமல்வீரவன்சவின் மனைவி ஆகியோரை விசாரணை செய்வதற்காக குற்றப்புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றத்தின் அனுமதியைப் பெற்றுள்ளனர்.

ஜனாதிபதி கொலைச் சதி முயற்சி தொடர்பில் கைதுசெய்யப்பட்டுள்ள இந்தியப் பிரஜை தான் நாமல் ராஜபக்ஷவுடன் தொடர்பு வைத்திருந்ததாகவும் விமல் வீரவன்சவின் வீட்டிற்குச் சென்றிருந்ததாகவும் தெரிவித்துள்ளார் என தகவல்கள் வெளியாகியுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# பிரதேச சபை உப தவிசாளர் கைது!

(புத்தளம்)

புத்தளம் பிரதேச சபையின் உப தவிசாளரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

புத்தளம் பிரதேச சபைக்குட்பட்ட வீதியொன்றில் வெட்டப்பட்ட குழியொன்றில் வீழ்ந்து ஒருவர் உயிரிழந்த சம்பவம் தொடர்பிலேயே அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குறித்த வீதியைப் புனரமைக்கும் பணி உப தவிசாளர் தலைமையில் முன்னெடுக்கப்பட்டபோது, அது தொடர்பான முன்னெச்சரிக்கை அறிவித்தல் பதாகை காட்சிப்படுத்தப்படாதமையால் இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாகக் குற்றம் சாட்டப்பட்டே அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைப் பிரதிநிதித்துவப் படுத்தும் புத்தளம் பிரதேச சபையின் உப தவிசாளரான ஜயம்பதி மதுராஜ் என்பவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். (இ-7)

# ஆட்டோ கட்டுப்பாட்டுக்கு புதிய அதிகார சபை



(கொழும்பு)

ஆட்டோ கட்டுப்பாட்டுக்குப் புதியதொரு அதிகார சபையை நிறுவுவதாக போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்தார்.

அதன் பிரகாரம் வீதிப் பாதுகாப்பு தொடர்பான தேசிய சபையை எதிர்காலத்தில் அதிகார சபையாக மாற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

ராகமை நகரை ஆட்டோக் கட்டுப்பாட்டுப் பகுதியாக நேற்று முன்தினம் காலை அறிவிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

ஆட்டோக் கட்டுப்பாட்டு வலயத்தை நிறுவும் தேசிய வேலைத்திட்டம் முதன் முதலில் கொழும்பு மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

அதனடிப்படையில் ராகமையில் இரண்டாவது நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது. இந்நிகழ்வின் கீழ் ராகமை நகரிலுள்ள ஆட்டோ சாரதிகளுக்கான ஓய்வூதிய முறையொன்றை அறிமுகம்செய்தல், 25 வருடங்களுக்கு மேலாக தொடர்ச்சியாக ஆட்டோ சாரதியாகச் செயற்பட்டவர்களைக் கௌரவித்தல், இடம்பெற்றதோடு இந்நிகழ்வின் விசேட அம்சமாக 50 ஆட்டோ சாரதிகளுக்குச் சுற்றுலாத்துறை அனுமதிப்பத்திரமும் வழங்கப்பட்டது. (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## எரிபொருள் தரும் தாவரங்கள்

எதையும் எரிக்கிறதுக்கு நாம் தயாராகத்தான் இருக்கிறோம். ஆனால் எரிபொருள்தான் சரியா கிடைக்கிறதில்லை.

பெற்றோல்–மண்ணெண்ணெய் இதற்கொல்லாம் என்ன பாடுபட வேண்டியிருக்கு!

அங்கே இங்கே பூமியைத் தோண்டிப் பார்த்து கிடைத்த வரைக்கும் எடுத்துக்கொண்டிருக்கிறோம். அதற்கான செலவும் அதிகமாகிக் கொண்டே போகிறது. இன்னும் நூறு வருடத்திலே பூமியிலே இருக்கிற எண்ணெயே தீர்ந்து விடும் என்கிற பயம் வேறு இருக்கிறது. அதனாலே இதுக்குப் பதிலா வேறு என்ன செய்யலாம் என்கிற ஆராய்ச்சி மும்முரமாக நடந்துகொண்டிருக்கிறது.

அமெரிக்காவிலே கலிபோர்னியா பல்கலைக்கழகத்திலே மெல்வின் கால்வின் (Melvin Kalvin) என்று பேராசிரியர்.

சுலபமாக கிடைக்கக்கூடிய ஏராளமான தாவரங்களிலேயிருந்து எரி எண்ணெய்களை எடுக்கலாம் என்று அவர் கண்டு பிடித்திருக்கிறார்.

பிரேசிலிலே அமேசான் பகுதியிலே ஒரு அதிசயமான மரம் இருக்குதாம். அந்த மரத்துக்கு பேரு கோபைஃபெரா மல்டிஜுகா (Copaifera Multijuga) இறப்பர் மரத்தியிருந்து இறப்பர் பாலை எடுக்கிறோம் அல்லவா அதேமாதிரி இந்த மரத்திலே இருந்து எண்ணெய் எடுக்கலாமாம்.

அதனால் இந்த வகை மரங்களை அதிகளவிலே வளர்ப்பதற்கு முயற்சி செய்கிறார்களாம்! நல்லா வளர்ந்த ஒரு பெரிய மரத்திலே ஒரு ஓட்டை போட்டிட வேண்டியது! அதிலேயிருந்து எண்ணெய் அதுபாட்டுக்கு வந்துகொண்டே இருக்கும்.

ஒரு நாளிலே 25 லீற்றர் வரைக்கும் எண்ணெய் கிடைக்குமாம்.

அதன்பின்பு ஒரு தக்கையாலே அந்த ஓட்டையை மூடிவிட வேண்டியது. ஆறு மாதத்திற்குப் பிறகு மறுபடியும் எண்ணெய் கிடைக்குமாம்.

இந்த எண்ணெய்க்குப் பேர் கோபைபா (Copaiba) எண்ணெய்.

அதை அப்படியே டீசல் எஞ்சினிலே ஊற்றி ஓட்டலாமாம்.

இதை காய்ச்சி வடித்தால் பலவிதமாக உபயோகப்படுத்தலாம்!

பிலிப்பைன்சிலே "பிட்டோஸ் போரம் ரெசினிஃபெரம்" என்று ஒரு மரம். அதிலேயிருந்தும் எண்ணெய் கிடைக்குதாம்! அந்த பழத்திலே கூட லேசா ஒரு எண்ணெய் இருக்குதாம். அதை நீராவியிலே விட்டு காய்ச்சி வடித்து எடுக்கலாம். அதிலே நைதரசனை செலுத்தி பக்குவப்படுத்த வேண்டும். அதற்குப்பிறகு அதை பெற்றோலுக்குப் பதிலாக உபயோகப்படுத்தலாம்.

இதேமாதிரி வேறுசில தாவரங்களிலேயிருந்தும் பாசியிலேயிருந்தும் எண்ணெய் எடுப்பதற்கு வாய்ப்புகள் இருக்குதாம்.

இதையெல்லாம் எடுத்து உபயோகப்படுத்திக்கொண்டால்தான் இனி மேல் நாம் காலத்தை தள்ள முடியும். இல்லையென்றால் காரைத்தான் தள்ளிக்கிகொண்டிருக்க வேண்டும். எரிபொருளை சிக்கனமாகப் பயன்படுத்துங்கள் என்று இப்பவே சத்தம் போட ஆரம்பிச்சிட்டோம்.

பிலிப்பைன்சிலே விளக்கு மரம் ஒன்றை கண்டு பிடித்திருக்கிறார்கள். ஆமாம்!

மரங்களிலே அது ஒரு வகை!

Energy Tree என்று அதற்குப் பேர் வைத்திருக்கிறார்கள்.

பிலிப்பைன்சிலே ஏற்கனவே அந்த மரத்துக்கு "Rumbang Tree" என்று பேர்! 50 வருடத்திற்கு முன்னாடியே இந்த மரத்தைப் பற்றி அவர்களுக்குத் தெரியுமாம். இருந்தாலும் அதனுடைய உபயோகத்தை இப்போதுதான் கண்டு பிடித்திருக்கிறார்கள். அப்படி என்ன உபயோகம்?

அந்த மரத்தினுடைய விதையை கொளுத்தினால் 15 நிமிடம் நல்லா எரியுதாம். அந்த பக்கத்திலே பல கிராமங்களிலே ஊர் மக்கள் இதை நிறைய பொறுக்கி வீட்டிலே வைத்திருப்பார்களாம்! எதுக்கு?

இராத்திரியிலே விளக்குப்குப் பதிலாக இந்த விதையை கொளுத்தி வைப்பதற்காக! வெளிச்சத்துக்காக வேறு வழியைத் தேடி அலைய வேண்டியதில்லை.

வெளிச்சம் என்பது வெளியே மட்டும் இருந்தால் போதுமா? உள்ளேயும் இருக்க வேண்டும்! அப்படி இருந்தால்தான் வெளியே இருக்கிற வெளிச்சமும் பிரயோசனப்படும்!

ஒருத்தன் தெரிவிலே எதையோ தேடிக்கொண்டு இருந்தான். வழியிலே போனவரும் அவனுக்காகப் பரிதாபப்பட்டு தேடிப் பார்த்தார். ஒன்றும் கிடைக்கவில்லை. நீண்டநேரம் தேடியும் பிரயோசனமில்லை. கடைசியாக அந்த வழிப்போக்கர் என்னத்தைத் தொலைத்தீங்க என்று கேட்டார்?

என்னுடைய மோதிரத்தை என்றார் இவர்.

"எந்த இடத்திலே தொலைத்தீங்க?" என்றார்.

அதற்கு இவர் "அதோ இருக்கே என் வீடு அந்த வீட்டுக்கு உள்ளேதான் தொலைத்தேன்" என்றார்.

"என்னங்க இது? வீட்டுக்குள்ளே தொலைத்துப்போட்டு இப்படி வீதியிலே வந்து தேடிக்கொண்டிருக்கிறீர்கள்?" என்று கேட்டார்.

"அதுக்கு நான் என்ன செய்யிறது? வீட்டுக்கு உள்ளே வெளிச்சம் இல்லை! இங்கதான் வெளிச்சம் இருக்கு! வெளிச்சம் உள்ள இடத்திலே தேடினாத்தானே கிடைக்கும்" என்றார் இவர்.

வெளிச்சம் –வீட்டுக்கு உள்ளே மட்டும்தானா இல்லை?

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## நொச்சி



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

சங்க இலக்கியப் பெயர்:-சிந்துவாரம்

தாவரவியற் பெயர்: Vitex negundo

குடும்பம்:Verbenaceae

மருந்திற்குப் பயன்படும் உறுப்புக்கள்:- இலை, பூ, வேர், பட்டை

சுவை:-கைப்பு, துவர்ப்பு, கார்ப்பு

தன்மை: வெப்பம்

பிரிவு:- கார்ப்பு

நோயா கலியை நொடிக்குளருந்த வெம்மை போயா மணானு முயர்த்தலும்-காய வந்த முதல் நண்பாகி வாதத்தை யேயுற வாற் சிந்துவா ரங்கனலுந் தீ.

வெல்லம் சேர்த்துக் காய்ச்சிய நொச்சிக் குடிநீர் உடலின் வெம்மையை போக்கி நாளுக்கு நாள் உடல் வன்மையை பெருக்கி வளிக்குற்றத்தை தன்னிலையில் நிற்கச் செய்யும்.

நொச்சியிலையை நீரிட்டுக் காய்ச்சி பிள்ளை பெற்றவர்களை குளிப்பாட்டுவதுண்டு. வெந்நீரில் இலையைப் போட்டு வேகவைத்து நீராவி பிடிக்க வியர்வை உண்டாகி சுரம் தணிக்கும். வளிக்குற்றத்தால் உண்டான உடல்வலி போகும்.

தலைவலி, பீனிசம் முதலியவைகளுக்கு இதை தலையணையாக வழங்க குணமாகும். அல்லது இலையை சுக்குடன் சேர்த்தரைத்துக் கன்னம் பொறிகளில் பற்றிட தலைவலி தீரும். இலையை அரைத்து மண்ணீரல் வீக்கங்களுக்கு பற்றிடலாம். இலைச் சாற்றால் எண்ணெய் செய்து தலையில் தேய்த்து முழுகிவர கழுத்து, நெறிகட்டு நாளடைவில் போகும். இதன் சாறு நிர்க்குண்டித்தைலம் போன்ற தைலங்களுடன் சேர்க்கப்படுகிறது. இலையை வதக்கி ஒத்தடமிட்டால் வீக்கம் கீல்வாயு தீரும். நொச்சி, பொடுதலை, நுணா சேர்த்து குடிநீர் செய்து குழந்தைகளின் மாந்தத்திற்குக் கொடுக்கலாம்.

வேர்க்குடிநீர் வளி நோயைப் போக்கி, நீர்ப்பை அழற்சியையும் தீர்க்கும். மேலும் இதை வயிற்றுவலி, வயிற்றுப் புழு நோய்க்கு கொடுக்கலாம். பூவை உலர்த்திப் பொடித்து சிறிது பன்னீர், கற்கண்டு அல்லது தகுந்த துணைமருந்துடன் கொடுக்க குருதி வாந்தி நீங்கும். நொச்சியிலையை நன்றாக அரைத்துச் சாப்பிட்டால் ஈரம் வீக்கம் குணமாகும்.

நொச்சி இலைச் சாறில் நல்லெண்ணெய் கலந்து காய்ச்சி தலைக்கு தடவி குளித்து வந்தால் தலைவலி கழுத்துவலி, பிடரிவலி தீரும். வெள்ளை நொச்சியிலையை கொதிக்கும் தண்ணீரில் போட்டு நீராவி பிடித்தால் வியர்வை அதிகம் வெளியேறி காய்ச்சல் குணமாகும். நொச்சி இலைச் சாறு (ஒரு லீற்றர்) எடுத்து நன்றாக கொதிக்க வைத்து நான்கில் ஒரு பங்காக சுண்டக் காய்ச்சி தினமும் 60 மில்லி அளவுக்குக் குடிப்பதுடன் வலி உள்ள இடத்தில் தேய்த்தால்



அனைத்து மூட்டு வலிகளும் விரைவில் தீரும்.

குழந்தைகட்கு ஏற்படும் மாந்தம் சம்பந்தமான நோய்கட்கு நொச்சியிலை, துளசியிலை, சீந்தில் தண்டு இலைகளில் ஒரு கைப்பிடியளவு எடுத்து பொடியாகக் கிள்ளி, ஒரு சுத்தமான சட்டியில் போட்டு இரண்டு டம்ளர் தண்ணீர் விட்டு ஒரு டம்ளர் அளவுக்கு சுண்டக் காய்ச்சி, குழந்தைகளுக்கு சங்களவு கசாயம் வீதம் காலை, மாலை மூன்று நாட்கள் கொடுக்க மாந்தம் குணமாகும். வயிற்று உப்புசமும் தீரும்.

கால் கைகளில் ஏற்படும் குடைச்சல் குணமாக நொச்சியிலையில் இரண்டு கைப்பிடியளவும் தாழையிலையில் இரண்டு கைப்பிடியளவும் எடுத்து ஒரு பானையில் போட்டுத் தேவையான தண்ணீர் விட்டு நன்றாக கொதிக்க வைத்து அளவான சூட்டில் குளித்தால் கை, கால் குடைச்சல் குணமாகும்.

வாத சம்பந்தமான இடுப்பு,முழங்கால் வலிக்கு நொச்சியிலையை ஒரு கைப்பிடியளவு எடுத்து பொடியாக நறுக்கி 10 கிராம் வெள்ளைப் பூண்டையும் அதே எடை கஸ்தூரி மஞ்சளும் எடுத்து அம்மியில் ஒன்றிரண்டாக நைந்து பாத்திரத்தில் போட்டு 200 கிராம் வேப்ப எண்ணெய்யை விட்டு காய்ச்சிய பின் எண்ணெயை எடுத்து வலியுள்ள இடத்தில் தேய்க்க வாதவலி தீரும்.

முழங்களில் ஏற்படும் வீக்கத்திற்கு நொச்சியிலையில் உள்ள நரம்புகளை நீக்கிவிட்டு சட்டியை அடுப்பில் ஏற்றி தேக்கரண்டியளவு வேப்பெண்ணெய் விட்டு சூடேற்றி காய்ந்தவுடன் தேவையான நொச்சி இலையைப் போட்டு வதக்கி வீக்கத்தின் மேல் வைத்துக்கட்ட வீக்கம் தீரும்.

பாரிசவாதத்தினால் கைகால்கள் செயலிழந்து விட்டால் நொச்சியிலையை மைபோல் அரைத்து பெரிய விளாம்பழமளவு எடுத்து பாத்திரத்தில் போட்டு 250 மில்லிலீற்றர் வெள்ளாட்டுப்பால் அதில் விட்டு நன்றாக கலக்கி எட்டிக்கொட்டையை பாக்கு போலச் சீவிய தூளில் 10 கிராம் எடுத்து பாலில் சேர்க்க வேண்டும். இதே போல சாம்பிராணியை தூள் செய்து அதையும் பாலில் போடவும். மூன்று கோழி முட்டையை உடைத்து மஞ்சள் கருவை மட்டும் எடுத்து பாலுடன் விட்டு ஒன்று சேரக் கரைத்து பாத்திரத்தை அடுப்பேற்றி 250 மில்லி லீற்றர் வேப்பெண்ணெய் சேர்த்து நன்றாக கலக்கி காய்ச்ச வேண்டும். ஆறிய பின் வடிகட்டி இயங்க முடியாத கை, கால்களில் தடவி ஆமணக்கு இலையை வதக்கி அதன் மேல் வைத்துக் கட்டவும். ஏழு நாட்கள் செய்ய இரத்த ஓட்டம் ஆரம்பித்து இயங்க ஆரம்பிக்கும். 12 நாட்கள் செய்ய பூரண குணமேற்படும்.

நொச்சித் தைலம் தயாரிப்பு

நல்லெண்ணெய்-1.5லீற்றர், நொச்சி இலைச்சாறு-1.5லீற்றர், கற்றாழைச்சாறு-1.5 லீற்றர், இந்துப்பூ-1.5 கிராம், சிற்றரத்தை-1.5கிராம், திப்பிலி-1.5கிராம், ஆமணக்கம் வேர்-1.5கிராம், குடசப் பாலை வேர்-1.5 கிராம், கிரந்தித்தகரம்-1.5கிராம், சுக்கு-1.5கிராம், சோட்டம்-1.5கிராம், தேற்றாங்கொட்டை-1.5கிராம், சதகுப்பை-1.5கிராம், வாய்விலங்கம்-1.5 கிராம், அதிமதுரம்-1.5 கிராம், வெள் ளாட்டுப்பால்-தேக்கரண்டி அளவு. ஆரம்பத்தில் 5 முதல் 15 வரை யான சரக்குகளை பொடித்து அரிதட்டில் அரித்து வைக்கவும். பின்பு ஒன்று முதல் மூன்று வரையிலும் உள்ளவற்றை ஒரு பாத்திரத்தில் இட்டு மேற்படி சூரணத்தை வெள்ளாட்டுப் பாலில் நன்கு அரைத்து சேர்த்து கலக்கி அடுப்பிலேற்றி எடுக்கவும். இறுதியில் இந்துப் பூவை பொடித்து ஒன்று கலந்து உரிய பதத்தில் வடித்துக் கொள்ளவும். சிரசின் மீது வைத்து முழுக உபயோகிக்கலாம். இதனால் எல்லாவித பீனிசம், நாட்பட்ட ஜலதோசம், தலைவலிதீரும்.

# இராவணேசுவரம் ஆலயத்திற்கு திருக்குடமுழுக்கு










(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை சைவ மகா சபையால் அமைக்கப்பட்டுள்ள இராவணேசுவரம் ஆலயத்திற்கு செந்தமிழில் திருக்குடமுழுக்கு மற்றும் பசுமைத் திட்டம் தாய்மண் 2020 நிகழ்வு நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலை இடம்பெற்றது.

யாழ் - காரைநகர் வீதியில். பொன்னாலை சந்திக்கு அண்மையில் மூளாய் புதிய வீட்டுத்திட்ட பிரதேசத்தில் குறித்த ஆலயம் அமைக்கப்பட்டுள்ளதுடன் ஈழத்தை ஆட்சிசெய்த தமிழ் மன்னனான சிவபக்தன் இராவணேசுரன் சிவலிங்கத்தை வணங்கி நிற்பதைப் போன்று சைவத் தமிழ் திருக்கோயிலாக இவ் ஆலயம் அமைக்கப்பட்டுள்ளது.

மேலும் மெய் எழுத்துக்கள் பன்னிரண்டு போன்று பன்னிரு படிக்கட்டுக்களால் அமைக்கப்பட்ட உயர் பீடத்தில் சிலவலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. அத்துடன் உமை அம்மை சமேத சிவபெருமான். விநாயகர். செந்தமிழ்க் கடவுள் முருகன் ஆகியோரின் விக்கிரகங்களும் வழிபாடாற்றுவதற்கு ஏற்ற விதத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன. முன்னே காவல் தெய்வமாக பைரவர் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளார்.

இந்த நிகழ்வு தென்கைலை ஆதீனம் அகத்தியர் அடிகளார் திருமுன்னிலையில் வீட்டுத்திட்ட மற்றும் அயற் கிராம மக்களதும் சிவதொண்டர்களினது பங்கேற்புடன் உயிரொளி சிவம் பிரதாப் ஐயா தலைமையிலான செந்தமிழ் அருட் சுனைஞர்களால் நிகழ்த்தப்பட்ட்து.

தாய் மண் 2020 பசுமைத் திட்டத்தை மரநடுகையுடன் சங்கானை பிரதேச செயலர் திருமதி பொன்னம்பலம். யாழ். பல்கலைக்கழக முன்னாள் இந்து நாகரிகத்துறை விரிவுரையாளர் நாச்சியார் செல்வநாயகம். தேசிய வீடமைப்பு திட்ட பொது முகாமையாளர் ஆகியோரும் சைவ மகா சபையினரும் தொடக்கி வைத்தனர். அத்துடன் வீட்டுத்திட்ட மக்களுக்கு இயற்கை விவசாய ஊக்குவிப்புக்களும் வழங்கப்பட்டன. (இ-9)

# வடக்கு மாகாண அலுவலக உதவியாளர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப்பரீட்சை (மாதிரி வினாத்தாள்) பொது அறிவு

A.பாலச்சந்திரமூர்த்தி B.A (Hons) M ed, M.A.(Geo) விரிவுரையாளர், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை

எல்லா வினாக்களுக்கும் விடை தருக

01. வடக்கு மாகாணம் உருவாக்கப்பட்டதன் பின்னர் முதலாவது மாகாணசபைக் கூட்டம் எந்த மாதம் நடைபெற்றது?
1. 2013 நவம்பர் 2. 2013 ஒக்டோபர் 3.2013 டிசெம்பர் 4.2013 செப்டெம்பர்

02. சிறுவர்களின் உரிமை தொடர்பில் அழைக்க வேண்டிய இலக்கம்?
1. 1926 2. 1927 3. 1929 4. 1920

03. இலங்கையில் அதிக குளங்களைக் கொண்ட மாவட்டம்?
1. திருகோணமலை 2. அநுராதபுரம் 3. குருநாகல் 4. வவுனியா

04. 2018 ஆம் ஆண்டு தேசிய விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்ற மாவட்டம் எது?
1. குருநாகல் 2. கண்டி 3.பதுளை 4. பொலநறுவை

05. இலங்கையில் மிகக் குறைவான பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட மாவட்டம் எது?
1. பதுளை மாவட்டம் 2.மொனராகலை மாவட்டம்
3. வன்னி,மாவட்டம் 4.திருகோணமலை மாவட்டம்

06. இலங்கையில் போதைப் பொருள் கட்டுப்பாட்டுக்கு அழைக்கும் இலக்கம் எது?
1. 1984 2. 1990 3. 1948 4. 1955

07. இலங்கையில் அதிக மாவட்டங்களைக் கொண்ட மாகாணம் எது?
1. வடக்கு 2. வடமேல் 3. தெற்கு 4. கிழக்கு

08. தேசிய காங்கிரசை நிறுவியவர் யார்?
1. சேர்.பொன் இராமநாதன் 2. சேர்.பொன் அருணாசலம்
3.ஆனந்தக் குமாரசாமி 4.ஆறுமுகநாவலர்

09. வடக்கு மாகாணத்தில் உள்ள மாநகர சபைகளின் எண்ணிக்கை யாது?
1. 1 2. 2 3. 4 4.3

10. இலங்கையில் தொழுநோய் வைத்தியசாலை அமைந்துள்ள இடம்?
1. நாவின்ன 2. மகரகம 3.மாந்தீவு 4. தெல்லிப்பழை

11. இலங்கையில் மூன்றாவது பரப்புக் கூடிய மாகாணம் எது?
1. வடக்கு மாகாணம் 2. வடமேல் மாகாணம்
3. கிழக்கு மாகாணம் 4. தென் மாகாணம்

12. யாழ்ப்பாண இராச்சியத்தின் வரலாற்றைக் கூறும் நூல் எது?
1. நல்லூர் கல்வெட்டு 2. திருக்கைலாயபுராணம்
3. யாழ்பாண வைபவமாலை 4. யாழ்.நூல்

13. இலங்கையின் மிக நீளமான மகாவலி ஆறு கடலில் கலக்கும் பகுதி எது?
1. நிலாவெளி 2. வாகரை
3. இலங்கை துறைமுகத்துவாரம் 4. உப்பாறு

14. இலங்கையில் அதிக மழை பெறும் இடம் எது?
1. வட்டவள 2. நானுஓயா 3. டீக்கோயா 4. நோட்டன் பிறிச்

15. இரணைமடுவில் உள்ள கனியவளம் எது?
1. சுண்ணாம்புக்கல் 2. வெண்களி 3. களிமண் 4. பந்துக்களி

16. பசுமைப் புரட்சி முதல் முதல் அறிமுகப்படுத்தப்பட்ட நாடு எது?
1. பிலிப்பைன்ஸ் 2. இந்தியா 3. மெக்சிக்கோ 4. பாகிஸ்தான்

17. கபடி விளையாட்டின் தாயகம் எது?
1. சீனா 2. பிரேசில் 3.ஜப்பான் 4. இந்தியா

18. புகையிலையை இலங்கைக்கு முதன் முதலில் அறிமுகப்படுத்தியவர்கள் யார்?
1. போத்துக்கேயர் 2. ஒல்லாந்தர் 3. அரேபியர் 4. பிரித்தானியர்

19. இலங்கைக்கு முதன் முறையாக ஒலிம்பிக்கில் பதக்கத்தை வென்றெடுத்த ஆண்டு எது?
1. 1940 ஆம் ஆண்டு 2. 1947 ஆம் ஆண்டு
3. 1949 ஆம் ஆண்டு 4. 1948 ஆம் ஆண்டு

20. பனிநகரம் என அழைக்கப்படுவது எது?
1. ஐஸ்லாந்து 2. பிரித்தானியா 3. அவுஸ்திரேலியா 4. கனடா

21. இலங்கையின் மிக நீளமான இரு இடங்களான தேவேந்திர முனை தொடக்கம் - பருத்தித்துறை வரையான தூரம் யாது?
1. 432 கி.மீ 2. 446 கி.மீ 3.422 கி.மீ 4. 455 கி.மீ

22. குழந்தை நீதிமன்றத்தினைமுதல் முதல் உருவாக்கிய நாடு எது?
1. இலங்கை 2.அவுஸ்திரேலியா 3. கனடா 4. இந்தியா

23. இலங்கையில் அதிக உள்ளூர் நீர்ப்பரப்புகளைக்கொண்ட 2 ஆவது மாகாணம் எது
1. கிழக்கு 2. மேற்கு 3.வடக்கு 4. தெற்கு

24. Tsunami என்ற பெயர் எந்த நாட்டின் மொழி பெயர்ப்பு ஆகும்?
1. சீனா 2. இலத்தீன் 3.அரேபியா 4. ஜப்பான்

25. வடக்கு மாகாணத்தில் உள்ள கல்வி வலயங்களின் எண்ணிக்கை?
1.10 2. 11 3.12 4. 13

26. சர்வதேச சூழல் தினம் கொண்டாடப்படுவது எத்தினத்தில்?
1. ஏப்ரல் 23 2. ஜுன் 5 3.மே 21 4. மார்ச் 22

27. விளையாட்டுக்கென மிகப் பெரிய மைதானம் தேவைப்படும் விளையாட்டு எது?
1. கொக்கி 2. எல்லே 3.ரக்பி 4. போலோ

28. இலங்கையில் மாகாண ஆளுநர் ஒருவரின் ஆயுட்காலம் எத்தனை வருடங்கள்?
1. 2 2.5 3.3 4.6

29. வடக்கு மாகாணத்தின் எல்லைக்குள் அடங்கும் வீதி வகை எது?
1. A 15 2. A 34 3. A 5 4. A 18

30. தெற்காசிய நாடுகளில் உள்ளடங்காத நகரங்களின் தொகுதி எது
1.காத்மண்டு, காபூல் 2. பீஜிங், சியோல்
3.டாக்கா, அகமதாபாத் 4. அகமதாபாத், காத்மண்டு

சரியானவிடையைப் புள்ளிக்கோட்டில் எழுதுக

31. இலங்கையின் முதலாவது பசுமை நகரம் எது?

32. மாவட்டங்களைப் பிரதிபலிக்கும் வகையில் 10 ரூபா குற்றிகளில் கிளிநொச்சி மாவட்டத்தினை பிரதிபலிக்கும் நாணயத்தில் உள்ள குறியீடு எது?

33. இலங்கையின் வானிலை அவதானிப்பு நிலையம் எங்கு அமைந்துள்ளது?

34. உயிரினக் கூர்ப்புக் கொள்கையை வெளியிட்டவர் யார்?

35. இலங்கையில் நாணயத்தாளில் நுரைச்சோலை அனல்மின் நிலையம் பொறிக்கப்பட்ட தாள் காசு எது?

36. இலங்கையின் இரத்தினக்கல் ஆபரணங்கள் கூட்டுத்தாபனத்தின் புதிய தலைவர் யார்?

37. தற்போதைய யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஆரம்பத்தில் எப் பாடசாலையாக அழைக்கப்பட்டது?

38. புவி நடுக்கத்தை அளவிடும் அளவை முறை என்ன?

39. இந்தியாவின் முதற் குடிமகன் யார்?

40. வடக்கின் தங்கை மங்கை எனப்படும் வீராங்கனை யார்?

41. இலங்கையில் பெற்றோலியப் படிவுகள் காணப்படும் இடம் எது?

42. இலங்கையின் பிம்சவிய (மண்ணின் மகிமை ) எனும் திட்டம் எதனுடன் தொடர்புடையது?

43. தங்கத் தாரகை எனஅழைக்கப்படுபவர் யார்?

44. பூமியின் வயது என்ன?

45. கல்வி அமைச்சினால் மாணவர்களுக்கு அறிமுகப்படுத்திய இலவசக் காப்புறுதித் திட்டத்தின் பெயர் என்ன?

46. இந்தியாவையும் இலங்கையையும் பிரிக்கும் பாக்குநீரிணையை நீந்திக் கடந்த இலங்கைத் தமிழர் யார்?

47. தானியங்களைப் பயன்படுத்தி ஆக்கும் சித்திரம் எது?

48. இரணைமடு நீர்த்தேக்கத்தின் வெள்ள அனர்த்தம் தொடர்பில் ஆராய புதிய ஆளுநரால் நியமிக்கப்பட்ட குழுவின் உறுப்பினர்கள் எண்ணிக்கை யாது?

49. உலக மொத்த நீர்ப்பரப்பில் நன்னீரின் (வீதம்) அளவு யாது?

50. ஐரோப்பாவையும் ஆசியாவையும் எல்லைப்படுத்தும் மலை எது?

51. வடமாகாண இலட்சினையில் உள்ள திறந்த புத்தகம் எதனைக் குறிக்கின்றது?

52. மகாவலித் திட்டத்தின் இறுதி நீர்த்தேக்கத்திட்டம் எது?

53. ஜப்பானின் பஞ்ச எண்ணக்கருவில் அடங்கும் முக்கிய உட்கருத்துக்கள் எத்தனை?

54. இலங்கையில் அரச அலுவலகங்களின் உற்பத்தித்திறன் செயற்பாட்டுப்போட்டியை நடத்தும் அமைச்சு எது?

55. வடக்கு மாகாண சபை இணையத்தள முகவரி என்ன?

56. வடக்கு மாகாண தற்போதைய ஆளுநர் எத்தனையாவது ஆளுநராவார்?

57. ஐ.நா.சபையின் தற்போதைய செயலாளர் நாயகம் யார்?

58. இலங்கையில் மிக நீளமான மேம்பாலம் எங்கு உள்ளது?

59. கழிவகற்றலில் 3R குறிக்கும் 3 விடயங்கள் எவை?


60. A 4 தாளின் நீள அகலம் யாது?

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

151



கிறிஸ்தவ மிஷனரிமாரின் மதமாற்று முயற்சியினாலும் தம் மக்களிடையேயான மேற்கத்தேய கலாசார ஊடுருவலினாலும் தமது மத நம்பிக்கையும் பாரம்பரிய கலாசார விழுமியங்களும் அழிக்கப்படுமென இந்து-சைவத் தமிழ் அறிஞர் அஞ்சினர்.

இதன் விளைவாக பதினாறாம் நூற்றாண்டிலிருந்து ஆரம்பித்த மேற்கத்தேய ஆட்சிக்கால வரலாற்றில் முதல் தடவையாக இலங்கைத் தமிழர் தமது சொந்த சமய, பண்பாடு, மொழி ஆகியவற்றின் அடையாளத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்தவர்களாய் பொதுவாக கிறிஸ்தவ மிஷனரிச் செயற்பாடுகளுக்கும் மேற்கத்தேய கலாசார செல்வாக்கிற்கு மாறாகத் தமது எதிர்ப்பை வெளிக்காட்ட ஆரம்பித்தனர்.

இதே சமயத்தில் கிறிஸ்தவ மிஷனரிமார் சைவசமயத்தையும் அது உள்ளூர் மக்களால் கடைப்பிடிக்கப்பட்ட முறையையும் கண்டனம் செய்தனர். கிறிஸ்தவ மிஷனரிமாருக்கும் இந்து சைவ உயர் மட்டத்தினருக்கும் இடையில் ஒரு கசப்பான புகை வளரலாயிற்று.

மக்களைத் தம்மோடு இணைத்துக்கொள்ளும் முயற்சியில் இரு பகுதியினருமே தத்தம் சமயத்தைப் போதிப்பதற்குப் பொதுமேடைகளைப் பயன்படுத்தினர்.

அத்துடன் இவர்கள் தமது மதங்களை வளர்ப்பதற்காகவும் எதிராளியின் மதத்தைப் பலவீனப்படுத்துவதற்காகவும் அச்சிடப்பட்ட சிறு பிரசுரங்கள், பத்திரிகைகள், புத்தகங்கள் என்பனவற்றை விநியோகித்தனர். இரண்டு மதங்களுமே தத்தம் பிரசார நடவடிக்கைகளை அதிகரித்தன. மேலும் அதிகமான இந்து-சைவக் கோவில்கள் தோன்றி துடன் சடங்குகள், விழாக்களின் எண்ணிக்கைகள் அதிகரித்தன.

கிறிஸ்தவர்களும் தமது திருச்சபைச் செயற்பாடுகளை அதிகரித்தனர். இரு மதங்களுமே கல்வித்துறையில் பெரும் முதலீடுகளைச் செய்து பாடசாலைகளை நிறுவினர்.

இந்து- சைவத் தமிழர் மத்தியில் ஏற்பட்ட சமூக மாற்றத்திற்கு புரட்டஸ்தாந்து மதம் ஆற்றிய பங்கு மிகவும் முக்கியமானது. இவர்களுடைய முயற்சிகளே இந்து சமயத்திற்குப் புத்துயிரூட்டி அதன் வழி, மொழி, இலக்கிய, கலாசார மறுமலர்ச்சி ஏற்படத் தூண்டிய காரணிக ளாகும்.

அத்துடன் இலங்கையில் வடக்கு, கிழக்கு எங்ஙனும் பரவி வாழ்ந்த தமிழ்ச் சமூகம் இந்த மொழி, சமய, கலாசார, இலக்கியச் செயற்பாடுகளினால் முதன்முதலாக ஒன்றுபட்டது என்று கூறுவதில் தவறில்லை.

வரலாற்று ரீதியில் இலங்கையில் பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் நிகழ்ந்த மிஷனரிமாரின் மதப்பிரசாரத்திற்கு முன்பதாகவே தமிழ் சைவ மறுமலர்ச்சி ஏற்பட்டிருந்தது. போர்த்துக்கேயரின் அடக்குமுறை ஆட்சியின் வீழ்ச்சியைத் தொடர்ந்து முதலில் ஒல்லாந்தரினதும் பின்னர் பிரித்தானியரினதும் ஓரளவு தளர்வான கொள்கைகளின் காரணமாகத் தமிழ்ப் பிரதேசங்கள் எங்கும் பிரமிக்கத்தக்கவகையில் சைவக் கோவில்கள் புனருத்தாரணம் செய்யப்பட்டதுடன் புதிய கோவில்கள் அமைக்கும் பணிகளும் அதிகரித்தன.

கோவில் திருவிழாக்களும் பண்டிகைகளும் மறுபடியும் கொண்டாடப்பட்டன. பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் பிரித்தானியர் ஆட்சியைக் கைப்பற்றிய சில தசாப்தங்களின் பின்னர் கிறிஸ்தவ மிஷனரிமார் தங்களது பிரசன்னத்தை மக்கள் உணரச் செய்தபோது அவர்கள் மக்களின் இதயங்களில் பிடித்திருந்த இடத்தை மீட்பதற்காகவும் மக்களின் மனங்களை கிறிஸ்தவத்திலிருந்தும் விடுவிப்பதற்காகவும் சைவசமய மறுமலர்ச்சியாளர் பொங்கி எழுந்தனர்.

இவ்விரு மதங்களின் நோக்கங்களும் ஒன்றுக்கொன்று முரண்பட்டவையாக இருந்தும் கூட இவர்களின் முயற்சிகளின் விளைவான கூட்டுப் பயன் சமூகமாற்றம் நிகழ உதவியது. இந்த மதப் போட்டிகளின் மத்தியில் உண்மையிலேயே சைவம் மீளவும் உயிர்ப்பித்தது.

இவற்றினால் அதிகரித்த சைவசமயத்தின் சமய பண்பாட்டுப் பலம் இலங்கையின் வடக்கு- கிழக்கில் சிதறிக் கிடந்த தமிழரை ஒன்றிணைக்கும் சக்தியாக இருந்தது.

இவ்வகையான சமய, பண்பாட்டு மொழி ரீதியான சுயவுணர்வு என்பனவே பின்னர் விருத்தியடைந்து இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் தமிழ்த் தேசியவாத உணர்வு உருவாவதற்கு வழிகோலக் காரணமாகவிருந்தன.

இந்த சுய அடையாளம் அல்லது சுயவுணர்வின் உருவாக்கத்திற்கு முக்கிய காரணிகளாக இருந்த பல்வேறு சமயப் பண்பாட்டு அம்சங்களை ஆராய்வதற்குப் பின்வரும் பிரதான விடயங்கள் முக்கியமானவையாகும்.

கிறிஸ்தவ மிஷனரிமாரின் செயற்பாடுகள் அவற்றுக்கெதிரான சைவசமய மறுமலர்ச்சியாளரின் முயற்சிகள் சைவத்தின் பல்வேறு பண்பாட்டுச் செயற்பாடுகளில் வெளிப்பட்டமை, கோவில்களும் சைவப் பாடசாலைகளும் அமைக்கப்பட்டமை, சைவ- தமிழ் இலக்கிய மறுமலர்ச்சி ஏற்பட்டமை என்பவற்றுடன் இறுதியாக சமயம், பண்பாடு, மொழி அடிப்படையிலான அமைப்புக்கள் தோன்றியமை, இக்கால கட்டத்தில் தமிழ்ச் சுயவுணர்வு அதிகரிப்பதற்கு ஆற்றிய பங்கு பற்றித் தெளிவுபடுத்தப்படுவது அவசியமாகும்.

(தொடரும்)

> “இலங்கைத் தமிழர் தமது சொந்த சமய, பண்பாடு, மொழி ஆகியவற்றின் அடையாளத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்தவர்களாய் பொதுவாக கிறிஸ்தவ மிஷனரிச் செயற்பாடுகளுக்கும் மேற்கத்தேய கலாசார செல்வாக்கிற்கு மாறாகத் தமது எதிர்ப்பை வெளிக்காட்ட ஆரம்பித்தனர். இதே சமயத்தில் கிறிஸ்தவ மிஷனரிமார் சைவ சமயத்தையும் அது உள்ளூர் மக்களால் கடைப் பிடிக்கப்பட்ட முறையையும் கண்டனம் செய்தனர்”

## தமிழரின் விழிப்புணர்வும் எழுச்சியும் சமயம், பண்பாடு, மொழி சமூகம், பொருளாதாரம் (கி.பி. 1850-கி.பி. 1900)

# தரம்-1 மாணவர்களும் மகிழ்ச்சிகரமான ஆரம்பமும்

முறைசார் கல்வியை வழங்குவதனூடாக மாணவர்களைச் சமூக வாழ்க்கைக்குத் தயார்படுத்தும் நிறுவனம் பாடசாலையாகும். பாடசாலையிலே ஆரம்பக்கல்வி என்பது முக்கியமான காலப் பகுதியாகும். பிள்ளையின் பாடசாலை வாழ்க்கையின் முதல் ஐந்து வருடங்களும் ஆரம்பக்கல்விக்குரிய பருவங்களாகும். இப் பருவத்திலே பிள்ளையிடம் விதைக்கப்படுகின்ற நற்பண்புகள், பழக்க வழக்கங்கள் வாழ்நாள் முழுவதும் அவனுடைய வாழ்க்கையைப் பிரதிபலிப்பனவாக்க் காணப்படுவதனால் ஆரம்பக்கல்விக்குரிய காலப்பகுதி முதன்மையானதாகவும் முக்கியமானதாகவும் கல்வியியலாளர்களால் உணரப்படுகின்றது.

அன்னை மடியிலே அவளுடைய அரவணைப்பிலே கொஞ்சிக் குலாவிய குழந்தையானது பாடசாலையிலே காலடியை எடுத்து வைக்கும் போது அவனுக்குள்ளே உண்டாகும் பயத்தினைப்போக்கி தன்னம்பிக்கையுடன் மாணவர்கள் செயற்படக்கூடியதாக இப் பாடசாலை வாழ்க்கை இவர்களுக்குத் திகழ வேண்டும்.

அப்போதுதான் பிள்ளை தான் கற்கின்றேன் எனத் தெரியாமலே கற்பான். கற்பதற்கு ஏற்ற செயற்பாடுகளை ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள் வழி வகுத்துக்கொடுப்பது இன்றியமையாததாகும்.

பாடசாலைக்குள் பிரவேசித்த மாணவர்களை, பிள்ளையை அறிவோம் செயற்பாடுகள் மூலமாக அவர்களினுடைய தனியாள் வேறுபாடுகளை இனங்கண்டு கற்பிப்பதன் ஊடாக மகிழ்ச்சிகரமான கற்றலுக்கு வழி ஏற்படுத்தப் படுகின்றது.

கால்கோள் விழா என்பது தரம் ஒன்று மாணவர்களைப் பாடசாலைக்கு அனுமதித்து இரு வாரங்களின் பின்னர் நடைபெறும் தொடக்க விழாவாகும். கால்கோள் விழா மூலமாக மாணவர்களுடைய ஆளுமையையும் தலைமைத்துவப் பண்பும் இணைந்து செயற்படும் ஆற்றலும் விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கையும் நேரான சிந்தனையையும் வெற்றி தோல்விகளைச் சமமாக மதிக்கின்ற மனப்பாங்கு போன்ற நற்பண்புகளை வளர்க்க உதவுகின்றது. உதாரணமாக இவர்கள் தமது ஆற்றுகை நிகழ்வுகளை மேடையிலே முன் வந்து எதுவித பயமுமின்றி ஆற்றுகின்றனர். இதற்காகப் பிள்ளையை அறிவோம் செயற்பாடு ஆசிரியருக்குக் கைகொடுக்கின்றது.

கால்கொள்ளுதல் என்பது தொடங்குதல் எனப்பொருள் படுகின்றது. இங்கு நாம் கால்கோள் விழா என்பதனை எடுத்து நோக்கின் குழந்தைப் பருவத்தைத் தாண்டிய பி ள்ளை ஒன்று முறையான கற்றலை ஆரம்பிக்கும் நாளாகக் கொள்ளலாம்.

கால்கோள் விழாவிலே தலைமைத்துவப் பண்பை வெளிப்படுத்துகின்ற மாணவன் பாடசாலைக் காலம் முழுவதும் மட்டுமன்றி சமூக நிகழ்வுகளிலும் தலைமைத்துவத்தினை ஆற்றக்கூடிய வல்லமை உடையவனாகத் திகழ்வான் என்பது அறிஞர்களின் ஆய்வுகளின் முடிவுகளாகக் காணப்படுகின்றன.

பிள்ளைக்கு வழங்கப்படுகின்ற முன் அனுபவங்கள் முன் மாதிரியானவையாக அமைவதன் ஊடாக தலைமைத்துவம் மிக்க ஒருவராக மாற்றுவதற்கு வினைத்திறனான செயற்பாடுகளை ஒழுங்கமைத்து வழங்குவது ஆசிரியரின் தலையாய கடமையாகும்.

கால்கோள் விழாவிற்குப் பெற்றோர்களும் அழைக்கப் படுகின்றனர். பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் ஆற்றுகையைக் கண்டு களிப்புறுகின்றனர். அதேவேளை பாடசாலைக்கும் பெற்றோர்களுக்குமிடையிலான இணைப்பு வலுப்படுத்தப்படுவதுடன் பெற்றோர் பாடசாலை மீது நம்பிக்கைக்குரியவர்களாகத் திகழ்வார்கள்.

கால்கோள் விழாவில் ஆற்றுகை செய்யப்படும் நிகழ்ச்சிகள் பிள்ளையை அறிவோம். செயற்பாட்டினூடாக இனங்கண்ட மாணவர்களை அவர்களுடைய ஆற்றலுக்கும் திறமைக்கும் ஏற்ற வகையிலே செயற்படுத்துவதற்கு ஊக்குவிக்கும் ஒரு களமாகவும் கால்கோள்விழா அமைகின்றது. இந்த நிகழ்வுகளில் பங்கெடுக்கும் மாணவர்கள் பாடசாலை மீது பற்றுள்ளவர்களாக, கல்வியின் மீது அக்கறை கொண்டவர்களாக, தன்னம்பிக்கை கொண்டவர்களாக, தலைமைத்துவமும் நிறைந்தவர்களாக தமது பாடசாலைக் காலத்தில் பிரகாசிக்கின்றார்கள்.

உதாரணமாக பிள்ளையை அறிவோம் செயற்பாடான "தாளை உருண்டையாக்குவோம்" எனும் செயற்பாட்டை எடுத்துக்கொண்டால் இதன் மூலம் பிள்ளைகளிடையே நுண்ணியக்கத்திறன் விருத்தி அடைதல் எதிர்பார்க்கப்படுகின்றது. அதாவது கிழித்தலும் உருண்டையாக்கலும் எனும் செயற்பாட்டின் மூலமாக கடதாசியைச் சிறுசிறு துண்டுகளாகக் கிழித்தல், கிழித்த துண்டுகளை உருண்டையாக்கல், உருண்டையாக்கிய உருளைகளை வழங்கியுள்ள உருளைச்சுற்றி ஒட்டுதல், உருவத்தின் பூரணத் தன்மைபற்றிக் கவனம் செலுத்துதல் போன்ற திறன்களை மாணவர்களிடம் வளர்க்க முடியும்.

இங்கு ஆசிரியர் முக்கியமாகக் கவனிக்க வேண்டிய விடயம் கடதாசியைக் கிழிக்க முடியாத பிள்ளைகள், கடதாசிகளால் சிறிய உருண்டைகளை விரல்களால் தயாரிக்க முடியாத பிள்ளைகள் போன்றவர்களிடம் அதிகவனம் செலுத்தி உரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

அதாவது ஆசிரியர் ஒவ்வொரு பிள்ளைக்கும் ஒரு வட்டம் வரைந்து பச்சைத்தாள் வீதம் தயாரித்துக் கொள்ளல். இவர்கள் கடதாசி உருண்டைகளை ஒட்டிய ஒரு மாதிரி வட்டத்தின் உருவத்தைத் தயாரித்து மாணவர்கள் பார்க்கு மாறு காட்சிப்படுத்திய பின் மாணவர்களைக் குழுக்களாக்கி வகுப்பறையில் அமரச் செய்தல். பின்னர் பிள்ளைகளுக்கு வெள்ளை நிற ரிசுத்தாள் வட்ட உருவமுடைய பச்சை நிறத் தாள் வீதம் வழங்கவும். மாணவர்களை வெள்ளை நிறத் தாள்களைச் சிறிய துண்டுகளாகக் கிழிக்கவும். அவற்றைச் சிறிய உருண்டைகளாக்கக் கசக்கவும் அறிவுறுத்தவும். கசக்கிய உருண்டைகளை ஒரு ஜோக்கட் கோப்பையில் வைக்குமாறு அறிவுறுத்தவும். எவ்வளவு தூரம் அறிவுறுத்தலைக் கேட்டுச் செயற்பட்டார்கள் என்பதை ஆசிரியர் கண்காணிக்கவும். பின்னர் மாணவர்களுக்குப்பசையைக் கொடுத்துக் கசக்கிய கடதாசி உருண்டைகளை பச்சைத் தாளில் வரைந்துள்ள வட்டத்தைச் சுற்றி ஒட்டச்சொல்லவும். பின்பு ஆக்கங்களை மேசை மீது காட்சிப்படுத்த வழிப்படுத்தல்.

பிள்ளைகளின் ஆக்கங்களை அவதானித்து இவர்களின் ஆக்கபூர்வமான செயற்பாடுகளுக்காகப் பிள்ளைகளைப் பாராட்டுதல். இச் செயற்பாடுகளினூடாக பிள்ளையினுடைய நுண் திறன்களை ஆசிரியர் அறிந்துகொள்கிறார்.

பிள்ளையைச் சுயாதீனமாகவும் சுதந்திரமாகவும் இயங்க விட்டு அவர்களுடைய செயற்பாடுகளை அவதானித்த ஆசிரியர் பின்பு வகுப்பறைச் செயற்பாடுகளின் போது இவர்களின் தனியாள் வேறுபாடுகளிற்கேற்ப செயற்பாடுகளை ஒழுங்கமைத்துச் செயற்படுவதற்கு இம் மகிழ்ச்சிகரமான செயற்பாடுகளுடனான பிள்ளையை அறிவோம் செயற்பாடுகள் கைகொடுக்கின்றன.

இப் பிள்ளையை அறிவோம் செயற்பாடு மூலம் விளையாட்டு வீடு, ஓடுவோம், பாய்வோம், ஏறுவோம், வெட்டி ஒட்டுவோம், தாளை உருண்டையாக்குவோம், தாள்களைக் கிழிப்போம், பூக்கள் செய்வோம், பகுதிகளை இணைப்போம், ஆக்கம் செய்வோம், கோலங்களை இனங்காண்போம், எண்ணுவோம், செவிமடுப்போம், கதைப்புத்தகம் பார்ப்போம், கதையைக் கட்டியெழுப்புவோம். சித்திரம் வரைவோம். ஆடுவோம். பாடுவோம். மகிழ்வோம் போன்ற செயற்பாடுகளை வழங்குகின்றோம்.

இச் செயற்பாடுகள் மூலமாகப் பேரியக்கத் திறன்கள், நுண்ணியக்கத் திறன்கள், புரிகைத்திறன்கள், சமூகத்திறன்கள், மொழித்திறன்கள், தனிப்பட்ட சுகாதாரமும் பழக்கங்களும், கற்றலுக்கான திறன்கள் போன்றவற்றை மாணவர்களிடம் கட்டியெழுப்புவதை நோக்கமாகக் கொண்டு இச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

திருமதி.ஈ.அ.செல்வதயாளன்
ஆசிரிய ஆலோசகர்,
யாழ்.கல்வி வலயம்.

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1623

### வான்மதி

பாசம் வையுங்கள் தவறில்லை... ஆனால்
பைத்தியமாக ஆகிவிடாதீர்கள்...
ஏனெனில் இங்கு முடிவே இல்லாத வாழ்வும்
இல்லை.. பிரிவே இல்லாத உறவும் இல்லை...
எல்லாம் சில காலம்தான்



### சாருஜா

நீ கொடுத்த மரியாதையும் நீ செய்த தானமும்
நீ செய்த துரோகமும் கண்டிப்பாக ஒருநாள்
உன்னைத் தேடிவந்து நீ செய்ததைவிடச்
சிறப்பாக செய்துவிட்டே போகும்



### மதன்

இதுவும் கடந்து போகும் என்பதை விட
இதுவும் பழகிப் போகும் என்பதே பல
சமயங்களில் வாழ்க்கைக்கு பொருந்துகிறது



### சந்திரமதி

கோபமோ, வெறுப்போ, பாசமோ, அன்போ மனம்
விட்டுப் பேசுங்கள் மூடி வைத்திருப்பதால்
மனதில் சுமைகள் மட்டுமே கூடும். உங்கள்
பிரச்சினைகளுக்கு ஒருபோதும் தீர்வு கிடைக்காது



### தினேஷ்

நீ யாருக்காக வாழ்கிறாயோ அவருக்காக
அனைத்தையும் விட்டுக்கொடு!
உனக்காக யார் வாழ்கிறாரோ அவரை
யாருக்காகவும் விட்டுக் கொடுக்காதே



### கவிதாஞ்சலி

சண்டைபோட்டுவிட்டு மறுநாள் எதுவும்
நடக்காதது போல் பேசும் அன்பு
கிடைத்தால் வாழ்க்கை சொர்க்கமே



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# போதைப்பொருள் கடத்தல் குற்றவாளிகளுக்கு மரண தண்டனையை நிறைவேற்ற வேண்டும்

## ஜனாதிபதிக்கு ஐ.தே.க. ஆதரவுடன் வலியுறுத்தல்

(கொழும்பு)

**போதைப்பொருள் கடத்தல் குற்றச்சாட்டில், மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள கைதிகளுக்கு உடனடியாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மரண தண்டனையை நிறைவேற்ற வேண்டும் என அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர் அஜித் பி. பெரேரா தெரிவித்துள்ளார்.**



கொழும்பில், நேற்று முன்தினம் திங்கட்கிழமை ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஜனாதிபதியின் பிலிப்பைன்ஸ் விஜயத்தின்போது, அவர் வெளியிட்டுள்ள கருத்துக்கள் உள்நாட்டில் மட்டுமன்றி, சர்வதேசத்தின் கவனத்துக்கும் சென்றது.

குறிப்பாக, போதைப்பொருள் தொடர்பாக பிலிப்பைன்ஸ் எடுத்துள்ள கடுமையான நடவடிக்கையை இலங்கையிலும் எடுக்கவுள்ளதாக அவர் தெரிவித்திருந்தார்.

எனினும், போதைப்பொருள் தொடர்பில் நாட்டில் கடுமையான சட்டங்கள் இல்லை என்றே தெரிகிறது. போதைப்பொருள் கடத்தல்காரர்கள் கைது செய்யப்பட்டு, போதைப் பொருட்கள் அழிக்கப்பட்டாலும் அது முற்றாக ஒழிந்ததாக தெரியவில்லை.

ஜனாதிபதி, ஏற்கனவே போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்டு சிறைச்சாலையில் உள்ளவர்களுக்கு எதிராக மரண தண்டனையை நிறைவேற்றுவதாக கூறியிருந்தார். ஆனால்,இதுவரை அந்நடவடிக்கையை ஜனாதிபதி மேற்கொள்ளவில்லை.

பிலிப்பைன்ஸ் போன்று போதைப்பொருள் கடத்தல்காரர்களை வீதியில் வைத்து கொலை செய்யாமல், ஏற்கனவே தெரிவித்ததுபோல போதைப்பொருள் கடத்தல்காரர்களுக்கு மரண தண்டனையை நிறைவேற்ற ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி செய்வது சரியென, ஜனாதிபதி கூறியிருந்தார்.


ஆனால், பிலிப்பைன்ஸ் ஜனாதிபதியின் செயற்பாட்டுக்கு சர்வதேச நாடுகளில் இருந்து விமர்சனங்கள் வந்துகொண்டிருக்கின்றன.

எனினும், சட்டரீதியாக நாம்குற்றவாளிகளுக்கு மரண தண்டனையை நிறைவேற்றும்போது இவ்வாறான விமர்சனங்கள் வராது என்றே நாம் நம்புகிறோம்.

இதற்காக, நாம் ஜனாதிபதிக்கு முழுமையான ஒத்துழைப்புக்களை வழங்கவும் தயாராகவே இருக்கிறோம். எனவே, போதைப்பொருள் குற்றச்சாட்டின் கீழ் மரண தண்டனை பெற்ற கைதிகளுக்கு மரண தண்டனையை நிறைவேற்ற வேண்டும் என நாம் ஜனாதிபதிக்கு வலியுறுத்துகின்றோம். இதற்கான திகதியை அவர் வெகுவிரைவில் அறிவிக்க வேண்டும்" என அஜித் பி. பெரேரா மேலும் தெரிவித்தார். (இ-7)

## கோத்தபாயவுக்கு எதிராக ஞானசார தேரர் களமிறக்கம்





(கொழும்பு)

சிறைத்தண்டனை அனுபவித்து வரும் பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொடஅத்தே ஞானசார தேரர் விடுதலை செய்யப்படவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

ஜனாதிபதியின் பொது மன்னிப்பில் ஞானசார தேரரை விடுதலை செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாக தாய் நாட்டிற்காக இராணுவம் என்ற அமைப்பு தெரிவித்துள்ளது.

ஞானசார தேரருக்கு பொது மன்னிப்புவழங்குவதற்கு ஆளுநர் அசாத் சாலி தலையிடுவது மிகவும் சந்தேகத்திற்குரிய விடயமாக உள்ளதென அதன் ஏற்பாட்டாளர் அஜித் பிரசன்ன தெரிவித்துள்ளார்.

ஞானசார தேரரை விடுதலை செய்யும் நடவடிக்கையை எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலுக்கு பின்னர் மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கேட்டுக்கொள்வதாக அவர் தெரிவித்தார்.

ஏதாவது ஒரு வகையில் ஞானசார தேரருக்கு விடுதலை வழங்கினால் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு முஸ்லிம் மக்களின் வாக்குகளை இல்லாமல் செய்வதற்கு சூழ்ச்சிகள் மேற்கொள்ளப்படுவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே இவ்வாறு தெரிவித்தார். (இ-7)

## நாடு தழுவிய போராட்டத்திற்கு 1000ரூபாய் இயக்கம் அழைப்பு




(மஸ்கெலியா)

மலையக தோட்டத் தொழிலாளர்களின் 1000 ரூபாய்சம்பள கோரிக்கையை முன்வைத்து 1000 ரூபாய் இயக்கத்தால் சுவரொட்டிகள் மஸ்கெலியா நகரின் முக்கிய பகுதிகளில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

இச்சுவரொட்டியில் தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த அடிப்படை சம்பளத்தை 1000 ரூபாய் ஆக்கு எனவும் நாடுதழுவிய போராட்டம் இன்று 23ஆம் திகதி இடம் பெறவுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-7)

## நாட்டைத் தாரைவார்க்கும் நடவடிக்கையிலிருந்து சந்திரிகா ஒதுங்கிக்கொள்ள வேண்டும்

### காலாவதியான "புடிங்" என்று கம்மன்பில கடும் விமர்சனம்



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க என்பவர் காலாவதியான "புடிங்" போன்ற ஒருவர் என பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில எம்.பி. தெரிவித்தார்.

சுவையான உணவுப்பொருளான புடிங் காலா வதியானதன் பின்னர் சுப்பர் மார்க்கட்டில் காட்சிப் பொருளாக வைத்தாலும் அது பெறுமதியற்ற ஒன்றாகும்.

இதுபோன்று தான் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் நிலையும் ஆகும்.

நாட்டைத் தாரைவார்க் கும் நடவடிக்கையிலிருந்து ஒதுங்கிக் கொள்ளுமாறு இவரிடம் கேட்டுக் கொள்கின் றோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் அக் கட்சியின் தலைமையகத்தில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு கூறினார். (இ-7)

## மாகாண தேர்தலைக்கோரி உயர்நீதிமன்றம் செல்லும் முன்னாள் முதலமைச்சர்கள்

(கொழும்பு)

மாகாண சபைத் தேர்தலை நடத்தக் கோரி உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தீர்மானித்துள்ளதாக வட மத்திய மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சர் எஸ்.எம். ரஞ்சித் தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, எதிர்வரும் வாரத்துக்குள் வடமத்திய, ஊவா மற்றும் சப்ரகமுவ ஆகிய மாகாணங்களின் முன்னாள் முதலமைச்சர்களுடன் இணைந்து வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் 4 மாகாண சபை களுக்கான தேர்தல்கள் ஒத்தி வைக்கப்பட்டு ஒரு வருடமும் 4 மாதங்களும் கடந்துள்ளதாகவும் வட மத்திய மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சர் எஸ்.எம். ரஞ்சித் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 200 | 160 | 170 | 160 |
| உருளைக்கிழங்கு | 100 | 70 | 60 | 60 | 80 |
| பச்சைமிளகாய் | 150 | 250 | 300 | 250 | 300 |
| தக்காளி | 100 | 100 | 100 | 50 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 80 | 80 | 40 | 60 |
| கோவா | 80 | 90 | 100 | 70 | 80 |
| கரட் | 100 | 120 | 120 | 90 | 120 |
| பூசணி | 50 | 40 | 20 | 40 | 40 |
| புடோல் | 80 | 120 | 70 | 70 | 80 |
| வாழைக்காய் | 60 | 100 | 80 | 60 | 100 |
| சின்ன வெங்காயம் | 140 | 120 | 160 | 110 | 160 |
| பெரிய வெங்காயம் | 80 | 100 | 80 | 70 | 100 |
| பாகற்காய் | 120 | 120 | 140 | 180 | 160 |
| வெண்டிக்காய் | 100 | 140 | 80 | 70 | 120 |
| கருணைக் கிழங்கு | 50 | 50 | 60 | 40 | 80 |
| பயற்றங்காய் | 140 | 180 | 160 | 150 | 160 |
| லீக்ஸ் | 120 | 130 | 140 | 110 | 120 |
| பீற்றூட் | 120 | 100 | 100 | 65 | 120 |
| கறிமிளகாய் | 200 | 180 | 160 | 150 | 160 |
| முருங்கைக்காய் | 1000 | 800 | 600 | 500 | 600 |
| போஞ்சி | 60 | 80 | 100 | 90 | 120 |
| கத்தரிதம்புள்ள | 100 | 250 | 140 | 150 | 150 |
| கீரை - 1பிடி | 30 | 20 | 20 | 40 | 40 |
| தேசிக்காய் | 150 | 120 | 100 | 100 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 45 | 30-40 | 30 | 30-50 |
| இராசவள்ளி | 100 | 150 | 140 | 150 | 150 |
| வெங்காயப்பூ | 100 | 100 | 120 | 100 | 120 |
| முள்ளங்கி | 40 | 60 | 80 | 30 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 60 | 40 | 20 | 50 |
| வல்லாரை | 20 | 50 | 20 | 15 | 20 |
| ஈரப்பலா | 60 | 80 | 50 | 120 | 50 |



தேசிய போதை ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு யாழ்.வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலய அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் இணைந்து வாதரவத்தை, பெரியபொக்கணை, வீரவாணி ஆகிய கிராமங்களுக்கு நேற்றையதினம் ஊர்வலமாகச் சென்று மக்களுக்குப் போதை ஒழிப்புத் தொடர்பான விழிப்புணர்வுகளை ஏற்படுத்தியதுடன் துண்டுப்பிரசுரங்களையும் வழங்கினர்.

## சிறுவர் அரங்கம்

# ஒரு தேவதையும் மயிலும்

முற்காலத்தில் பறவைகள், விலங்குகள் யாவும் மனிதர்களைப் போலவே பேசும் திறன் படைத்திருந்தன. ஒருநாள் காட்டில் அவைகளுக்குள் ஒரே சண்டை. காரணம் தங்கள் தங்கள் அழகைப் பற்றிய பெருமை. அழகை ஆராதிக்காதவர்கள் யார்?

இவைகளின் சண்டையை மிகவும் சுவாரஸ்யமாக வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த ஒரு தேவதை, "ஓ இவைகள் ஏன் இப்படி மனித குலத்தைப் போல் அழித்துக் கொள்கின்றன? இருக்கட்டும் நான் போய் என்னாலான உதவிகளை இவைகளுக்குச் செய்து இவைகளின் சண்டையை தீர்த்து வைக்கிறேன்!" என்று நினைத்து நல்ல மனதுடன் அவைகளின் முன் ஆஜராயிற்று.


"நண்பர்களே! நான் தேவலோகவாசி. உங்களுக்கு உதவுவதற்காகவே வந்துள்ளேன்.

உங்களில் யாருக்கேனும் உங்கள் அழகில் திருப்தியில்லையென்றால் என்னால் உங்களுக்கு நிச்சயமாக உதவ முடியும். உங்கள் முகத்தை ஏன் உங்கள் உடலைக்கூட என்னால் திருத்தி அமைக்க முடியும். உங்களில் யாருக்கு என்ன உதவி வேண்டுமோ தயங்காமல் சொல்லுங்கள். நான் மனமார உதவுகிறேன்!" என்றது.

"யார் இவர்? யார் இவர்? இவர் யார் எங்களின் அழகைப் பற்றி கேள்வி கேட்க?" என்ற திமிர் அவைகளுக்குள் துளிர்விட, சட்டென அவைகள் மௌனமாகின. ஆனால், அந்த நல்ல உள்ளம் படைத்த தேவதை அதையெல்லாம் பொருட்படுத்தாமல் தன் அருகில் இருந்த குரங்கைப் பார்த்தது.

"சகோதரா! உன்னை எல்லாரும் பரிகாசம் செய்கிறார்களே, உனக்கு வருத்தமாக இல்லையா? நீ சரி என்று சொல். கண் இமைக்கும் நேரத்தில் உன்னை மிக அழகானவனாக மாற்றிவிடுகிறேன்!" என்றது.

இதைக் கேட்ட குரங்கின் முகம் சிவந்தது, அட யார் வேண்டுமானாலும் சிரிக்கட்டும். எனக்கு அதைப்பற்றி அக்கறை இல்லை. எனக்கு மிக அழகிய கால்கள், அதற்கு இணையாக இரண்டு கரங்கள். மேலும், என் அழகிற்கு மெருகூட்டுவது என் நீண்ட வால். என்னைப் போல் மரத்திற்கு மரம் மிக லாவகமாகத் தாவ யாரால்



முடியும்? அந்த வேகத்திற்கு ஈடாக ஒரு பறவையால் கூட முடியாது.

"இதோ என் அருகில் கோரத்தின் மொத்த உருவாக நிற்கிறானே இந்த குதிரை, இவனை விட எத்தனை மடங்கு அழகானவன் நான் தெரியுமா? இவன் என்னை விட பல மடங்கு விகாரமாக பெரிய உருவம் கொண்டவன். என் அழகிய வாலை விட மிக கோரமான தடிமனான அடர்த்தியான வாலை மிக ஜம்பமாக ஆட்டிக் கொண்டிருக்கிறானே. இவனின் இந்த இரண்டு அடி நீள அசடு வழியும் முகத்தை வேண்டுமானால் திருத்தி அமையேன் பார்க்கலாம்!" என்றது மிக ஜம்பமாக.

"ஏய்! ஏய்! என்னைப் பற்றி என்னடா சொல்றே?" என்று சீறிய குதிரை தன் பலம் கொண்ட மட்டும் குரங்கை உதைத்து நொறுக்கியது. பின் தேவதையைப் பார்த்து, சிநேகமான நண்பனே! சொல் என் அழகிற்கு என்ன குறைச்சல்? நான் மிக பளபளப்பாக, மிகவும் அழகாக இருக்கிறேன். என் அழகிய வாலால் ஈக்களை மட்டும் அல்ல, வேண்டாதவர்களையும் விரட்டி அடிக்கிறேன். ஆகையால் உன் உதவி எனக்குத் தேவையில்லை.

வேண்டுமானால் கோரத்தின் மொத்த உருவான என் இனிய நண்பன் இந்த யானையை திருத்தி அழகாக்கு. பாவம் மலைபோன்ற இவனின் கறுத்த உடல், மிகவும் தடித்த உலக்கை போன்ற கால்கள், படு கோரமான உலக அதிசயமான நீண்ட மூக்கு, இந்த இலட்சணங்களுக்கு சற்றும் ஒவ்வாத மிகவும் குட்டையான வால். இவனுக்குத்தான் உன் உதவி மிகவும் தேவை. என் அழகிற்கு இணையாக இவனை மாற்று நண்பா! என்றது மிகவும் அட்டகாசமாக.

இதைக் கேட்ட யானைக்கு வந்த கோபத்தை பார்க்க வேண்டுமே. டேய்! என்று கர்ஜித்துவிட்டு, தன் தும்பிக்கை நிறைய தண்ணீரை நிரப்பி குதிரை மேல் பாய்ச்சியது. தன் வாலை சுழற்றி தன் அருகில் இருந்தவர்களைத் துரத்தி, தன் கால்களால் தரையில் ஓங்கி ஓங்கி அடிக்க மண்ணும் சகதியும் கூடியிருந்த கூட்டத்தின் மேல் ஒரே சகதி அபிஷேகம்!

"என் அழகிற்கு என்ன குறைச்சல்? இதைவிட என்னை எப்படி அழகாக்குவாய்? என் உருவம்தான் என் பலம், என் அழகு. உனக்கு உன் திறமையை வெளிப்படுத்த ஒரு சந்தர்ப்பம் வேண்டுமெனில், அதோ அந்த மரத்தில் உட்கார்ந்திருக்கும் மிக பரிதாபத்திற்குரிய அந்த மயிலைப் பார். அழகான மூக்கில்லை. பித்தளை கெட்டிலின் மூடியைப் போன்ற சின்னத்தலை, பாவம். செத்த காக்கையைப் போல் கறுத்த சிறகுகள். குச்சி குச்சியாக விளக்குமாற்று குச்சிபோன்ற வால். தயை செய்து அவனை அழகாக்கு. உம் சீக்கிரம். உன் கை வண்ணத்தைப் பார்க்க மிக ஆவலாக இருக்கிறது!" என்றது மிக ஜம்பமாக.

உடனே சட்டென்று மரத்திலிருந்து, "பெருமைக்குரிய கருணையான தேவதையே! தயவு செய்து என்னை அழகாக்கு. குரங்கைப் போன்ற கால்கள் இல்லை. குதிரையைப்போன்ற வாலில்லை. யானையைப் போன்ற உடலும், மூக்கும் இல்லை. இவர்களைப் போல் பெருமைப்பட்டுக் கொள்ள என்னிடம் என்ன இருக்கிறது. தயவு செய்து எனக்கு உதவு.

என்றென்றும் உனக்கு நான் நன்றிக் கடன்பட்டவனாக இருப்பேன்!" என்றது மிகவும் சோகம் கப்பிய குரலில்.

"மயிலே! கவலைப்படாதே. உன் தன்னடக்கத்திற்கு என்றுமே மதிப்புண்டு. அதற்கு வெகுமதியாக இதோ பார்!" என்று சொல்லி கண் இமைக்கும் நேரத்தில் தன் கைவண்ணத்தை காட்ட ஆரம்பித்தது.

"இனி உன் மிக அழகான நீளமான தோகையைக் கண்டு உலகமே வியக்கும். உன் தோகையில் நான் தீட்டப் போகும் கண்களைப் போன்ற மிகவும் கவர்ச்சியான கண்கள், அரண்மனையில் பிறக்கும் இளவரசிக்குக் கூட இருக்காது!" மேற்கொண்டு பேச்சை முடிக்கும் முன், ஓ அங்கே கண்கவர் மயிலாக உரு மாறியது.

கூடியிருந்த அந்த மிருகங்களின் கூட்டம், பெருமை கொழுந்து விட்டு எரியும் கண்களுடன் அதனை பார்த்து வியந்தன.

"ஐயோ இந்த தேவதையை பார்த்து தப்புக் கணக்கு போட்டு நம் தலையில் நாமே மண்ணை வாரி போட்டுக் கொண்டு விட்டோமே" என்று மனதிற்குள் புழுங்கிக் கொண்டன என்று சொல்லவும் வேண்டுமா?

> தவறு நேர்ந்து விடுமோ என்று அஞ்சி எந்த செயலையும் செய்யாது பின்வாங்குவது இழிவானது!
> ~ யாரோ

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## ஊர் ஒன்றுபட்டால் ஒழிக்கலாம் போதைவஸ்தை

தமிழர்களின் வாழ்வியல் பண்பாட்டு நியமங்கள் மிகவும் உச்சமானவை. எதை எடுத்தாலும் அதற்குள் இருக்கின்ற தத்துவங்கள் ஆழமானவை.

இதனை உதாரணப் படுத்துவதற்காக கோயில்களில் நடைபெறும் தேர்த் திருவிழாவைக் குறித்துரைக்கலாம்.

மிகப்பிரமாண்டமான தோற்றத்தில், அதிகளவான செலவில் தேரை நிர்மாணித்ததன் நோக்கம் ஊரையும் மக்களையும் ஒன்று சேர்ப்பதாகும்.

அதாவது தேரில் சுவாமியை ஆரோகணிக்கச் செய்து வடம் கொண்டு தேர் இழுக்கின்ற விழா இடம் பெறும். அத்துணை பெரிய தேரை இழுத்து வீதி வலம் கொண்டு வருவதற்காக அந்த ஊரே திரளும்.

இதனால்தான் ஊர்கூடித் தேர் இழுத்தல் என்ற அடைமொழி உருவானது. மிகப் பெரிய தேராயினும் ஊர் மக்கள் ஒன்றுகூடி அதனை இழுத்தால் வீதி வலம் வருகின்ற தேர்த் திருவிழாவை மிகச் சிறப்பாக நிறைவேற்ற முடியும்.

எனவே ஊர் மக்கள் ஒன்றுபட்டால் சிலரால் ஆகாத காரியத்தையும் நிறைவேற்ற முடியும் என்ற தத்துவம் உணர்த்தப்படுகிறது.

இஃது தேர் இழுத்தல் என்பதற்கு மட்டும் பொருத்துடையதன்று. தேர் இழுத்தல் என்பது ஊரை ஒற்றுமைப் படுத்துவதற்கும் ஊர் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்பதற்குமான ஏற்பாடாகும்.

இஃது தமிழர் பண்பாட்டில் ஊர் திரண்டு ஒற்றுமைப்படுவதன் அவசியத்தை எடுத்தியம்புகிறது.

இப்போதெல்லாம் போதைவஸ்து என்ற விவகாரம் இலங்கைத் தீவை ஆட்டிப்படைக்கிறது. அதிலும் யுத்தத்துக்கு பின்பாக வடபுலம் போதைவஸ்து பாவனையுள்ள கேந்திர நிலையமாக மாறிவிட்டது.

இந்நிலைமையானது எங்கள் இளம் சந்ததிக்கு ஈனம் விளைவித்து எங்கள் தமிழினத்தையே துன்பத்துக்குள் ஆழ்த்தப் போகின்றது.

அதிலும் குறிப்பாக போதைவஸ்து கடத்தல் காரர்களும் விற்பனையாளர்களும் மாணவர் சமூகத்தை நோக்கி தங்கள் பார்வையைத் திருப்பியுள்ளனர்.

இந்நிலைமையானது பேராபத்தை ஏற்படுத்த வல்லது. அதிலும் குறிப்பாக ஆசிரியர்கள், மாணவர்களைத் தண்டிக்கக் கூடாது என்றவாறான சட்டங்களும் சிறுவர் உரிமைகளும் இருக்கின்ற போது மாணவர்கள் மீதான கண்காணிப்பும் கரிசனையும் பற்றாக்குறைக்கு ஆளாகியிருக்கின்ற இவ்வேளையில், மாணவர்களை நோக்கியதாக போதைப்பொருள் பாவனையை நகர்த்துவது பேராபத்தை விளைவிக்கும் என்பது நிறுதிட்டமான உண்மை.

எனவே போதைப்பொருள் பாவனையில் எங்கள் சமூகம் பாதிக்கப்படுவதை எவரும் அனுமதிக்கக் கூடாது.

எனவே போதைவஸ்து என்ற கொடூரமான தெரிவை வீழ்த்த ஊர்கூடி ஒற்றுமைப்பட வேண்டும். ஊர் மக்கள் ஒன்று திரண்டால் போதைவஸ்து கடத்தலை, விற்பனையை எந்தவகையிலும் வேரறுக்க வேண்டும் என்று நினைத்தால் அதனை உடனடிச் சாத்தியமாக்க முடியும்.

நமக்கேன் வீண் வம்பு என்றிராமல், எங்கெல்லாம் போதைவஸ்துப் பாவனை இருக்கிறதோ யாரெல்லாம் இவ்விடயங்களில் ஈடுபடுகின்றனரோ அதைப் பற்றிய தகவல்களை உரிய இடங்களுக்கு தெரியப்படுத்துவது கட்டாயமானதாகும்.

இந்தத் தார்மீகக் கடமையை செய்வதனூடாக போதைவஸ்தை எங்கள் மண்ணிலிருந்து ஒழித்துக் கட்ட முடியும்.

# யாழ். நகரப் பகுதியில் அதிகரித்துவரும் டெங்கு நோயைக் கட்டுப்படுத்த விசேட திட்டம்

## சட்ட நடவடிக்கைக்கு முன்னுரிமை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரப் பகுதிக்குட்பட்ட நாவாந்துறை, நல்லூர், அரியாலை, வண்ணார்பண்ணை போன்ற இடங்களில் டெங்கு நோயின் தாக்கம் என்றுமில்லாதவாறு அதிகரித்துச் செல்கின்றது.

இதனைக் கட்டுப்படுத்த சுகாதாரத் திணைக்களத்தினால் விசேட செயற்றிட்டம் இன்றும் நாளையும் (புதன்கிழமை, வியாழக்கிழமை) நடைமுறைப்படுத்தப்படவுள்ளன. அன்றைய தினங்களில் தங்களின் சுற்றாடலில் நுளம்புப் பெருக்கத்திற்கு ஏதுவான இடங்கள் உள்ளனவா? எனப் பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளது.

இதன்போது நுளம்புப் பெருக்கத்திற்கு ஏதுவான இடங்கள் தங்களின் சுற்றாடலில் இனங்காணப்படின் அதிகரித்துச் செல்லும் டெங்கு நோயிலிருந்து மக்களைக் காப்பாற்றும் நோக்கம் கருதி எவ்வித முன்னறிவித்தலுமின்றி சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படவுள்ளது.

எனவே அதிகரித்துச் செல்லும் டெங்கு நோயைக் கட்டுப்படுத்துவதற்கு அனைவரும் ஒன்றிணைந்து பின்வரும் விடயங்களைக் கருத்திற்கொள்வோம்.

அதிகமான இடங்களில் குளிர்சாதனப் பெட்டியின் பின்புறத்தில் காணப்படும் நீர் தேங்கக்கூடிய பகுதியும் நுளம்புப் பெருக்கத்திற்கு ஏதுவான இடங்களில் ஒன்றாக இனங்காணப்பட்டுள்ளன.

தண்ணீர் சேமித்து வைக்கப்படும் தொட்டியும் நுளம்புப் பெருக்கத்திற்கு ஏதுவான இடங்களில் ஒன்றாக இனங்காணப்பட்டுள்ளது.

வீட்டுச் சுற்றாடலில் காணப்படும் தேவையற்ற பொருட்களும் நுளம்புப் பெருக்கத்திற்கு ஏதுவான இடங்களில் ஒன்றாக இனங்காணப்பட்டுள்ளன என யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஏ.தேவநேசன் அறிவித்துள்ளார். (இ)

# பிணைமுறி மோசடி தொடர்பில் ஜனாதிபதி வழக்கு தொடுக்க வேண்டும்

## அஜித் பி பெரேரா கோரிக்கை

(கொழும்பு)

மத்தியவங்கி பிணைமுறி மோசடி உட்பட பாரிய நிதி மோசடி தொடர்பான ஆணைக்குழுவின் பரிந்துரையில் தெரிவிக்கப்பட்ட மோசடிகாரர்களுக்கு எதிராக ஜனாதிபதி உடனடியாக வழக்கு தொடுக்கவேண்டும்.

ஜனாதிபதிக்கே அந்த அதிகாரம் இருக்கின்றது என ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் அஜித் பி பெரேரா தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற விசாரணை ஆணைக்குழுக்கள் (திருத்தச்) சட்டமூலம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து குறிப்பிடுகையில்,

மத்திய வங்கி பிணைமுறி மோசடி உட்பட பாரிய நிதி மோசடி தொடர்பான ஆணைக்குழுவின் பரிந்துரையில் தெரிவிக்கப்பட்டிருக்கும் மோசடிக்காரர்களுக்கு எதிராக ஜனாதிபதி உடனடியாக வழக்கு தொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஜனாதிபதிக்கே அந்த அதிகாரம் இருக்கின்றது. இந்த வழக்குகளை விசேட நீதிமன்றங்களில் விசாரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கின்றேன் என்றார். (ம-3)

# குளவிக்கொட்டுக்கு இலக்காகி 128 மாணவர்கள் பாதிப்பு!

கடுகஸ்தோட்டைப் பகுதியில் பாடசாலையொன்றுக்கருகில் காணப்பட்ட விளையாட்டு மைதானத்தில் குளவிக் கொட்டுக்கு இலக்காகி 128 மாணவர்கள் நேற்று முன்தினம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்ட 128 மாணவர்களில் 88 மாணவர்கள் கடுகஸ்தோட்டை வைத்தியசாலையிலும், ஏனைய 40 மாணவர்கள் கண்டி வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இதுவரையில் கடுகஸ்தோட்டை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த 4 மாணவர்களும், கண்டி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த 6 மாணவர்களும் வீடுதிரும்பியுள்ளதாகவும், இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருவதாகவும் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (இ-7)

# விளையாட்டுப் போட்டி

(கிளிநொச்சி)

கிளி/ சோரன்பற்று சி.சி.த.க. பாடசாலை வருடாந்த விளையாட்டுப்போட்டி இன்று புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் நடராசா ராமதாஸ் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராகவடக்குமாகாண முன்னாள் உறுப்பினர் பசுபதி அரியரட்ணம், சிறப்பு விருந்தினர்களாக காவேரி கலாமன்ற நிறைவேற்று இயக்குநர் அருட்கலாநிதி ரி.எஸ்.யோசுவா, கிளிநொச்சி மாவட்ட திருநெறிக்கழக செயலாளர் அம்பலவாணர் சிவஞானசுந்தரம் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

கௌரவ விருந்தினராக இலங்கை சாரணர் சங்க கிளிநொச்சி மாவட்ட உதவி ஆணையாளர் நடராசா மதுராகரன் கலந்து கொள்ளவுள்ளார். (2)

# பொது இடத்தில் மது அருந்திய இருவர் பொலிஸாரால் கைது!

(சாவகச்சேரி)

பொது இடத்தில் மது அருந்திய குற்றச்சாட்டில் இருவர் சாவகச்சேரி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தென்மராட்சி கைதடிப் பகுதியில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு பொது இடத்தில் மது அருந்திய குற்றச்சாட்டில் இருவர் சாவகச்சேரி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இக்கைதுநடவடிக்கையை உப பொலிஸ் பரிசோதகர் இ.சேந்தன் தலைமையிலான பொலிஸ் பிரிவினர் முன்னெடுத்திருந்தனர். (இ-30)

## ஆன்மீகச் சிந்தனைகள்

### ஒரே நிமிடத்தில் புண்ணியம்

✦ தன்னுடைய புத்தகம், பெண், பணம் இவை பிறரிடம் கொடுத்தால் போனது போனதுதான். ஒருவேளை திரும்பி வருவதாயின் புத்தகம் கிழிந்தும், பெண் மாசுபடிந்தும், பணம் அளவு குறைந்தும்தான் வரும்.

✦ முதலை வாய்ப்பட்ட மணியை எடுத்து விடலாம். அலைபாயும் கடலையும் அப்புறமாகத் தாண்டிடலாம். பாம்பையும் மாலையாக கழுத்தில் அணிந்திடலாம். ஆனால் மூடனைத் திருத்த யாராலும் இயலாது.

✦ ஆறு தரம் பூமியை வலம் வருதலும், பதினாறாயிரம் தடவை காசியில் குளித்தலும், பலநூறு தடவை சேது ஸ்நானம் செய்தாலும் ஆகிய இவற்றால் கிடைக்கும் புண்ணியம், தாயைப் பக்தி பூர்வமாக ஒரு தரம் வணங்கினால் கிடைக்கும்.

✦ விளக்கு நமக்கு எத்தனை வண்ணமாக உதவி செய்கிறது என்பதை நாம் அது இல்லாதபோதுதான் உணர முடியும். தாய் நம்மை எப்படியெல்லாம் வளர்க்கின்றாள் என்பதை தாய் இல்லாத போதுதானே உணர முடிகிறது.

✦ பறவைகட்கு இரு சிறகுகள் மனிதனுக்கு இரு கால்கள், இரு கைகள், இரு கண்கள். புகை வண்டிக்கு தண்டவாளங்கள் இருப்பதுபோல் மாணவர்களுக்கு இரு குணங்கள் இருக்க வேண்டும். ஒன்று அடக்கம், மற்றொன்று குருபக்தி. இந்த இரு குணங்கள் உள்ள மாணவன்தான் முன்னேற்றமடைவான்.

✦ இன்பமான சொல்லும், சிரித்த முகமும், பார்வையும், நண்பர்களின் சொல்லைக் கேட்க வேண்டுமென்ற எண்ணமும், அவர்களைக் கண்டவுடன் சந்தோஷப்படுதலும் ஆசையில்லாதவனின் லட்சணங்களாகும்.

✦ தீப்பந்தத்தைக் கீழ்நோக்கிப் பிடித்தாலும் அதன் ஜுவாலை மேல்நோக்கி எழுவதுபோல் உயர்ந்த குணத்தை கீழ்ப்படுத்த சொப்பனத்திலும் முடியாது.

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வியாழக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை யாழ். பிரதேசத்தில் நாவற்குழி Sanken Construction இலும், வவுனியா பிரதேசத்தில் கல்மடுவிலிருந்து இரணை இலுப்பைக் குளம் ஊடாக சின்ன வலயன்கட்டு வரை, முள்ளிக்குளம், கீரிசுட்டான் ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில் ஆத்திக்குழி ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.

# வேலணை வேங்கை-கொக்குவில் ஸ்ரார் அணிகள் அடுத்த சுற்றில்





பிரிவு - 2 அணிகளுக்கிடையிலான முதற்சுற்று ஆட்டங்களில் இருந்து, வேலணை வேங்கைகள் அணியும், கொக்குவில் ஸ்ரார்ஸ் அணியும் அடுத்த சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ளன.

யாழ்.மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில், தொழில்முறை கிரிக்கெட் சுற்றுப்போட்டியான, யாழ்ப்பாணம் சுப்பர் லீக் இருபது-20 சுற்றுப்போட்டிகள் தற போது நடைபெற்று வருகின்றன. யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மற்றும் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானங்களில் இந்தப் போட்டிகள் நடைபெறுகின்றன.

இந்தச் சுற்றுப்போட்டியில் பங்குபற்றும் 8 அணிகளும் இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அந்த வகையில் ஏ பிரிவில் ஜப்னா பந்தேர்ஸ், பருத்தித்துறை சுப்பர் கிங்ஸ், அரியாலை வோரியர்ஸ், நல்லூர் பிறவுண் கொஸ் அணிகளும், பி பிரிவில் வேலணை வேங்கைகள், கொக்குவில் ஸ்ரார்ஸ், பண்ணை ரில்கோ கிளாடியேற்றர்ஸ் மற்றும் ரில்லியூர் ரைரன்ஸ் ஆகிய அணிகளும் உள்ளன.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நடைபெற்ற முதற்சுற்று ஆட்டமொன்றில் பண்ணை ரில்கோ கிளாடியேற்றர்ஸ் அணியை எதிர்த்து வேலணை வேங்கைகள் அணி மோதியது.

நாணயச் சுழற்சியில் வென்ற பண்ணை ரில்கோ அணி, முதலில் களத்தடுப்பில் ஈடுப்ட தீர்மானித்தது. துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய வேலணை வேங்கைகள் அணி, ஆரம்ப இரண்டு விக்கெட்களையும், 35 ஓட்டங்களுக்குள் இழந்தது. எனினும், 3 ஆவது விக்கெட்டுக்கான ஜோடி சேர்ந்த எஸ்.ஜனானந்தசர்மா மற்றும் ரி.சத்தியன் ஆகியோர் அணிக்கு நம்பிக்கையளித்தனர். சத்தியன் அரைச்சதம் கடந்து, 55 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். ஜனானந்த சர்மா 34 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். அதன் பின்னர் களம்நுழைந்தவர்களும், பெரிதாக எதனையும் செய்ய முடியவில்லை. 20 ஓவர்களில் வேலணை வேங்கைகள் அணி, 09 விக்கெட்களை இழந்து 183 ஓட்டங்களை எடுத்தது.

பந்துவீச்சில் பண்ணை ரில்கோ அணி சார்பாக, றதீஸன் 30 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களையும், மதன் 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

184 என்ற வெற்றியிலக்கை நோக்கி பதிலளித்தாடிய பண்ணை ரில்கோ அணி, தொடக்கம் முதல் மிகவும் தடுமாறியது. அடுத்தடுத்து விக்கெட்களை பறிகொடுத்தமையால், ஓட்டங்களை பெறமுடியாமல் திணறியது. தடுமாற்றம், 14.5 ஓவர்களில் நிறைவுக்கு வந்தது. அனைத்து விக்கெட்களையும் இழந்து 81 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் சொல்லிக்கொள்ளும்படியாக ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் அனஸ்ராஜ் 27 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார்.

முதற்சுற்றில் மூன்று போட்டிகளிலும் தோல்வியடைந்தமையால், பண்ணை ரில்கோ கிளாடியேற்றர்ஸ் அணி சுற்றிலிருந்து வெளியேறியது. மூன்றிலும் வெற்றி பெற்ற வேலணை வேங்கைகள் அணி, முதல் அணியாக அடுத்த சுற்றுக்குள் நுழைந்தது.

மற்றுமொரு போட்டியில், ரில்லியூர் ரைரன்ஸ் அணியை எதிர்த்து கொக்குவில் ஸ்ரார்ஸ் அணி மோதியது. நாணயச் சுழற்சியில் வென்ற கொக்குவில் ஸ்ரார்ஸ் அணித் தலைவர் வினோத் முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தார்.

அதற்கிணங்க களமிறங்கிய ரில்லியூர் ரைரன்ஸ் அணி, ஒரு ஓட்டம் பெறுகையில், முதலாவது விக்கெட்டினை இழந்து, ஆரம்பத்திலேயே சறுக்கியது. அதன் பிறகு துடுப்பாட்ட வீரர்கள் நிதான ஆட்டம் மூலம் கடுமையாக போராடினார்கள். எனினும் விக்கெட் இழப்பினை சரி செய்ய முடிய வில்லை. 19 ஓவர்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 140 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது. துடுப்பாட்டத்தில் துவாரகன் 31, துஸியந்தன் 26 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் கொக்குவில் ஸ்ரார்ஸ் அணி சார்பாக, சுபேந்திரன், தீபன் மற்றும் வாமணன் ஆகியோர் தலா 2 விக்கெட்களைக் கைப்பற்றினர்.

141 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கை நோக்கி கொக்குவில் ஸ்ரார்ஸ் அணி களமிறங்கியது. அணியின் முக்கிய துடுப்பாட்ட வீரர் ஜனுதாஸ் இல்லாமல், துடுப்பாட்டம் பெரிதும் சோபையிழந்தது. 12.5 ஓவர்களில் 77 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்களை இழந்து தோல்வியடையும் நிலையில் இருந்த கொக்குவில் ஸ்ரார்ஸ் அணியை, வாமணன் மற்றும் கேதீஸன் ஜோடி காப்பாற்றி கரை சேர்த்தனர்.

18.4 ஓவர்களில் 7 விக்கெட்களை மாத்திரம் இழந்து கொக்குவில் ஸ்ரார்ஸ் வெற்றியிலக்கை அடைந்தது. வாமணன் 20 பந்துகளில் 42 ஓட்டங்களையும், கேதீஸன் 25 ஓட்டங்களை யும், சுஜன் 22 ஓட்டங்களையும், வினோத் 20 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். பந்துவீச்சில் ரில்லியூர் ரைரன்ஸ் அணி சார்பாக, கபில் 19 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களையும், சுஜந்தன் 2 விக்கெட்களையும் கைப்பற்றினர். (க-26)

# அரியாலை வோரியர்ஸ், ஜப்னா பந்தேர்ஸ் அணிகள் வெற்றி





யாழ்.மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில், தொழில்முறை கிரிக்கெட் சுற்றுப்போட்டியான, யாழ்ப்பாணம் சுப்பர் லீக் இருபது-20 சுற்றுப்போட்டிகள்தற்போது நடைபெற்று வருகின்றன. யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மற்றும் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானங்களில் இந்தப் போட்டிகள் நடைபெறுகின்றன.

இந்தச் சுற்றுப்போட்டியில் பங்குபற்றும் 8 அணிகளும் இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அந்த வகையில் ஏ பிரிவில் ஜப்னா பந்தேர்ஸ், பருத்தித்துறை சுப்பர் கிங்ஸ், அரியாலை வோரியர்ஸ், நல்லூர் பிறவுண் கொஸ் அணிகளும், பி பிரிவில் வேலணை வேங்கைகள், கொக்குவில் ஸ்ரார்ஸ், பண்ணை ரில்கோ கிளாடியேற்றர்ஸ் மற்றும் ரில்லியூர் ரைரன்ஸ் ஆகிய அணிகளும் உள்ளன.

கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற முதற்சுற்று ஆட்டமொன்றில், ஜப்னா பந்தேர்ஸ் அணியை எதிர்த்து நல்லூர் பிறவுண்கொஸ் அணி மோதியது.

நாணயச் சுழற்சியில் வென்று முதலில் ஆடிய நல்லூர் பிறவுண்கொஸ் அணி, துடுப்பாட்டத்தில் மிக மோசமாக சொதப்பியது. 20 ஓவர்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 124 ஓட்டங்களை மாத்திரம் எடுத்தது. துடுப்பாட்டத்தில் பிரபவன் ஆட்டமிழக்காமல் 31 ஓட்டங்களையும், ஜேம்ஸ் 22 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் ஜப்னா பந்தேர்ஸ் அணி சார்பாக, அனுரதன் 22 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களையும், சுரேந்திரன், டர்வின் தலா 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

125 ஓட்டங்கள் பெற்றால் வெற்றியென்ற இலக்குடன் பதிலளித்தாடக் களமிறங்கிய ஜப்னா பந்தேர்ஸ் அணி, மோகன்ராஜின் அதிரடியான அரைச்சதத்தின் உதவியுடன் 16.2 ஓவர்களில் 4 விக்கெட்களை மாத்திரம் இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. துடுப்பாட்டத்தில் மோகன்ராஜ் 56 ஓட்டங்களையும், அருண்ராஜ் 33 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் பிரபவன் 2 விக்கெட்களைக் கைப்பற்றினார்.

மற்றுமொரு ஆட்டத்தில், பருத்தித்துறை சுப்பர் கிங்ஸ் அணியை எதிர்த்து அரியாலை வோரியர்ஸ் அணி மோதியது. நாணயச் சுழற்சியில் வென்ற அரியாலை வோரியர்ஸ் அணித் தலைவர் செல்ரன் முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தார்.

முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய பருத்தித்துறை சுப்பர் கிங்ஸ் முதல் பந்திலேயே சத்தியனை இழந்தது. தொடர்ந்தும், விக்கெட் ஒரு பக்கத்தால் வீழ்த்தப்பட தனியாளாக நின்று றஜீவன் போராடினார். றஜீவன் அரைச்சதம் கடந்து அணியை கௌரவமான ஓட்ட எண்ணிக்கைக்கு உயர்த்திச் சென்றார். 20 ஓவர்களில் 6 விக்கெட்களை இழந்து 155 ஓட்டங்களை எடுத்தது. றஜீவன் ஆட்டமிழக்காமல் 63 ஓட்டங்களையும், பிரசாந்தன் 23 ஓட்டங்களையும், லதுசன் ஆட்டமிழக்காமல் 23 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் அரியாலை வோரியர்ஸ் அணி சார்பாக, ஜெரிக்துசாந்த் மற்றும் பிரியலக்சன் ஆகியோர் தலா 2 விக்கெட்களைக் கைப்பற்றினர்.

156 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென்ற இலக்குடன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய அரியாலை வோரியர்ஸ் அணி, ஜெரிக் துசாந்த், துவாரகசீலன் மற்றும் பிரியதர்சன் ஆகியோரின் துடுப்பாட்டத்தால், 19.1 ஓவர்களில் 7 விக்கெட்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. ஜெரிக் துசாந்த் 41 ஓட்டங் களையும், துவாரகசீலன் 29 ஓட்டங்களையும், பிரியதர்சன் 23 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர். (க-26)

## முல்லையில் அமைக்கப்படும்...

அங்கு பௌத்த விகாரை இருந்தது. முறைப்படியான அனுமதியின் கீழேயே விகாரை அமைப்பதாக தெரிவித்து. பௌத்த பிக்குகள் கட்டுமானப்பணி செய்து வந்தது சட்டவிரோதமானது என்பது அம்பலமாகியுள்ளது. எனினும், இந்த தகவல்களை தெரிந்திருந்த அரச அதிகாரிகள் இதுவரை மௌனமாக இருந்ததும் வெளிச்சத்திற்கு வந்துள்ளது.

கரைத்துறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்திருந்த பழைய செம்மலை நீராவியடிப் பிள்ளையார் ஆலயத்தை, செம்மலை கிராம மக்கள் ஆண்டாண்டு காலமாக வழிபட்டு வந்தனர். யுத்தம் நிறைவுக்கு வந்த பின்னர், பிள்ளையார் ஆலயத்தில், புதிய ஒரு பௌத்த ஆலயம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. தற்போது அங்கு பௌத்த ஆலயத்தில் பிரம்மாண்ட புத்தர் சிலை ஒன்றும் அமைக்கப்பட்டு வருகின்றது.

நீராவியடிப் பிள்ளையார் ஆலயத்திற்கு வழிபாட்டுக்குச் செல்லும் செம்மலைக்கிராம மக்களுக்கு, சட்டவிரோத விகாரையை அமைத்துள்ள பௌத்த பிக்குவால் இடையூறுகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றது. அண்மையில், ஆலயத்தில் பொங்கல் விழாவிற்கு சென்ற செம்மலை கிராம மக்களுக்கு இடையூறு விளைவிக்கப்பட்டது. இதனால் அங்கு பதற்றமும் ஏற்பட்டிருந்தது.

இந்த நிலையில் இந்த விகாரை அமைக்கப்படுவது தொடர்பாக, கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தில் செம்மலை கிராம அபிவிருத்தி சங்கத்தினால் தகவல் அறியும் உரிமை சட்டம் மூலம், தகவல் கோரப்பட்டிருந்தது. அந்த தகவல்களை கரைதுறைப்பற்று பிரதேச செயலகம் வழங்கியுள்ளது. அந்த தகவல்களின்படி, இங்கே அமைக்கப்பட்டுவரும் விகாரை அனுமதி பெறப்பட்டோ, விதிமுறைகளிற்கு உட்பட்டோ அமைக்கப்படவில்லையென்ற தகவல் வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

2018 ஆம் ஆண்டு ஒன்பதாம் மாதம் 14 ஆம் திகதி தகவல் அறியும் உரிமைச் சட்டம் (விண்ணப்ப இலக்கம் MU/MPP/DS/EB/Info/24) மூலம் கோரப்பட்ட தகவலுக்கு அமைவாக கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தினால் இந்த விகாரை அமைக்கப்பட்டிருப்பது தொடர்பான தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளது.

செம்மலை நீராவியடிப் பிள்ளையார் ஆலய வளவில் விகாரை எதுவும் இருக்கவில்லை.

இதை அண்டிய பிரதேசத்தில் பௌத்த மதத்தை வழிபடுகின்ற பௌத்தர்கள் நிரந்தரமாக வாழ்ந்ததற்கான ஆதாரங்கள் எதுவும் இல்லை.

இவ்வளாகத்தில் விகாரை அமைப்பதற்கான காணி எதுவும் ஒதுக்கப்படவில்லை.

பௌத்த மதகுரு தங்கியிருக்கும் அரச காணியில் அவர் தங்கியிருப்பதற்கான காணி அனுமதிப் பத்திரம் பிரதேச செயலகத்தினால் வழங்கப்படவில்லை.

தற்போது பௌத்த மத குருவினால் அங்கு மேற்கொள்ளப்பட்டு வரும் கட்டுமானங்களுக்கு பிரதேச செயலகத்தால் எந்தவித அனுமதியும் வழங்கப்படவில்லை.

விகாரை அமைப்பதற்கு அரச காணி ஒன்றை கோரி பிரதேச செயலகத்திடம் விண்ணப்பங்கள் எதுவும் சமர்ப்பிக்கப்படவில்லை.

விகாரை அமைந்துள்ள பகுதிக்கு அண்மையில் 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நடைபெற்ற கிறவல் அகழ்விற்கு பிரதேச செயலகத்தினால் எந்தவித அனுமதியும் வழங்கப்படவில்லை.

கிராம அலுவலர்கள் ஊடாக இப்பிரதேசத்தில் இருக்கின்ற காணிகளின் உண்மையான காணி உரிமையாளர்கள் தொடர்பான விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன.

அனுமதிப்பத்திர பிரதிகள் சேகரிக்கப்படுகின்றன. இதன் பின்னர் வனவள திணைக்களம் வனஜீவராசிகள் திணைக்களம் என்பனவற்றுடன் கலந்துரையாடி நடவடிக்கை எடுக்கப்படும் என கரைத்துறைப்பற்று பிரதேச செயலகத்தால் தகவல் வழங்கப்பட்டுள்ளது.

இந்த உத்தியோகபூர்வ தகவல்களின் அடிப்படையில், பௌத்த விகாரை சட்டவிரோதமாக பிள்ளையார் ஆலய வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ளது வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

தற்போது அங்கு பிரம்மாண்ட புத்தர் சிலை அமைப்பதற்காக வேலைகள் வேகமாக நடைபெற்று வருகின்றது. இதை அதிகாரிகள் தடுத்து நிறுத்துவார்களா என்ற கேள்வியும் எழுந்துள்ளது. (ம-3)

## எதிர்க்கட்சி...

நான் நீண்ட நாட்களுக்குப் பயன்படுத்த மாட்டேன் என முன்னாள் ஜனாதிபதியும் எதிர்க்கட்சித் தலைவருமான மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் மூன்றாம் மாடியில் உள்ள எதிர்க்கட்சி அலுவலகத்தில் நேற்று கடமைகளை பொறுப்பேற்ற பின்னர் ஊடகவியலாளர்கள் முன்னிலையில் உரையாற்றும்போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## தேர்தலை நடத்தாதிருப்பது...

பிரியதர்ஷன யாப்பா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு தொடர்ந்து தெரிவித்த அவர், ஜனாதிபதி தேர்தலே தற்போது அவசியமானது என்றும் அனைத்து மாகாணங்களுக்குமான தேர்தலை ஒரே நாளில் நடத்த வேண்டும் எனவும் ஐக்கிய தேசிய கட்சியினர் புதிய உபதேசமொன்றை செய்து வருகின்றனர்.

ஜனாதிபதி தேர்தலுக்கும், பொதுத் தேர்தலுக்குமான காலம் தற்போது நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆனால், மாகாண சபைகளின் ஆட்சிக்காலம் நிறைவடையும் போது அம்மாகாணங்களுக்கு தேர்தல் நடத்தப்பட வேண்டும். தற்போது பல மாகாணங்களின் ஆட்சிக் காலம் நிறைவடைந்துள்ளதுடன், பல மாகாணங்களுக்கான தேர்தல் சுமார் இரண்டு வருடங்களாக நடத்தப்படாது இழுத்தடிக்கப்பட்டு வருகிறது.

நான்கு வருடங்கள் பூர்த்தியானவுடன் ஜனாதிபதி தேர்தலை நடத்துவதாயின் ஜனாதிபதியின் ஆலோசனையின் பேரிலேயே நடத்தப்பட வேண்டும். ஆனால், ஐந்தாண்டுகள் பூர்த்தியின் பின்னர் ஜனாதிபதி தேர்தலை நடத்துவது கட்டாயமானது என அரசியலமைப்பில் கூறப்பட்டுள்ளது. அதற்கமைய இவ்வருட இறுதியில் நடத்தப்பட வேண்டும்.

எனவே, இது குறித்து எவரும் குழப்பத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டியதில்லை. மாகாண சபைக்கான தேர்தலே தற்போது அவசியமாகவுள்ளது. ஆனால், இதனை தாமதப்படுத்துவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர். மாகாண சபைத் தேர்தலை நடத்தாதிருப்பதே ஐ.தே.க.வின் தந்திரமாக அமைந்துள்ளது.

இது ஜனநாயகத்தின் மீதான பாரிய தாக்குதல். ஜனநாயகத்தை பாதுகாப்பதாக மாபெரும் பிரசாரம் செய்து ஆட்சிக்கு வந்த ஐ.தே.க. தற்போது அதற்கு எதிராக செயற்பட்டு வருகிறது. எனவே இது தொடர்பாக நீதிமன்றத்திற்கு சென்று தீர்வை பெறுமாறு தேர்தல் ஆணையத்தை கோரியுள்ளோம் எனத் தெரிவித்தார். (ம-3)

## ஐ.தே.க அரசு...

தெரிவித்தார்.

நாடாளுமன்றில், நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இது தொடர்பாக அவர் மேலும் குறிப்பிடுகையில்,

அரசாங்கம் என்ற ரீதியில் நாம் எந்தவொரு செயற்பாட்டை மேற்கொள்ளவும் பின்வாங்கியதில்லை. ஆனால் எதிர்த்தரப்பு உறுப்பினர்களோ அரசாங்கத்தின் மீது குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வருகிறார்கள்.

இலஞ்ச - ஊழல் ஆணைக்குழு சுயாதீனமாகத் தான் செயற்படுகிறது என்பதை நான் இங்கு கூறிக்கொள்ள வேண்டும். அதே நேரம், வழக்கு விசாரணைகளை முன்னெடுக்கும்போது சில பின்னடைவுகள் ஏற்படுவதையும் நாம் ஒப்புக்கொள்கிறோம்.

எனினும், எந்தவொரு செயற்பாட்டையும் நாம் திட்டமிட்டு மேற்கொள்ளவில்லை. மத்திய வங்கி பிணைமுறி மோசடி அல்லது இலஞ்ச - ஊழல் விசாரணைகளில் ஏற்பட்டுள்ள தாமதம் தொடர்பில்தான் எதிரணியினர் கதைக்கிறார்கள். நாம் எதற்கும் அஞ்சப் போவதில்லை.

அனைத்துத் தரவுகளும் எம்மிடம் இருக்கின்றன. கடந்த காலத்தைப்போல அவை மாயமாகாது. சுயாதீன ஆணைக்குழுக்கள் ஊடாக அனைத்து நடவடிக்கைகளும் சுயாதீனமாக முன்னெடுக்கப்படும் என்பதில் எவரும் சந்தேகம் கொள்ளத் தேவையில்லை.

எமது அரசாங்கம் எக்காரணம் கொண்டும் பழி வாங்காது. யாருடைய தேவைக்காகவும் செயற்படாது என தலதா அத்துகோரள மேலும் குறிப்பிட்டுள்ளார்.

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய

## வருடாந்த திருவிழா ஏற்பாடுகள் தொடர்பான ஆரம்ப கட்ட கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை மற்றும் இந்திய பக்தர்கள் இணைந்து பங்கு கொள்ளும் வரலாற்று சிறப்புமிக்க இலங்கை கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்த திருவிழா ஏற்பாடுகள் தொடர்பான ஆரம்பகட்ட கலந்துரையாடல் நேற்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

2019ஆம் ஆண்டிற்கான கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழா எதிர்வரும் மார்ச் மாதம் 15 மற்றும் 16ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளது.

அதற்கான ஏற்பாடுகள் தொடர்பான முன்னாயத்த கலந்துரையாடல் நேற்று யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் மாவட்டச் செயலாளர் நாகலிங்கம் வேதநாயகன் தலைமையில் இடம்பெற்றது.

சுமார் ஐயாயிரத்திற்கு மேற்பட்ட பக்தர்கள் இலங்கை மற்றும் இந்தியாவிலிருந்து வருகை தருவார்கள் என எதிர்பார்க்கப்பட்டுள்ள நிலையில் அவர்களுக்கான சகலவகையிலான ஏற்பாடுகள் தொடர்பில் இங்கு கலந்துரையாடப்பட்டது.

கடற்போக்குவரத்து, உணவு, தங்குமிடம், சுகாதாரம் உள்ளிட்ட கச்சதீவில் மேற்கொள்ளப்படவுள்ள பல்வேறு ஏற்பாடுகள் தொடர்பில் துறைசார் அதிகாரிகள் யாழ்ப்பாண மாவட்டச் செயலாளரால் பணிக்கமர்த்தப்பட்டனர்.

யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் சுகுணரதி தெய்வேந்திரம், யாழ் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்திரு ஜெபரட்ணம் அடிகளார், கடற்படை அதிகாரிகள் பொலிஸ் உத்தியோகத்தர்கள், பிரதேச செயலாளர்கள், படகுச்சேவை உரிமையாளர்கள், தனியார் மற்றும் இலங்கை போக்குவரத்து சபையினர், உள்ளிட்ட பலர் இதில் கலந்துகொண்டனர்.

இந்தக் கலந்துரையாடல் தொடர்பில் யாழ்ப்பாண மாவட்டச் செயலர் மற்றும் யாழ் மறை மாவட்ட குரு முதல்வர் அருட்திரு ஜெபரட்ணம் அடிகளார் கருத்து தெரிவித்தனர். (ம-3,9)

## சந்தர்ப்...

தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற சபை ஒத்திவைப்புவேளை விவாதத்தில் கலந்து கொண்டிருந்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

புதிய அரசியலமைப்பை தயாரிப்பதற்கு எமக்கு கிடைத்த சிறப்பான ஒரு சந்தர்ப்பமாகவே இப்போதைய சந்தர்ப்பத்தை நாம் கருதுகிறோம். இந்தநிலையில், இதுதொடர்பில் தேவையில்லாத அச்சம் மக்களிடத்தில் பரப்பப்படுகிறது. அரசியலமைப்பின் உருவாக்கத்திற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்றே நாம் கோருகிறோம்.

மேலும், நல்லாட்சி அரசாங்கத்தின் ஊடாக நாம் ஆணைக்குழுக்களை ஸ்தாபித்துள்ளமையானது உண்மையில் சிறப்பான ஒரு செயற்பாடாகவே கருதுகிறோம். 2015 ஆம் ஆண்டுக்கு முன்னர் நாட்டில் இலஞ்ச - ஊழல் தலைத்தூக்கி இருந்தன.

அதற்குப் பின்னரும் குற்றச்செயல்கள் இடம்பெற்றாலும் 2015 ஆம் ஆண்டுக்கு முன்னர் இருந்த நிலையை விட குறைவாகவே இருந்தன. தற்போது மத்திய வங்கி பிணைமுறி மோசடி தொடர்பில் பேசப்படுகிறது. அர்ஜுன் மகேந்திரனை நாம் மறைத்து வைத்துக் கொண்டிருக்கவில்லை.

அவரை கைது செய்வதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் அரசாங்கம் முன்னெடுக்கும். இந்த மோசடியால் ஏற்பட்ட நிதியிழப்பை சமாளிக்க அரசாங்கம் தயாராகவே இருக்கிறது. ஆனால், கடந்த கால இழப்பீடுகள் தொடர்பில் இதுவரை எந்தவொரு நடவடிக்கையும் அவர்கள் எடுக்கவில்லை.

யாராக இருந்தாலும் நாம் பாரபட்சம் பாராது நடவடிக்கைகளை எடுப்போம் என்பதில் உறுதியாக இருக்கிறோம். யாரையும் பாதுகாக்க வேண்டிய தேவை எமக்கு இல்லை என அவர் மேலும் குறிப்பிட்டார். (ம-3)

## வீடொன்றி...

லாற்று படங்களை புடைப்பு சிற்பங்களாக பயன்படுத்தி உள்ளனர்.

இந்தக் காணிகள் நேற்று முன்தினம் விடுவிக்கப்பட்ட போதும் நேற்றுக் காலையே காணி உரிமையாளர்களை பார்வையிட அனுமதிக்கப்பட்டது. (ம-3,9)

## மீட்கப்பட்ட...

டார் குண்டுகள் மீட்கப்பட்டன.

தனியார் ஒருவருக்குச் சொந்தமான காணியிலேயே மேற்படி மோட்டார் குண்டுகள் காணப்பட்டன.

இந்நிலையில் குறித்த கிணற்றில் காணப்பட்ட 81mm மோட்டார் குண்டுகள் 47 ம் 13.5 கிலோ கிராமுடைய 3 அமுக்க வெடிகளும் சிறப்பு அதிரடி படையினரால் மீட்கப்பட்டு அம்பன் கிழக்கு கொட்டோடை கடற்கரையில் வெடிக்க வைத்து நேற்று அழிக்கப்பட்டுள்ளன.

குறித்த வெடிகுண்டுகள் பல வருடங்கள் பழமை வாய்ந்தவையென தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-9,60,101)

### மஹஜன சம்பத

திகதி 2019/01/22

சீட்டிழுப்பு இலக்கம் 3839

ஆங்கில எழுத்து: U — வெல்லப்பட்ட இலக்கங்கள்: 3 3 3 0 1 6

தேசிய லொத்தர் சபை

### கொவிசெத

திகதி 2019.01.22

சீட்டிழுப்பு இலக்கம் 2012

ஆங்கில எழுத்து: J — வெல்லப்பட்ட இலக்கங்கள்: 03 27 42 47

தேசிய லொத்தர் சபை

### நீரோகா

திகதி 2019/01/22

சீட்டிழுப்பு இலக்கம் 502

லக்கினம்: துலாம் — வெற்றி இலக்கங்கள்: 31 39 42 68 — 38

தேசிய லொத்தர் சபை

### செவன

திகதி 2019/01/22

சீட்டிழுப்பு இலக்கம் 155

ஆங்கில எழுத்து: Z — வெல்லப்பட்ட இலக்கங்கள்: 10 41 49 62

தேசிய லொத்தர் சபை

## பதவி வெற்றிடங்கள்

புதிய வேலை நியமனங்கள், கவர்ச்சிகரமான சம்பளத்துடன்...

DNMC நிறுவனத்திற்கு வடக்கில் மேலும் பல புதிய கிளைகளுக்கு இளைஞர், யுவதிகள் தேவைப்படுகின்றனர். நீங்கள் O/L, A/L படித்தவராயின் இன்றே அழையுங்கள்.

- அனுபவம் இல்லாதவரும் இணைந்து கொள்ளலாம்
- வயதெல்லை 18 - 32
- வெளிமாவட்டத்தினருக்கும் முன்னுரிமை வழங்கப்படும்
- தங்குமிட வசதிகள் உண்டு

தொடர்புகளுக்கு : 0766781042 / 0215679002

(C-5245)

## உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர் (Administration Officer) பதவிக்கு விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன

விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

வயது :-18-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலரும்)
A/L படித்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்

சம்பளம் - 15000/-

V2 TRAVELS

16/1, மாநகரசபைக் கட்டடம் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

0768226243

v2vacancies@gmail.com

(C-5172)

## தொழிற்பயிற்சியுடன் கூடிய வேலைவாய்ப்பு

எமது EDM நிறுவனமானது இறக்குமதி மற்றும் மொத்த விற்பனையில் முன்னிலை வகித்து வருகின்றது. எமது நிறுவனமானது மேலதிகமாக வடமாகாணத்தில் 12ற்கு மேற்பட்ட புதிய கிளைகளிற்கு 21 பதவி வெற்றிடங்களை பூர்த்தி செய்யவுள்ளது.

**பதவி**

விற்பனைப் பிரதிநிதி, மேற்பார்வையாளர், உதவி முகாமையாளர், முகாமையாளர், அலுவலகர்.

**தகமை**

O/L, A/L மேற்தகமையுடையோர் நேர்முகத் தேர்வினூடாக தெரிவு செய்யப்படுவர். தொடர்பு : 0770621631, 0765233519

(7244)


## மின்சா...

குப்பட்ட நட்டாங்கண்டல் கிராமத்திலுள்ள வீடொன்றில் இருந்து இன்னொரு வீட்டுக்கு பாதுகாப்பற்ற முறையில் பெறப்பட்ட மின்சாரத்தில் சிக்குண்டு குறித்த சிறுவன் உயிரிழந்துள்ளார். இவ்வாறு உயிரிழந்த சிறுவன் நட்டாங்கண்டல் பகுதியைச் சேர்ந்த 4 வயதுடைய சுந்தரமூர்த்தி நிச்சயன் என அடையாளம் கானப்பட்டுள்ளது.

இவ்வாறு குறித்த சிறுவன் மின்சாரம் தாக்கி ஆபத்தான நிலையில் வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி வைத்திய சாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் குறித்த சிறுவன் உயிரிழந்துள்ளார்.

இவ்விபத்து தொடர்பான விசாரணைகளை மல்லாவி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-3)

## முன்னா...

தண்டனை விதித்து நேற்று தீர்ப்பளித்தது.

சூரியகாந்தன் ஜெயச்சந்திரன் எனப்படும் உதயன் அல்லது ஐயன் மற்றும் சிவப்பிரகாசன் சிவசீலன் எனப்படும் இளையன் ஆகிய இரு முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்களுக்கே கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

வடமத்திய மாகாண நீதிமன்ற நீதிபதி மகேஸ் வீரமன் இந்த உத்தரவினை பிறப்பித்துள்ளார்.

குறித்த வழக்குடன் தொடர்புடைய பிரதிவாதிகள் இருவருக்கும் எதிராக சட்ட மா அதிபரினால் அநுராதபுரம் உயர் நீதிமன்றத்தில் வெவ்வேறாக தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பத்திரிகைகளில், 5 குற்றச்சாட்டுகளில் குற்றவாளிகள் என இனங்காணப்பட்டதைத் தொடர்ந்து இந்த தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம், ஒரு குற்றத்திற்கு ஐந்து வருடங்கள் என்ற அடிப்படையில் ஐந்து குற்றச்சாட்டுகளுக்கும் 5 வருடங்களில் கழிந்து செல்லும் வகையில் 25 வருட கடூழிய சிறைத்தண்டனையை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது. பிரதிவாதிகளுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட 6,7,8 மற்றும் 9 ஆவது குற்றப்பத்திரிகைகள் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டதுடன் அந் நான்கு குற்றச்சாட்டுக்களிலிருந்தும் பிரதிவாதிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கை இராணுவப் படையின் கஜபா ரெஜிமென்ட் படைப் பிரிவின் கட்டளை அதிகாரி கேர்ணல் ஜயந்த சுரவீர உள்ளிட்ட 8 இராணுவத்தினர் வில்பத்து தேசிய வனப் பகுதியில் வைத்து 2007 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 9 ஆம் திகதி சுட்டுக் கொலை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## ஹெரோ...

சிறைத் தண்டனை விதிக்கப்படுகிறது. நால்வரும் 10 ஆயிரம் ரூபாய் தண்டப் பணத்தைச் செலுத்த வேண்டும். நால்வரும் இள வயதினர்களாக உள்ளனர். அவர்களின் எதிர்காலம் மற்றும் குடும்பப் பின்னணி என்பவற்றை மன்று கவனத்தில் எடுக்கிறது. அதனால் நால்வருக்கும் விதிக்கப்பட்ட சிறைத் தண்டனை 10 ஆண்டுகளுக்கு ஒத்திவைக்கப்படுகிறது. ஒத்திவைக்கப்பட்ட 10 ஆண்டுகள் காலப்பகுதியில் அவர்கள் மீளவும் குற்றச்செயலில் ஈடுபட்டால் 3 மாதங்கள் கடூழியச் சிறைத் தண்டனையை அனுபவிக்க வேண்டும் என்று நீதவான் ஏ.எஸ்.பி.போல் தண்டனைத் தீர்ப் பளித்தார்.

யாழ்ப்பாணம் நீதிமன்ற எல்லைக்குள் உயிர்க்கொல்லி ஹெரோயின் போதைப் பொருளை உடைமையில் வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் வெவ்வெறு சம்பவங்களில் 22 வயதுக்குட்பட்ட நான்கு இளைஞர்கள் பொலிஸாரால் கடந்த ஆண்டு கைது செய்யப்பட்டனர்.

நால்வருக்கும் எதிராக தனித்தனி வழக்குகள் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் இடம்பெற்று வந்தது.

இந்த வழக்குகள் நேற்று விசாரணைக்கு வந்த போது, நால்வரும் குற்றத்தை ஏற்றுக்கொண்டனர் (ம-3)

## தொழில்...

ஊழல் மோசடி ஆணைக் குழுக்களின் விசாரணைகளும் அறிக்கைகளும் இழுத்தடிக்கப்பட்டு வருகின்றன எனவும் அவர் சுட்டிக் காட்டினார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற விசாரணை ஆணைக்குழுக்கள் திருத்தச் சட்டமூலம் தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். (ம-3)


## புதிய பிரிவுகள் ஆரம்பம் 2019 யூலை பரீட்சைக்கான

**aat (Sri Lanka)**

(AA1, AA2, AA3)

Qualification :- G.C.E. O/L 6 Passes Medium - Tamil & English Note :- 2018 ஆம் ஆண்டு G.C.E. O/L பரீட்சை எடுத்த மாணவர்களும் இணைந்து கொள்ளலாம். முற்பதிவுகளை மேற்கொள்ளவும்.

FIT (Foundation in information Technology) - 6 months

- Minimum qualification passed GCE O/L (Pre degree Course Leads to BIT)

Certification offered by University of Colombo School of Computing (UCSC), Sri Lanka.

ஆரம்பம் :- 02.02.2019 8.00 am

(C-5218)

Jaffna College Undergraduate Dept.
464, Hospital Road,
Jaffna.
0212223382 / 0212229149

## புதிய உதயம்



1500/= பங்கு நிறை 1 Kg

சுகாதார முறைப்படி சுத்தமான ஆட்டிறைச்சியினை பெற்றுக் கொள்ளலாம்.

HALAL கலால் முறைப்படி பண்ணை பொதுச்சந்தையில் தனி ஆட்டுக்கிடாய் இறைச்சிக்கடை மற்றும் பங்கு விற்பனை

OPEN 26.01.2019

உரிமையாளர் : இன்பாஸ்
தொடர்புகளுக்கு : 0767938481

(7242)

## ALLIANCE FRANÇAISE DE JAFFNA-

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி

- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
- அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம். www.ambafrance-lk.org

021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்

## FLC FRENCH LANGUAGE CENTRE

பிரெஞ்சு

Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட DELF A1,A2,B1,B2.
V. ஜெகன் (Trained in France- 2007)

40, பலாலி வீதி, ஆரியகுளம். 0779 789 456 / 021 221 7781 ஆரம்பம் : 26.01.19 சனி 10 மணி

181, பிரதான வீதி, நெல்லியடி. 0779 789 456 / 0762 669 614 ஆரம்பம் : 28.01.19 3.30pm

திருமணமாகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1
IELTS, SPOKEN ENGLISH & இத்தாலி மொழி வகுப்புக்கள்.

(C-5186)

## உடனடி வேலைவாய்ப்பு
## அலுவலக உதவியாளர் (பெண்)

வயதெல்லை : 25 ற்கு மேல்
தகுதி : நடைமுறை ஆங்கில அனுபவம்
நடைமுறை கணனி அனுபவம்
வேலை நேரம் : காலை 8.00 மணிமுதல் மாலை 5.00 மணி வரை
சம்பளம் : LR 15,000/=

நேர்முகத் தேர்வுக்கு சமுகமளிக்க வேண்டிய முகவரி

Airtec Weighing machines
No. 58, Sir.Ponnampalam Ramanathan Road,
(Near Rajah Cream House)
Jaffna.
நேரம் : 8.00 Am - 6.00 Pm
சுகுமாறன் : 071 762 2719, 021 221 6092

(7232)

## விரைவு பொதிகள் சேவை
## விசேட விலை குறைப்பு

| | |
|---|---|
| UK - 550 | */=Kg |
| கனடா - 900 | */=Kg |
| ஜேர்மனி - 700 | */=Kg |
| நெதர்லாந்து - 700 | */=Kg |

DELIVERY IN 3 - 5 DAYS

0768226240

V2 TRAVELS

- மானிப்பாய்
- யாழ்ப்பாணம்
- கிளிநொச்சி
- சாவகச்சேரி
- நெல்லியடி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை

(C-5187)

## வாடகைக்கு

நல்லூர் ஆலயத்திற்கு அண்மையில் 2 அறைவீடு (A/C) தளபாட வசதியுடன், குசினி சில்வர் பாத்திரங்கள், GAS, Hotwater உடன் நாள் / கிழமை வாடகைக்குண்டு, வெளிநாட்டிலிருந்து வருபவர்களிற்கு ஏற்றது.

தொடர்பு : 070 586 8900

(7240)


## 31ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நினைவஞ்சலியும்

தோற்றம் : 20.04.1981



மறைவு : 26.12.2018

அமரர்

## ஈஸ்வரன் சுதாகரன்

இறுதிவரை உம் நிழலில் நாம் இருப்போம் என்றிருந்தோம்
இவ்வுலகில் நிழலின்றி எம்மை நீர் தவிக்கவிட்டு சென்றதேனோ!

25.01.2019ஆம் திகதி வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொண்டு அமரரின் ஆத்மசாந்திக்காய் பிரார்த்திக்கும்படி அன்புடன் வேண்டுகின்றோம்.

-குடும்பத்தினர்

இல.25 சிவன் கோவில் வீதி,
சாவகச்சேரி.

(C-5242)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.01.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.